Registered as a News Paper in Sri lanka

விலை : ரூபா 10 .00

தினப்பதிப்பு

# தினமுரசு

THINAMURASU

முரசு - 04 திருவள்ளுவர் ஆண்டு 2045 தை 14 திங்கட்கிழமை (27.01.2014) பக்கங்கள் 20 ஓசை - 118

அற்புதன் அச்சகம்

அனைத்து விதமான Printing வேலைகளையும் உயர்தரத்துடனும் குறைந்த செலவுடனும் குறித்த நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

T.P:- 021 222 3628
Fax:- 021 222 1811

373, பிரதான வீதி,
பஸ்ரியன் சந்தி,
யாழ்ப்பாணம்.

## பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதற்கு அனுமதி?

(கொழும்பு)

பால்மாக்களின் விலைகளை அடுத்த மாத தொடக்கத்திலிருந்து அதிகரிப்பதற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்துள்ளதாக பால்மா கம்பனிகள் தெரிவித்துள்ளன.

அடுத்த மாதத் தொடக்கத்திலிருந்து பால்மாக்களின் விலைகளை அதிகரிப்பதற்கு அரசாங்கம் உறுதியளித்துள்ள போதிலும் எழுத்து மூலமான எவ்வித ஆவணத்தையும் வழங்கவில்லை. விலை அதிகரிப்பின்படி 400 கிராம் பால்மா 100 ரூபாவினாலும் ஒரு கிலோ கிராம் பால்மா 250 ரூபாவினாலும் அதிகரிக்கப்படவுள்ளது.

இதன்படி தற்போது 325 ரூபாவாக உள்ள 400

(19) பக்கம் பார்க்க...

## இரண்டு அறிக்கைகளை சமர்ப்பிப்பார் நவிப்பிள்ளை




ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் ஆணையாளர் நவநீதம்பிள்ளை, இலங்கை தொடர்பில் இரண்டு அறிக்கைகளை சமர்ப்பிக்க உள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 25 ஆவது அமர்வுகளிலும், ஆணையாளரின் ஆண்டறிக்கையிலும் இலங்கை விவகாரம் பற்றி குறிப்பிடப்படவுள்ளது.

அமர்வுகளில் இலங்கை குறித்த அறிக்கை ஒன்றை எதிர் வரும் மார்ச் மாதம் 26 ஆம் திகதி நவிப்பிள்ளை சமர்ப்பிப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. இதற்கு மேலதிகமாக ஆணையாளரின் வருடாந்த அறிக்கையிலும் இலங்கை மனித உரிமை நிலைமைகள் குறித்து அறிவிப்பார் எனக் குறிப்பிடப்படுகிறது.

(19) பக்கம் பார்க்க...

# வடமாகாண பிரதம செயலரை காரணமின்றி மாற்ற முடியாது

## நிர்வாக சேவைச் சங்கத் தலைவர் தெரிவிப்பு



(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பிரதம செயலாளரை தகுந்த காரணம் இன்றி இடமாற்றம் செய்ய வேண்டும் என்று மாகாண முதலமைச்சர் கோரிக்கை விடுத்திருப்பது எந்த விதத்திலும் நியாயமற்றது என்று இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கத்தின் தலைவரும் கொழும்பு மாவட்ட அரசாங்க அதிபரும், மூத்த நிர்வாக அதிகாரியுமான கமால் பத்மசிறி தெரிவித்தார்.

இலங்கை நிர்வாக சேவையின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வடமாகாண இலங்கை நிர்வாக சேவை அதிகாரிகள் சங்கம் ஏற்பாடு செய்த விசேட கருத்தரங்கு ஒன்று நேற்று யாழ்.செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இக் கருத்தரங்குக்கு தலைமை தாங்கி உரை நிகழ்த்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

காலை 10.00 மணியளவில் ஆரம்பமாகிய இக்கருத்தரங்கு வடக்கில் பணியாற்றும் நிர்வாக சேவை அதிகாரிகளின் திறன்களை மேலும் விருத்தி செய்யும் முகமாகவும் அவர்கள் எதிர் நோக்கும் சவால்கள் மற்றும்

(19) பக்கம் பார்க்க...

## வடக்கு மாகாண சபைக்கு தடை போடுகிறது அரசு

### குற்றஞ்சாட்டுகிறார் சம்பந்தன்

வடக்கு மாகாணசபையை முறையாக இயங்க வைப்பது அரசாங்கத்தின் நோக்கமல்ல என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் திருகோணமலையில் நேற்றையதினம் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தின் பின்னர்

(19) பக்கம் பார்க்க...

## வீட்டுச் சுவர் வீழ்ந்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

(வடமராட்சி)

கட்டியிருந்த வீட்டை இடித்தபோது சுவர் இடிந்து வீழ்ந்ததில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் நேற்றுக்காலை 9.30 மணியளவில் வெற்றிலைக்கேணி முள்ளியான் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

பாக்கியநாதன் சிவசிதம்பரம் (வயது-37) என்ற ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

சம்பவம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

கட்டியிருந்த வீட்டின் சுவர்களை நான்கு பேரின் உதவியுடன் பிரஸ்தாப குடும்பஸ்தர் இடித்தவேளை திடீரென இடி

(19) பக்கம் பார்க்க...

தவறான



06

தெரியும்



18

## காணாமற்போனோர் முறையீடு; சட்டமா அதிபரிடம் ஆலோசனை

காணாமற் போனவர்கள் தொடர்பான விசாரணைகளின்போது கிடைத்த முறைப்பாடுகள் குறித்து மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கை தொடர்பில் சட்டமா அதிபர் திணைக்களத்தின் ஆலோசனைகளை பெற்றுக்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.


காணாமற்போனவர்கள் தொடர்பில் கிடைத்த 150 முறைப்பாடுகள் மீதான முதற்கட்ட விசாரணை கிளிநொச்சி மாவட்டத்தில் முன்னெடுக்கப்பட்டதாக காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ.குணதாஸ தெரிவித்துள்ளார்.

இதில் தொடர்ச்சியாக விசாரணைகளை மேற்கொள்ள வேண்டிய முறைப்பாடுகளை சட்டமாஅதிபரின் கவனத்திற்கு கொண்டுவர நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

(19) பக்கம் பார்க்க...

## இந்திய அபிவிருத்திப் பணிகள் வடமாகாணத்தில் தொடரும்

### குடியரசு தின நிகழ்வில் துணைத்தூதுவர் மகாலிங்கம்




வடமாகாணத்தில் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டங்களை இந்திய அரசு மேற்கொண்டுள்ளது. அதிலும் குறிப்பாக வட பகுதிக்கான புகையிரதப் பாதைப் பணிகள், இந்திய வீட்டுத்திட்டம், வவுனியா வைத்தியசாலைப் பணிகள் என்பவற்றை குறிப்பிடலாம் என யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணை தூதரகத்தின் துணைத் தூதுவர் வே.மகாலிங்கம் நேற்றுத் தெரிவித்தார்.

இந்தியாவின் 65ஆவது குடியரசு தின நிகழ்வுகள் யாழ். மருதடி வீதியில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரக அலுவலகத்தில் நேற்றுக் காலை நடைபெற்றது. இதன் போது உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த துணைத்தூதுவர் வடபகுதிக்கான புகையிரதப் பாதைப்

(19) பக்கம் பார்க்க...

## உள்விவகாரங்களில் தலையிட இராஜதந்திரிகள் முயற்சி

### பாதுகாப்புச் செயலர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையின் உள் விவகாரங்களில் தலையிட சில இராஜதந்திரிகள் முயற்சி செய்து வருவதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ குற்றம் சுமத்தியுள்ளார். இது தொடர்பாக அவர் தெரிவித்துள்ளதாவது,

போர் நிறைவுக்கு வந்து ஐந்து வருடங்கள் நிறைவு பெற்ற நிலையில் இலங்கையில் பாரிய முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ள இவ்வேளையில் சில சர்வதேச நாடுகள் தமது ஒரு தலைப்பட்ச நிகழ்ச்சி நிரலை இலங்கையில் திணிக்க முயற்சித்து வருகின்றன.

இலங்கையிலுள்ள பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எவராவது அர்த்த புஷ்டியுடன் விரும்பினால் அவர்கள் அரசாங்கத்துடன் இணைந்து செயற்பட வேண்டும். பதிலாக அவர்கள் இலங்கையின் உள்நாட்டு விடயத்தில் தலையிடுகின்றனர்.

(19) பக்கம் பார்க்க...

## அமிர்தலிங்கம் கொலைக்கு காரணகர்த்தா யார்?

5 ஆம் பக்கத்தில்

# மானிய பசளை விநியோகம் நிறுத்தம்
# வவுனியாவில் விவசாயிகள் பாதிப்பு

வவுனியா பம்பைமடு கமநலசேவைகள் நிலையத்தில் மானிய முறையில் வழங்கப்படும் பசளையை பெறுவதில் ஏற்பட்ட சிக்கலால் விவசாயிகள் பெரும் சிரமங்களுக்கு உளளாவதாக தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் மருக்காரம் பளை கமக்காரர் அமைப்பின் கீழ் விவசாயத்தை மேற்கொள்ளும் விவசாயிகள் கருத்துத் தெரிவிக்கையில்,

மகிந்த சிந்தனையில் விவசாயிகளின் மேம்பாடு கருதி மானிய முறையில் பசளைகள், பயிர்ச் செய்கை காலத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தநிலையில் கடந்த 2013 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதிப் பகுதியில் பம்பைமடு கமநல சேவைகள் திணைக்களத்தினால் பசளை விநியோகம் மேற்கொள்ளப்பட்டது.

இக் காலப்பகுதியில் மழையின்றி கடும் வறட்சி ஏற்பட்டமையினால் பயிர்ச் செய்கையை விவசாயிகள் கைவிடும் நிலையில் இருந்தனர்.

எனினும் சில விவசாயிகள் மானிய பசளை என்ற காரணத்தினால் கமக்காரர் அமைப்புக்கு செலுத்த வேண்டிய வரிப்பணம் உட்பட மேலதிக பணங்களை செலுத்தி .பசளையை பெற்றிருந்தனர்.

இந்தநிலையில் அதிகளவான விவசாயிகள் பசளையை பெறுவதில் பயன் இல்லை என்பதனால் சிரத்தை காட்டாததுடன் மழை பெய்தால் பசளையை பெறுவதெனவும் காத்திருந்தனர்.

இவ் வகையில் 'இம்மாத ஆரம்பத்தில் மழை பெய்து வந்தமையினால் எஞ்சியுள்ள பயிர்களை காப்பாற்றிக்கொள்ளும் பொருட்டு பசளையை பெறுவதற்காக விவசாயிகள் கமக்காரர் அமைப்புகளுக்கு செலுத்த வேண்டிய பெருந் தொகைப் பணத்தை செலுத்திய பின்னர், கமநல சேவைகள் நிலையத்தை நாடிய நிலையில் பசளை வழங்க முடியாது எனவும் கால எல்லை முடிவடைந்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

இதேவேளை பசளையை பெறுவதற்கான முடிவு திகதி அறிவிக்கப்படாததுடன் விநியோகம் நிறுத்தப்பட்டமையினால் பசளையை பெறாதவர்கள் நட்டஈட்டையும் பெற முடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் விசனம் தெரிவித்தனர்.

# வியாபார இழுபறி நிலை நேற்றும் தொடர்ந்தது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின் கீழுள்ள பொதுச்சந்தையில் இடம்பெற்றுவரும் வியாபார நடவடிக்கை தொடர்பான இழுபறி நிலை நேற்றும் தொடர்ந்தது.

இச்சந்தையில் மரக்கறி வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகளை மேல் தளத்தில் வியாபாரத்தை மேற்கொள்ளுமாறு நகரசபையினால் அறிவுறுத்தப்பட்ட நிலையில், வியாபாரிகள் மேல் தளத்திற்கு செல்லமுடியாது கீழ் தளத்திலேயே வியாபாரத்தை மேற்கொள்வோம் என கூறிவருவதுடன் கீழ் தளத்திலேயே வியாபாரத்தையும் மேற்கொண்டு வந்தனர்.

இதேவேளை பருத்தித்துறை பொலிஸார் இது தொடர்பாக வியாபாரிகளிடம் கீழ்த்தளத்தில் வியாபரத்தை மேற்கொள்ள வேண்டாம் என நேற்று முன்தினம் தெரிவித்திருந்ததாகவும், வியாபாரிகள் அதனை ஏற்றுக்கொள்ளாது கீழ்த்தளத்திலேயே வியாபாரத்தை மேற்கொண்டதாகவும், இதனைப் பொலிஸார் தடுக்காது சென்ற தாகவும் தெரிவிக்கப்படுகிறது.

எனினும் இச்சந்தையில் வியாபாரத்தை மேற்கொள்ளும் வியாபாரிகள் தாம் மேல்தளத்திற்கு சென்றால் வியாபாரம் பாதிக்கப்படுவதாகவும், அத்துடன் பொருட்களை கொண்டுசெல்லமுடியாத நிலை காணப்படுவதாகவும் தெரிவித்தனர். (109)

# காட்டு யானைகள் அட்டகாசம்; அச்சத்தில் மக்கள்

(வவுனியா)

வவுனியா - நெடுங்கேணி கற்குளம் பகுதியில் காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதாகவும் இதனால் ஒவ்வொரு இரவுகளையும் அச்சத்துடன் கழிக்கவேண்டியிருப்பதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேசத்திற்குட்பட்ட கற்குளம் பட்டிக்குடியிருப்பு மருதோடை, மாறாயிலுப்பை, குளவிசுட்டான், மாமடு ஆகிய கிராமங்களில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதாகவும் இதனால் தாங்கள் அச்சத்துடன் ஒவ்வொரு இரவுகளையும் கழிக்க வேண்டியிருப்பதாகவும் இப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை இரவுவேளை கற்குளம் கிராமத்திற்குள் புகுந்து காட்டு யானைகள் பயன் தரும் மரங்களையும் பயிர்களையும் அழித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தோட்டங்களை சேதப்படுத்தும் கட்டாக்காலி நாய்கள்

(அச்சுவேலி)

ஆவரங்கால், புத்தூர் போன்ற பகுதிகளில் கட்டாக்காலி நாய்களின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக இவை வீதியோரங்களிலும் மற்றும் தோட்ட நிலங்களிலும் கூட்டமாக ஓடித் திரிவதனால் போக்குவரத்துக்கு இடையூறு விளைவிப்பதனை அவதானிக்க முடிகின்றது.

அத்துடன் செய்கை பண்ணப்பட்ட வயல் நிலங்களையும் இவை சேதப்படுத்தியும் வருகின்றன. இதனால் பயிர்கள் அழிவடையும் நிலை காணப்படுவதுடன், விவசாயிகள் நட்டத்தையும் எதிர்நோக்கவேண்டி ஏற்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

எனவே கட்டாக்காலி நாய்களினை கட்டுப்படுத்துவதற்கான வழிகளை உரிய தரப்பினர் முன்னெடுக்கவேண்டும் எனக்கோரப்பட்டுள்ளது. (85)

# மகாஜனவுக்கு புதிய அதிபர்

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் புதிய அதிபராக ம.மணிசேகரன் இன்று முதல் தனது கடமையைப் பொறுப்பேற்கின்றார்.

இன்று காலை 9 மணியளவில் அவர் மேற்படி கல்லூரி அலுவலகத்தில் தனது கடமைப்பொறுப்பை உத்தியோகபூர்வமாக ஏற்றுக்கொள்ளவுள்ளார். (93)

# பரிசளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

ஈவினை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் 2013 ஆம் ஆண்டுக்கான பரிசளிப்பு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு பாடசாலை அதிபர் செ.பரமேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் இப்பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவி கௌரவிக்கப்படவுள்ளார்.

# சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக கருத்துரைகள்

(யாழ்.நிருபர்)

இலங்கை சின்மயா மிஷன் நடத்தும் ஆன்மீக கருத்துரை நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை முதல் மாசி மாதம் 2 ஆம் திகதி வரை வெள்ளவத்தை இராமகிருஷ்ணமிஷன் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிமுதல் 8 மணிவரை நடைபெறும்.

இந்நிகழ்வில் இந்தியாவில் இருந்து வருகை தந்துள்ள சுவாமி கிஷ்ணாத்மானந்தா 'பயிற்சியும் முயற்சியும்' என்னும் பொருள் பற்றி பகவத்கீதை கூறும் கர்மயோகம் தொடர்பான கருத்துரைகளை வழங்குவார்.

ஆர்வலர்கள் அனைவரையும் கலந்துகொண்டு சுவாமிகளின் அருளுரைகளைக் கேட்டுப் பயன்பெறுமாறு இலங்கை சின்மயா மிஷன் அறிவித்துள்ளது. (10)


## சிறுவிளம்பரம்

### காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் வேம்படிச் சந்திக்கும் காப்புறுதிக்கூட்டுத்தாபனத்துக்கும் அருகாமையில் கிழக்கு வீதியோடு சேர்ந்த ஒன்றரை பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு - 077 188 0017 (C/3402)


# பகற்களவில் ஈடுபட்ட நபர் கையும் மெய்யுமாக பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனாவைத்தியசாலையில் பகற்களவில் ஈடுபட்ட நபர் ஒருவர் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை மதியம் பார்வையாளர் நேரத்தின் போது வைத்தியசாலை வெளிவாயிலில் நோயாளர்களைப் பார்ப்பதற்காக காத்திருந்த ஒருவரின் கைப்பையை அபகரித்த ஒருவரே அங்கு நின்றவர்களால் கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டுள்ளார்.

உடனடியாக யாழ்.பொலிஸாருக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டதுடன் சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸாரினால் குறித்த நபரிடம் இருந்து கைப்பையும் கைப்பற்றப்பட்டது.

பொலிஸ் நிலையத்தில் பாதிக்கப்பட்ட நபரினால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், கைது செய்யப்பட்ட நபரிடம் விசாரணைகள் நடைபெற்று வருகின்றது. குறித்த நபர் யாழ்ப்பாணம் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, குறித்த நபர் ஓட்டுமடத்தைச் சேர்ந்தவர் என்றும் பல தடவைகள் வைத்தியசாலையில் இவர் களவில் ஈடுபட்டு பிடிபட்டுள்ளார் என்றும் வைத்தியசாலை பாதுகாப்பு ஊழியர்கள் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (48)


## சனிக்கிழமை அதிர்ஷ்டம்

உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு இல. 2499 திகதி 25-01-2014

ஆங்கில எழுத்து: V

வெற்றி எண்கள்: 01 12 16 70

போனஸ் இல: 49

ஜக்பொட் பரிசு ரூ.12,340,825/-வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் தொகை | பரிசுத் தொகை | மொத்த பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 1 இல | 226675 | 20/- | 4,533,500/- |
| 2 இல | 16136 | 100/- | 1,613,600/- |
| 3 இல | 330 | 1,000/- | 330,000/- |
| 4 இல | 02 | 1,000,000/- | 2,000,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் | 9033 | 40/- | 361,320/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் | 654 | 1,000/- | 654,000/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் | 13 | 10,000/- | 130,000/- |
| 4 இல + ஆங்கில எழுத்திற்கும் | - | 12,340,825 | |
| 1 இல + போனஸ் இல | 10821 | 100/- | 1,082,100/- |
| 2 இல + போனஸ் இல | 511 | 500/- | 255,500/- |
| 3 இல + போனஸ் இல | 05 | 100,000/- | 500,000/- |
| 1 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 429 | 200/- | 85,800/- |
| 2 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | 21 | 1,500/- | 31,500/- |
| 3 இல + ஆங்கில எழுத்திற்கும் + போனஸ் இல | - | 150,000 | - |
| வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை | 264630 | | 11,577,320/- |

ஊதா நிற டிக்கட்டுகள் 2014 ஜனவரி 29 ஆம் திகதி புதன்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும்.

வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

இந்த புதன்கிழமை சுப்பர் ஜக்பொட் பரிசு ரூ. 12,958,825/-

அபிவிருத்தி லொத்தர் சபை

தொ.பே: 2333546/7

(C/3266)


## கண்ணீர் அஞ்சலி



### கறுப்பையா துரைராசா

ஈழ மக்கள் ஜனநாயகக்கட்சியின் யாழ். நகர அமைப்பாளரும், யாழ்.மாநகரசபை உறுப்பினருமான து.இளங்கோ (றீகன்) வின் தந்தையார் கறுப்பையா துரைராசா அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தோழர்கள்

ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

(இ)

## கூட்டம்

வேலணை துறையூர் ஐயனார் விளையாட்டுக்கழக பொதுக்கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை 3 மணிக்கு ஐயனார் சனசமூக முன்றலில் நடைபெறவுள்ளது. (21)

# யாழ்.பல்கலைக்கழகத்தில் தனியாக இந்துபீடம் அமைக்கப்படவேண்டும்

## வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை



(மானிப்பாய்)

எமது தமிழ் பண்பாடுசார் விழுமியங்கள் சடங்கு முறைகள் பின்பற்றப்படுவது தற்போது குறைவடைந்து செல்கின்றது. இது கவலையளிப்பதாகவுள்ளது. இப்பண்பாடு சார் விழுமியங்களை பேணும்வகையில் யாழ்.பல்கலைக்கழகத்தில் இந்துபீடம் ஒன்று தனியாக அமைக்கப்படவேண்டும் என யாழ்.பல்கலைக்கழக வாழ்நாள் பேராசியர் பொ.பால சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இந்து கலாசார திண்ணைக் களம், யாழ்.பிரதேச செயலகம் மற்றும் ஆனைப்பந்தி குருகுலம் இணைந்து நடாத்திய பொங்கல் நிகழ்வு நேற்று முன்தினம் காலை 9.30 மணிக்கு இந்து கலாசார திணைக்களத்தில் நடைபெற்றது.

யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பிரதம விருநதினர் தனது உரையில், நன்றியை அடையாளமாக கொண்டே எல்லோராலும் தைப்பொங்கல் கொண்டாடப்படுகிறது. தமிழர்கள் தமது கலாசாரம் பாரம்பாரியத்தை இனிவரும் சந்ததிகள் பேணவழிவகுக்க வேண்டும்.

1953ஆண்டு 25 வீதமாக இருந்த இந்துக்கள் தற்போது 12 வீதமாக குறைவடைந்துள்ளது.

இதற்கு மக்கள் வெளிநாடு சென்றமை மற்றும் வேறு மத பிரச்சாரத்தினால் மத மாற்றம் ஆகி யன இதற்கு முக்கிய காரணங்களாக அமைகின்றன.

எனினும் எமது தமிழ் பண்பாடுசார் விழுமியங்களை பேணிப்பாதுகாக்கும் வகையில் யாழ்.பல்கலைக் கழகத்திற்கு இந்துபீடம் ஒன்றை தனியாக அமைக்கவேண்டும் இதற்கு யாழ்.மதகுருமார்கள் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என தெரிவித்தார்.

இந் நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கிராம அலுவலர் நா.சுந்தரராஜா கலந்து கொண்டார்.

தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவர்களின் இசை நடனம் ஆகியனவும் ஆசிரிய ஆலோசகர் ரா.ஈஸ்வரனின் சிறப்பு சொற்பொழிவும் இடம் பெற்றது. (48)

# இந்துமயானவீதி புனரமைப்பு எப்போது?

(அச்சுவேலி)

தம்பாலை இந்துமயானத்திற்குச் செல்லும் வீதியானது புனரமைக்கப்படாத நிலையில் வீதியின் நடுப்பகுதிகளில் படர்கற்களுடன் காணப்படுவதாக் இந்த வீதியால் பயணத்தை மேற்கொள்ளும் பல்வேறு தரப்பினராலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த வீதியினை அண்டிய பகுதியில் குடியிருப்புக்கள் காணப்படுவதால் அவர்களும் மற்றும் விவசாய செய்கையினை மேற்கொள்வோரும் தகனக்கிரியைகளை மேற்கொள்ளச் செல்வோர்வரும் வீதியினைப்பயன்படுத்துவதில் பல்வேறு அசௌகரியங்களை தாம் எதிர்நோக்கி வருவதாகவும் தெரிவிக்கின்றனர்.

எனவே இந்த வீதியினை புனரமைக்குமாறு பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்திருந்த நிலையிலும் இது தொடர்பாக உரியதரப்பினர் நடவடிக்கை மேற்கொண்டதாகத் தெரியவில்லை எனத் தெரிவிக்கும் பயணிகள் இந்த வருடத்திலாவது இந்த வீதியினை திருத்தி பயணிகளின் சுலபமான போக்குவரத்திற்கு வழிவகை செய்யுமாறு பயணிகள் கோரிக்கை விடுக்கின்றனர். (85)

# பொதுச்சபைக் கூட்டம்

(...னைக்கோட்டை)

மானிப்பாய் கோவி பட்டு பல.நோ.கூட்டுறவு சங்கத்தின் வருடாந்த பொதுச்சபைக் கூட்டம் எதிர்வரும் 2ஆம் திகதி மு.ப. 10.30 மணிக்கு சங்க மண்டபத்தில் க.திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் 2012 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வு சமர்ப்பித்தல், 2014 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவுசெலவுத்திட்டம் சமர்ப்பித்தல் ஆராய்தல், 2014 ஆம் ஆண்டில் உச்ச கடன் எல்லைக்கான அங்கீகாரம் கோரல், சங்க எரிபொருள் நிரப்பு நிலையகாற்று நிரப்பிக் கொள்வனவுக்கான அங்கீகாரம் கோரல் ஆகியன இடம்பெறவுள்ளன. (104)

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் திருவாசக விழா போட்டிமுடிவுகள்

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைபண்பாட்டுப் பேரவையினால் திருவாசக விழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்களிடையே நடாத்தப்பட்ட பண்ணிசை மற்றும் எழுத்துப்பரீட்சையில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களின் விபரம் வருமாறு,

தரம் - 5,

யோ.அபிஷா (கிழவன் காடு கலாமன்றம்), அ.அகல்விழி (கந்தரோடை தமிழ் கந்தையா வித்தியாலயம்), கு.மதுஷனா (தொண்டைமானாறு வீரகத்தி மகா.வித்தி).

தரம் - 6,

கு.தயாளநீதினி (வேம்படி மகளிர் கல்லூரி), அ.கம்சிகா (கிழவன் காடு கலாமன்றம்), சி.வனிதா, (கிழவன் காடு கலாமன்றம்), இ.இரவீந்திரன், இருவர் மூன்றாமிடம், (கனகரத்தினம் மகா வித்தி).

தரம் - 7,

க.கேணுகா (அராலி சரஸ்வதி மகா வித்தி), கு.லவண்யா, ஸ்ரீ.லக்ஷோஜி (தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தி).

தரம் - 8,

தி.சுபாஸ் (பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தி), வி.சாமந்தியா, கு.கல்பனா (தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தி).

தரம் - 9,

கு.சயந்தன், வி.தனுஷா, யோ.வினுஜா (தொண்டைமானாறு வீரகத்தி மகா வித்தி).

தரம் - 10,

ஜே.விவேகா (பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தி), இ.புஸ்கரணி (கனகரத்தினம் மகா வித்தி).

# பழைய மாணவர்சங்க பொதுக்கூட்டம்

(யாழ்.நிருபர்)

யாழ்ப்பாணம் மத்தியகல்லூரி பழைய மாணவர் சங்க வருடாந்த பொதுக்கூட்டம் 8 ஆம் திகதி சனிக்கிழமை காலை. 9.30 மணிக்கு தலைவர் என்.இராஜ தேவன் தலைமையில் நடைபெறவுள்ளது.


இக்கூட்டம் கல்லூரியின் றொமைன் குக் மண்டபத்தில் நடைபெறும் பிரேரணைகளை சமர்ப்பிக்க விரும்புவோர் எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன்னதாக செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி என்ற முகவரிக்கு அனுப்பிவைக் கலாமென பழைய மாணவர் சங்கச் செயலாளர் என்.ஜங்கரன் தெரிவித்துள்ளார். (10)

# ஞானச்சுடர் மலர் வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

தொண்டைமானாறு ஸ்ரீசெல்வச்சந்நிதி ஆலய சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரம சைவகலைப் பண்பாட்டுப் பேரவையினால் மாதந்தோறும் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரின் தைமாத மலர் வெளியீட்டு விழா எதிர்வரும் 31ஆம் திகதி முற்பகல் 10 மணியளவில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் நூல் வெளியீட்டுரையை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் ஆறுதிருமுருகன், மதிப்பீட்டுரையை அதிபர் சிவநாதன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.







சாவகச்சேரி ஸ்ரீ சண்முகானந்தா வித்தியாலயத்தின் பரிசளிப்புவிழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர் மாணவிகளுக்கு பரிசில் வழங்குவதையும் கடந்த வருடம் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களுடன் பிரதிநிதிகள் நிற்பதையும் காணலாம். (படங்கள்: ஆர்.இராஜகுமார்)

மனிதன் தனது குறிக்கோளில் வெற்றிபெற முதலில் தன்னையும் இறைவன் மீது செலுத்தும் பக்தியின் பெருமையையும் அறிந்து கொள்ள வேண்டியது அவசியம். - சத்ய சாயி பாபா

தினப்பதிப்பு
தினமுரசு
THINAMURASU
இல:373, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 0212223628, கைத்தொலைபேசி : 0777193264
தொலைநகல் : 0212221811, thinamurasu@live.com
Online : www.emurasu.com

## கதை கேட்டு... கதை கேட்டு...

சிறுவயதிலிருந்தே கேட்ட கதைகளால் தான் மனிதர்கள் உருவாகிறார்கள். குழந்தைப் பருவத்தில் கேட்ட கதைகளும் அதன் பின்னர் கேட்டவைகளுழ் நம்மிடம் மொழியாக சேகரமாகின்றன. அந்த மொழி மூலம்தான் உலகத்தை நாம் விளங்கிக் கொள்கிறோம் என்கிறார்கள் மொழியியல் அறிஞர்கள்.

சிறுவயதில் தாயிடம் கேட்ட கதைகளால்தான் மராட்டிய மன்னன் வீர சிவாஜியாகப் பெயர் பெற்றான் என்பதும், அரிச்சந்திரன் கதையைக் கேட்டு வளர்ந்த கரம்சந் மோகன்தாஸ் காந்தியே பொய் பேச மறுக்கும் மகாத்மா காந்தியானார் என்பதும் நாமறிந்தவையே.

குழந்தைகளுக்கு நாம் சொல்லும் கதைகளே பின்னர் அவர்கள் எத்தகைய மனிதர்களாவார்கள் என்பதைத் தீர்மானிக்கிறது. கதைகளாலேயே நாம் உருவாகிறோம். குழந்தைகளுக்கு என்ன கதைகளைச் சொல்கிறோம்? கதை சொல்ல நேரம் ஒதுக்கிக் கொள்கிறோமா? என்பதெல்லாம்தான் எதிர்கால மனிதர்களைத் தீர்மானிக்கப் போகிறது.

ஒவ்வொரு பெற்றோரும் குழந்தைகளுக்கு கதைசொல்லியாக மாற வேண்டும். இவ்வாறு கதை சொல்வது சுமார் இரண்டு வயதில் இருந்தே ஆரம்பிக்கலாம். கதைகள் மூலம் அவர்களுக்கு அற்புத உலகினை அறிமுகம் செய்யலாம். பறவைகள், மிருகம், மரம், ஊர், மக்கள், நிறங்கள், எண்கள் ஆகியவற்றை மிகச்சிறந்த கதைகள் மூலம் துவங்கலாம்.

குழந்தைகளுடன் தரமான நேரத்தை செலவழிப்பதே அவர்களுக்கு பெற்றோர்கள் தரக்கூடிய மிகப்பெரிய பரிசு. தரமான நேரம் என்பது அவர்களுடனான உரையாடலிலே இருக்கின்றது. 'பெரிய காதுகளுடன்' அவர்களை அணுகவேண்டியது பெற்றோர் வளர்த்துக்கொள்ள வேண்டிய அம்சம்.

கதை சொல்லல் என்பது ஒரு பக்க நிகழ்வல்ல. குழந்தைகளுக்கான கதை சொல்லலில் அவர்களும் முக்கிய பங்கு வகிக்க வேண்டும், வெறும் கதையை கேட்பது மட்டுமல்லாமல், அவர்களே கதையின் போக்கினை தீர்மானிக்கவும் விட வேண்டும். இந்த செயல்பாட்டில் நம் வார்த்தைகளை அவர்களுக்கு கடத்துகின்றோம்.

ஒவ்வொரு குழந்தையும் பெற்றோரிடம் ஏங்குவது இந்த தரமான நேரத்தினைத் தான். கதைகள் சொல்வதன் மூலம் அந்த ஏக்கத்தை நிச்சயம் நீங்கள் நிவர்த்தி செய்யலாம். ங்க, ஆவ்த்தா, ப்பா, அம்ம்மா, என்று அழகாக விரியும் குழந்தைகளின் வார்த்தை அகராதி.

சுமார் மூன்று வயது வரையில் நம்மிடம் இருந்து மட்டுமே அவர்கள் வார்த்தைகளை கற்கின்றனர். பிறகு தொலைக்காட்சி, சினிமா, பக்கத்துவீட்டுப் பிள்ளைகள், உறவினர்கள் என அங்கொரு வார்த்தை இங்கொரு வார்த்தையாக அகராதியை விரிவு செய்கின்றனர்.

நீங்கள் உங்கள் குழந்தைகளுக்கு சொல்ல விரும்பும் விஷயங்களை, நல்ல பழக்க வழக்கங்களை (காலையில் பல் துலக்குதல், குளித்தல், பெரியவர்களுக்கு மரியாதை செலுத்துவது, ரீவி பார்ப்பதை குறைத்து படிப்பில் கவனம் செலுத்துவது) கதைகளின் மூலம் சொல்லும்போது உடனேயே அதன் பலன்களைக் கண்டுகொள்ளலாம்.

முக்கியமாக குழந்தைகளிடம் பொறுமை அதிகரிக்கும். கதை சொல்லும்போது நமக்கும் பொறுமை வளரும். ஓடிக்கொண்டிருக்கும் வாழ்க்கை நடப்பதுபோல இருக்கும். நம்மை வாசிக்க வைக்கும், அதுவே நமக்கு பல தேடல்களை கொடுக்கும்.

குழந்தைகளை நல்ல மனிதர்களாக்க, நல்ல மனிதர்கள் நிறைந்த புதிய உலகினை உருவாக்க... ஒவ்வொரு பெற்றோரும் கதை சொல்லியாக மாற வேண்டும். அதற்காகவும் கண்டிப்பாக நேரம் ஒதுக்க வேண்டும்.

- ஆசிரியர்.

# கூட்டமைப்புடன் அரசு பேச வேண்டும்

## ஐ.தே.கட்சி அதை ஆதரிக்கும்

### என்கிறார் லக்ஷ்மன் கிரியெல்ல

(கொழும்பு)

நாட்டின் தேசிய பிரச்சினையினை தீர்ப்பதற்கு அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச்சுவார்த்தை நடத்தி ஓர் இணக்கப்பாட்டிற்கு வருமானால் ஐக்கிய தேசியக் கட்சி அதற்கு முழுமையான ஆதரவளிக்கும் என நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷமன் கிரியெல்ல தெரிவித்தார்.

ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராக கொண்டுவரப்படவுள்ள பிரேரணையையடுத்து அரசாங்கம் உறுப்பு நாடுகளை சந்தித்து ஆதரவு திரட்டும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சி ஒரு போதும் பயனளிக்கப் போவதில்லை.

எனவே அரசாங்கம் நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்தி சர்வதேச மட்டத்தில் எழுந்துள்ள சவால்களை எதிர்கொள்வதற்கான உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனவும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச மட்டத்தில் இந்தளவு பிரச்சினைகள் வருவதற்கு அரசாங்கத்தின் செயற்பாடுகளே காரணம். யுத்தம் முடிவடைந்து நான்கு வருடங்கள் கடந்துள்ள போதும் நாட்டின் தேசிய பிரச்சினையினை தீர்ப்பதற்கு அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. மாறாக மக்களை ஏமாற்றுவதற்கு அவ்வப்போது ஏதாவது ஏமாற்று வேலைகளை செய்து வருகிறது.

நாட்டின் தேசிய பிரச்சினை தொடர்பாக அரசாங்கம் முதலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் பேச வேண்டும். அதன் பின்னர் அது தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியுடன் கலந்தாலோசிக்க வேண்டும். அப்படியில்லாமல் தன்னிச்சையான முடிவுகளை எடுப்பது பாரதூரமான எதிர்விளைவுகளையே ஏற்படுத்தும். அந்த நிலைமையே தற்போது ஏற்பட்டுள்ளது.

வடக்கில் தேர்தலை நடத்திய அரசு அங்கு ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் சுயாதீன செயற்பாட்டிற்கு தடையாகவுள்ளது. இவற்றையெல்லாம் சர்வதேசம் உன்னிப்பாக அவதானித்துக் கொண்டிருக்கிறது.

அரசாங்கம் நாட்டு மக்களை ஏமாற்றுவதற்காக சர்வதேசத்தை தாறுமாறாக மேடைகளில் பேசுகிறது. பின்னர் தமது பிரதி நிதிகளை அனுப்பி உதவி கோருகிறது.

இவற்றையெல்லாம் சர்வதேசம் அறியாமலில்லை. ஆகையால் இவ்வாறான ஏமாற்று வேலைகளை முதலில் கைவிட வேண்டும்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடர் நெருங்கும் வேளையில் அதை எப்படி எதிர்கொள்வதென தடுமாறாமல் இருப்பதற்கு முறையானதும் தூர நோக்குடையதுமான நல்ல திட்டங்களை வகுக்க வேண்டும். அதற்காக கட்சி வேறுபாடின்றி கலந்துரையாடல்களை நடத்தி இதய சுத்தியுடன் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

# இனவாதம் அற்ற அரசு வேண்டும் தமிழ் மக்களுக்கு இதுவே தேவை

### மனோ கணேசன் தெரிவிப்பு

தமிழ் பேசும் மக்களுக்கு இந்த இனவாத அரசை வீழ்த்துவது மட்டும் போதாது. இதற்கு மாற்றாக உருவாகும் புதிய அரசு இனவாதம் அற்ற அரசாக இருக்க வேண்டும். இதற்கு அந்த அரசில் நமது கட்சி, பலம் வாய்ந்த கட்சியாக இடம்பெற வேண்டும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

நாங்கள் ஆளுமையுடன் பலமாக இருந்தால் தான் எமது இனத்துக்கு எதிரான எந்த ஒரு அநீதியையும் தடுத்து நிறுத்தலாம். அதுபோல் எங்கள் மக்களுக்கு அனைத்து அரச வளங்களையும் கேட்டு வாங்கி வழங்கலாம் எனவும் தெரிவித்துள்ளார்.

கொழும்பு கொச்சிக்கடை 95 ஆம் இலக்க தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற மக்கள் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த அரசை வீழ்த்த வேண்டிய வேளை வந்துவிட்டது. நாங்கள் வீழ்த்தாவிட்டாலும் கூட, இந்த அரசு தானாகவே வீழ்ந்து நொருங்கும் அறிகுறிகள் தோன்றிவிட்டன. இது தான் இன்று நாடு முழுக்க வாழும் தமிழ், முஸ்லிம் மக்களின் எதிர்பார்ப்பு. இது இன்று கணிசமான சிங்கள மக்களின் எதிர்பார்ப்பாகவும் மாறி வருகிறது என்றார்.

நமது கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, சரத் பொன்சேகாவின் ஜனநாயகக் கட்சி, ஜே.வி.பி, ஐக்கிய சமவுடமைக் கட்சி, நவசமசமாஜக் கட்சி ஆகிய எதிரணிக் கட்சிகள் அனைத்தும் இந்தத் தேர்தலில் தனித்தனியாகவே. போட்டியிடுகிறோம்.

இதன் மூலம் ஒவ்வொரு கட்சியும் தத்[illegible] மக்கள் பலத்தை பரீட்சித்துத் தெரிந்து கொள்ளலாம் எனக் குறிப்பிட்டார்.

# சர்வதேச முதலீடுகளை ஈர்ப்பதே முதலீட்டுச் சபையின் இலக்கு

### புதிய செயற்றிட்டம் அமுல்

(கொழும்பு)

2014ஆம் ஆண்டில் அதிக அளவிலான வெளிநாட்டு முதலீட்டை பெறும் நோக்கில் பல்வேறு திட்டங்களுடன் இலங்கை முதலீட்டு சபை செயற்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

250 கோடி அமெரிக்க டொலர நேரடி முதலீட்டை இந்த வருடத்தில் பெற முடியும் என முதலீட்டு சபை நம்பிக்கை வெளியிட்டுள்ளது.

அதே அளவிலான முதலீட்டை, உள்ளூர் முதலீட்டாளர்களிடம் இருந்து பெறுவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக, இலங்கை முதலீட்டு சபையினால் வெளியிடப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை, பிரான்ஸில் இருந்து 30 கோடி முதல் 40 கோடி அமெரிக்க டொலர் வரை கிடைக்கவுள்ளதாக முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. இந்த நிலையில், தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி மூலம் இந்த வருடத்தில் 400 கோடி அமெரிக்க டொலர்களை வெளிநாட்டு .செலவாணியாக பெற முடியும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தகவலை, கடந்த வாரம் இடம்பெற்ற கருத்தரங்கொன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய தைக்கப்பட்ட ஆடை ஏற்றுமதி சங்கத்தின் தலைவர் யோகன் லோரன்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த வருடத்தில் ஏற் றுமதி மூலம் கிடைத்த வருவாயை விட இந்த வருடத்தில் அதிக அளவிலான அதிகரிப்பை எதிர்பார்க்க முடியும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# விசுவமடு மத்தி பொதுநூலகம் புதுப்பொலிவுடன் திறப்பு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு விசுவமடு மத்தி பொது நூலகம் வாசகர்களினதும் இளைஞர்களினதும் இணைந்த உதவிகளுடன் மீள்புனரமைப்பு செய்யப்பட்டு கடந்த வியாழக்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் நாகலிங்கம் வேதநாயகன் இந்நூலகத்தை நாடா வெட்டி திறந்து வைத்தார்.

சிறப்பு விருந்தினர்களாக பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ந.பிரபாகரன், புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் எ.பிரதாபன், புதுக்குடியிருப்பு பிரதேசசபை செயலாளர் மிதிலைநாதன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

விசுவமடு மத்தி பொதுநூலகம் கடந்த காலத்தில் சுமார் 15ஆயிரத்திற்கும் அதிக நூல்களைக் கொண்டு வாசகர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற நூலகமாகக் காணப்பட்டது.

இந்நிலையில் கடந்த யுத்த காலத்தில் இந்த நூலகம் சேதமடைந்துள்ளதுடன் பத்தாயிரம் வரையான நூல்களும் அழிவடைந்துள்ளன.

இருப்பினும், எஞ்சிய ஐயாயிரம் வரையான நூல்கள் பூநகரி பிரதேச செயலர் எஸ்.சத்தியசீலனால் பாதுகாக்கப்பட்டு நூலக நிர்வாகத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.



தமிழரசுக்கட்சியின் மானிப்பாய் கிளையை கலைக்குமாறு அறிவித்த கட்சியின் செயலாளர் மாவை சேனாதிராசாவுக்கு மானிப்பாய் கிளையின் செயலாளர் க.ஷௌரிகாந்தன் அனுப்பி வைத்த பதிலை இணையத்தளமொன்று வெளியிட்டிருக்கிறது. "மாவையை சிறையில் அடைக்கத் தயாராகும் PLOTE - கோத்தா அணி" என்ற தலைப்பிலேயே இது பிரசுரமாகியிருக்கிறது. இவ் அறிக்கை கோத்தாவின் ஆலோசனைப்படி PLOTE சித்தார்த்தனால் வடிவமைக்கப் பட்டது எனவும். இதனை உறுதியாகக் கூறக் காரணம் இவ் அறிக்கை தயார் படுத்தும் இடத்தில் இருந்த நபரின் தகவல்களே காரணம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மாவையார் மீதான பல குற்றச்சாட்டுகளை பகிரங்கப்படுத்தும் அந்த நீண்ட கடிதத்திலுள்ள சில பகுதிகளை இங்கு தருகிறோம்.

# அமிர்தலிங்கம் கொலைக்கு காரணகர்த்தா யார்? தமிழரசுக்கட்சியிலிருந்து வெளிவரும் உண்மை!





கௌரவ சோ.சேனாதிராசா
பொதுச்செயலாளர்-தமிழரசுக்கட்சி
30, மாட்டீன் வீதி, யாழ்ப்பாணம்.

ஐயா!

தமிழரசுக்கட்சியின் மானிப்பாய் கிளையை கலைக்க அறிவித்தல் கொடுக்கப்பட்டதுக்கான பதில்

தங்கள் 22.11.2013ஆம் திகதிய குழப்பமான கடிதம் சம்பந்தமாக எமது நிலைப்பாட்டை தங்களுக்கு அறியத் தருகிறேன். எனக்கு மானிப்பாய் தொகுதி தமிழரசுக்கட்சி கலைக்கப்படுவதற்கான அறிவித்தல் தான் கிடைத்தது. என்னிடம் எந்தக்கால அவகாசத்துள் என்று விளக்கம் கோரிக் கடிதம் அனுப்பப்படவில்லை. ஆனால் கட்சிக் கிளை கலைக்கப்பட்டதான சாரப்பட கட்சி தொடர்பான ஆவணங்களை தலைமைக் காரியாலயத்தில் ஒப்படைக்குமாறு கோரப்பட்டுள்ளது. ஒரு செயலாளர் தன்னிஷ்டமாக கட்சிக் கிளையைக் கலைக்க கட்சியின் அமைப்பு விதியில் அதிகாரம்இல்லை. கட்சியின் மத்திய குழு கூடித்தான் முடிவு எடுக்கப்பட வேண்டும் என நான் எதிர்பார்க்கிறேன். எமது பக்க கருத்துக்களைச் சொல்வதற்கு சந்தர்ப்பம் வழங்கப்பட்டு இருக்க வேண்டும். இது எல்லாம் ஜனநாயகக் கட்சிகளின் கடமைப்பாடு ஆகும். என் மீது உள்ள காழ்ப்புணர்வின் காரணமாக எம் கிளையைக் கலைத்துள்ளீர்கள். கட்சிக் கிளை உறுப்பினர்களும் எமது தொகுதி கட்சிக்காரரையும் அவர்களது உணர்வுகளையும் இழிவுபடுத்தும் முயற்சியாக தங்கள் செயற்பாடு அமைந்துள்ளது. ...

மாகாண சபைத் தேர்தலின் போது நாம் தன்னிச்சையான நடவடிக்கைகளை மேற்கொண்டதாக எம் மீது குற்றம் சாட்டுவதை நாம் ஆணித்தரமாக மறுக்கின்றோம். வீட்டுச் சின்னத்தில் வீரசிங்கம் மண்டபத்தில் அறிவிக்கப்பட்ட பத்தொன்பது வேட்பாளர்களில் மூன்று பெயருக்காகவே நாம் தேர்தல் வேலை செய்தோம். தேர்தல் சட்டப்படி மூன்று பெயருக்கு மட்டுமே வாக்களிக்க முடியும். நீங்கள் உள் மனதில் நயவஞ்சகம் வைத்து நீங்களே அறிவித்த பத்தொன்பது பெயர்களிலும், விசுவாசம் இல்லாமல், அதில் சிலருக்கு கழுத்தறுப்பு அல்லது காலை வார வேணும் என்று நீங்கள் சொல்லவே இல்லை.

எங்கள் மானிப்பாய்த் தொகுதியைச் சேர்ந்த இருவர் மாகாண சபைத் தேர்தலில் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்டார்கள். அவர்களில் த. சித்தார்த்தன் அண்ணர் எனது அரசியலில் குருவில் ஒருவரான அமரர் வீ.தர்மலிங்கம் அய்யாவின் மகன். அடுத்தவர் எமது மானிப்பாய் தொகுதி தமிழரசுக் கட்சிக் கிளையின் செயலாளர் தம்பி பா.கஜதீபன். இதற்காகவா இந்த கழுத்தறுப்பு என பலர் கேட்கிறார்கள். இல்லை. இன்னும் பல இருக்கிறது.

எமது மூன்றாவது தெரிவாக எமது கட்சியின் தலைவர் இரா. சம்பந்தன் அய்யா ஒவ்வொரு கூட்டத்திலும் தகுதி, திறமை, பெருமை பற்றி எல்லாம் சொல்லி சட்ட நுணுக்கம் தெரிந்தவர், நேர்மையானவர், ஆங்கிலப் புலமை கொண்டவர், சர்வதேசத் தலைவர்களுடன் கதைக்கக்கூடியவர், என்றெல்லாம் அறிமுகப்படுத்திய சி.வி விக்னேஸ்வரன் அய்யா அவர்களுக்காகத் தான் தேர்தல் வேலை செய்தோம்.

நீங்கள் யார் யாரை உள்மனதில் வைத்துக் கொண்டு தேர்தல் கால பரப்புரையை செய்தீர்கள் என எமக்கு சொல்லவில்லை. சுமார் 43 ஆண்டுகளுக்கு மேலாக நாம் தேர்தல் வேலை செய்திருக்கின்றோம். இப்போ புதிய பாடம் யாரிடமும் படிக்க வேண்டிய தேவை எமக்கு இல்லை. நாம் தன்னிச்சையாக இயங்கவில்லை. வரலாற்று தவறுகளைச் செய்யவில்லை. கட்சிக்காக, கட்சி வேட்பாளர்களுக்காக தேர்தல் வேலை செய்திருக்கின்றோம். கழுத்தறுப்பு தேர்தல் வேலை செய்யாததற்காக கட்சிக் கிளையைக் கலைப்பதால் உங்களுக்கு ஏற்பட்டிருப்பது அழியாத வடுவும், கட்சிக்குச் செய்த வரலாற்றுத் துரோகமும் ஆகும்.

நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலின் போது மானிப்பாய் தொகுதிக்கு தேர்தல் முகவராக நீங்கள் நியமித்தவர் த.சித்தார்த்தன் அவர்கள். நாம் அவருக்காகத் தான் ஒளிவு மறைவு இல்லாமல் தேர்தல் வேலை செய்தோம். இதை அவதானித்துத் தான் கட்சியைக் கலைத்து விட்டீர்களா? எம்மில் தவறு காண்பதாக இருந்தால் அதிலும் பார்க்க பல்லாயிரம் மடங்கு தவறு நீங்கள் செய்துள்ளீர்கள் என்பதை மீள நினைத்துப்பார்க்க வேண்டுகின்றேன்.

அவர்கள் மூவருக்கும் தேர்தல்வேலை செய்தமைக்காக எமக்கு ஒழுங்காற்று நடவடிக்கை, கட்சிக் கிளை கலைப்பு என்றால் யாருடைய வேலைத் திட்டத்தில் நீங்கள் இயங்குகிறீர்கள் என்பதை மக்கள் உணர்வார்கள் அல்லது மக்களுக்கு தெளிவுபடுத்துவோம். ...

சண்டிலிப்பாயில் உங்கள் சகோதரி திருமதி ரஞ்சியின் கோரிக்கையான காணிப் பெயர் மாற்றம் எம்மால் செய்ய முடியவில்லை. சுமார் ஏழரைப் பரப்புக் காணியில் பாதிக் காணியை வாங்கியவர்களுக்கு முழுக்காணியையும் நில ஆக்கிரமிப்பு செய்ய உதவ என்னால் இயலவில்லை. காணி உரிமைக்காரர்கள் எம்மிடம் முறையிட்டிருந்தார்கள். இதற்கு பொறுப்பான பிரதேச சபை உத்தியோகத்தர் அநீதியாக நடக்க முடியாது என தெளிவுபடுத்தி இருந்தார். டிசம்பர் மாதம் 21ஆம் திகதி 2012ஆம் ஆண்டு தந்தை செல்வா நினைவுத் தூபி அருகே நாள் முழுதும் உண்ணா விரதப் போராட்டம். என்னை நீங்கள் அருகே அழைத்து சண்டிலிப்பாய் காணி பெயர் மாற்றம் செய்யாது விட்டது பற்றிக் கேட்டீர்கள். நான் சொன்னேன்... பொது வாழ்வில் இருப்பவர்கள் ஊழல், முறைகேடுகள் செய்யக் கூடாது. இது உங்களுக்கும் பொருந்தும், எனக்கும் பொருந்தும்... என்று கூறினேன். மேலும் பாதிக் காணி தான் உங்கள் சகோதரியின் மைத்துனருக்கு சேரும். மிகுதிக் காணிக்கு உரிமைக்காரர்கள் இருக்கிறார்கள், அவர்கள் முறைப்பாடு செய்திருக்கிறார்கள் என்றேன். அருகே இருந்த கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி விநாயகமூர்த்தி அய்யா ஒரு ஆட்சி உறுதி எழுதுவது பற்றி சொன்னார். அண்மையில் வாங்கிய காணிக்கு ஆட்சி உறுதி வராது என நாம் சொன்னோம். என் மீது நீங்கள் ஆத்திரப்பட்டும் பிரயோசனம் இல்லை. உங்கள் அறிமுகத்துக்காக நான் தில்லு முல்லு செய்ய விரும்பவில்லை.

நீங்கள் சொல்வதைச் செய்யும் எடுபிடிகளாக நாம் இருக்க வேண்டும் என எதிர்பார்க்கிறீர்கள். மாகாண சபைத் தேர்தலில் நாம் தேர்தல் வேலை செய்த மூவரும் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட வேட்பாளராக இருந்தாலும் அது தவறாக உங்களுக்கு தெரிகிறது. கட்சியின் ஒழுங்கு நடவடிக்கைக்கு அனுப்புவதாக கடிதம் எழுதுகிறீர்கள். உங்கள் மனக் கிடக்கை வெளிப்பட்டுள்ளது. நீங்கள் தவறாக சொல்வதை நான் செய்ய முடியாது.

உங்கள் தவறான அறிவுறுத்தலைக் கேட்டதால் தான் 1989 யூலை மாதம் 13ஆம் திகதி சம்பவம் நடந்தது. எமது தலைவர் தியாகி அ.அமிர்தலிங்கம் அய்யாவின் படுகொலை நினைவுகளை மீள ஞாபகப்படுத்த விரும்புகிறேன். 1989 யூலை 13ஆம் திகதி அமிர்தலிங்கம் அய்யாவைக் கொலை செய்ய கொழும்பு பௌத்தலோக மாவத்தை வீட்டுக்கு கொலைகாரர்கள் வந்திருந்தார்கள். அவர்கள் யார் என்பது உங்களுக்கும், மறைந்தஅமரர் வெ.யோகேஸ்வரன் அண்ணனுக்கும் மட்டும் தான் தெரியும். அமிர்தலிங்கம் அய்யா கொலைகாரர்களுடனான சந்திப்பை முதலில் ஏற்க மறுத்திருந்தார்கள். வெ.யோகேஸ்வரன் அண்ணன் மட்டும் முல்லைத்தீவு போய் பொறியியலாளர் குமாரசூரியர் மாளிகையில் தங்கி, பின் மல்லாவி போய் சந்தித்து வந்தார். பின் நீங்கள் தலையிட்டு அமிர்தலிங்கம் அய்யாவுக்கும் கொலைகாரருக்கும் ஒரு சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தீர்கள்.

**நீங்கள் தலையிட்டு அமிர்தலிங்கம் அய்யாவுக்கும் கொலைகாரருக்கும் ஒரு சந்திப்பை ஏற்படுத்திக் கொடுத்திருந்தீர்கள். பௌத்தலோக மாவத்தை வீட்டின் மேல் மாடியில் சந்திப்பு நடந்தது. அமிர்தலிங்கம் அய்யாவையும், மு.சிவசிதம்பரம் அய்யாவையும் சந்திக்க வந்தவர்கள் மீது சந்தேகம் கொண்டு அவர்கள் ஆயுதம் கொண்டு வந்திருக்கிறார்கள் என உங்களுக்கு முதல் முறை அறிவித்தேன். நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம் என்றீர்கள்.**

பௌத்தலோக மாவத்தை வீட்டின் மேல் மாடியில் சந்திப்பு நடந்தது. அமிர்தலிங்கம் அய்யாவையும், மு.சிவசிதம்பரம் அய்யாவையும் சந்திக்க வந்தவர்கள் மீது சந்தேகம் கொண்டு அவர்கள் ஆயுதம் கொண்டு வந்திருக்கிறார்கள் என உங்களுக்கு முதல் முறை அறிவித்தேன். நீங்கள் எதுவும் செய்ய வேண்டாம் என்றீர்கள்.

அமிர்தலிங்கம் அய்யாவை கொலை செய்ய வந்தவர்களில் கீழ் முற்றத்தில் நின்றவனிடம் ஆயுதத்தைப் பறித்து வைத்துக் கொண்டு கீழ் வீட்டில் ரிவி பார்த்துக் கொண்டிருந்த உங்களிடம் நான் நிலைமையைச் சொல்லி வந்தவர்கள் யார், ஆயுதங்களுடன்வந்திருக்கிறார்கள் என்ன செய்வது என்று கேட்டேன். நீங்கள் சொன்னீர்கள்... ஆயுதத்தை அவர்களிடம் திருப்பிக் கொடுத்து விட்டு எதுவும் செய்யாமல் இருக்கச் சொன்னீர்கள் அவ்வாறே செய்தேன்.

இரவு சுமார் 7 மணி இருக்கும் கீழ் வீட்டின் முன்றலில் இருந்த நாம் ஆறு பேர் கூடி நிலைமையை ஆராய்ந்து மூன்றாம் முறையாக உங்களிடம் வந்தேன். திருமதி மங்கையற்கரசி அமிர்தலிங்கம் முன்னிலையில் நிலைமையைச் சொன்னேன். எல்லோருக்கும் சந்தேகம் வலுக்கிறது.

(18ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.க. உறுப்பினர்கள் மீது உள்ளிருந்து கிளம்பும் கண்டனம்



ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து கொண்ட சில உறுப்பினர்களால் கட்சிக்கு எந்த பிரயோசனமும் இல்லை என்று அதன் நாடாளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

பிபிலையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றின் போது அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன் தவறு செய்கின்ற கட்சி உறுப்பினர்களுக்கு எதிராக முறையான நடவடிக்கை. எடுக்கப்பட வேண்டும் என்றும் அவர் இதன் போது தெரிவித்துள்ளார்.

# ஒருங்கிணைந்த மீன்பிடிச் செயற்றிட்டம்

# சென்னை சந்திப்பில் புதிய யோசனை

(கொழும்பு)

இந்திய-இலங்கை மீனவர்கள் ஒருங்கிணைந்த வகையில் மேற்கொள்ளும் கடற்றொழில் செயற்றிட்ட யோசனை ஒன்று முன்வைக்கப்படவுள்ளது.

இந்த யோசனை தொடர்பாக இன்று சென்னையில் நடக்கவிருக்கும் பேச்சு வார்த்தையின் போது விரிவாக விவாதிக்கப்படவிருக்கிறது.

இந்தப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்காக 15 பேர் அடங்கிய இலங்கை மீனவர் பிரதிநிதிகள் குழு ஒன்று நேற்று சென்னைக்குப் புறப்பட்டுச் சென்றுள்ளது.

இதேவேளை தற்போது இந்திய உயர்நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள கச்சத்தீவு குறித்த



வழக்கு, இந்தப் பேச்சுவார்தையினால் பாதிப்படையாது என்று தமிழக அரசாங்கம் தெரிவித்துள்ளது.

தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராமினால் தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு கடந்த 2008ஆம ஆண்டு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இதற்கிடையில், இந்தப் பேச்சுவார்த்தை ஐந்து முக்கிய விடயங்களின் அடிப்படையில் நடைபெறவுள்ளன.

பாக்கு நீரிணையில் தமிழக மீனவர்களுக்கு உள்ள உரிமைகள்,. ஏற்கனவே இடம்பெற்ற பேச்சுவார்த்தையில் இணங்கப்பட்டதற்கு அமைய படகுகளையும், மீனவர்களையும் கைது செயயாதிருத்தல், போன்ற விடயங்களும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அத்துடன் இலங்கை மற்றும் தமிழக மீனவர்கள் இணைந்து இலங்கை இந்திய கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபடுவதற்கான யோசனை ஒன்றையும் அவர்கள் முன்வைக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது

## மா ஓயாவில் மிதந்தன மனித எலும்புக்கூடுகள்

### நேற்று முன்தினம் மீட்பு



பொல்காவெல, புகுரிய பிரதேசத்தில் மா ஓயாவில் மிதந்து கொண்டிருந்த மனித மண்டையோடுகள் மற்றும் மனித எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.

பொல்காவெல பொலிஸாருக்கு நேற்று முன்தினம் மாலை கிடைக்கப்பெற்ற தகவலைத் தொடர்ந்து இந்த எலும்புகள் மீட்கப்பட்டுள்ளன.

இதன்படி மனித மண்டையோடுகள் 3 மற்றும் மனித எலும்புகளும் மீட்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் தொடர்பில் நீதவான் விசாரணைகள் மேற்கொள்ளவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# காணித்தகராறுகளை தீர்க்க புதிய அதிகாரங்களுடன் குழு

### விசேட நடைமுறைகளும் அமுல்

காணிப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக நீதிமன்ற அதிகாரங்களுடன் கூடிய குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது

காணிப் பிரச்சினைகளை தீர்த்து அவற்றுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல் நிலையை கருததிற்கொண்டு இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மேலதிக நில அளவையாளர் நாயகம் பீ.எம்.பீ.உதயகாந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நில அளவைகள் தொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது காணிப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி நியமித்த குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கமைய புதிய சட்ட மூலத்தை தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக மேலதிக அளவையாளர் நாயகம் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் காணிகளுக்கான உரிமைப் பத்திரம் மற்றும் உறுதிப்பத்திரம் ஆகியவற்றை பதிவு செய்வதற்கும் உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார

# வறுமை ஒழிப்பில் முன்னேற்றம் புள்ளிவிபரவியல் திணைக்களம் தகவல்

(கொழும்பு)

நீண்டகால தசாப்தங்களாக நீடித்து வந்த நாட்டின் வறுமை நிலை இப்போது குறைவடைந்துள்ளது. தேசிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட செயற்றிட்டங்கள் காரணமாக இந்த முன்னேற்றங்கள் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி இலங்கையின் வறுமை நிலை 6.5 வீதம் வரை குறைவடைந்துள்ளது.

தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் மேற்கொண்ட ஆய்வொன்றின் போது இந்த விடயம் உறுதி செய்யப்பட்டுள்ளது.

2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளின் வருமானம் மற்றும் செலவீனங்கள் தொடர்பில் இதன் போது கவனத்திற்கொள்ளப்பட்டுள்ளது.

குறிப்பாக நலன்புரித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றமையே நாட்டின் வறுமை நிலை குறைவடையக் காரணம் என தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டி.சி.ஏ. குணவர்தன சுட்டிக்காட்டியுள்ளார்.

2010 ஆம் 2011 ஆம் ஆண்டுகளில் நாட்டின் வறுமை நிலை 8.9 வீதமாக காணப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

## மங்கள மீது விசாரணை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீரவை பொலிஸார் மூன்று மணித்தியாலங்களாக நேற்று முன்தினம் விசாரணை செய்துள்ளனர்

தமது வீட்டில் அத்துமீறி ஒருவர் பிரவேசித்தார் என்று மங்கள சமரவீர முன்னர் முறைப்பாடு ஒன்றை செய்திருந்தார்.

எனினும் அவர் மங்கள சமரவீரவுடன் உறவை கொண்டிருந்தார் என்று குற்றஞ் சுமத்தப்பட்டவரின் மனைவி முறைப்பாட்டை செய்தார்.

இந்தநிலையில் குற்றஞ் சுமத்தப்பட்டவரின் மனைவி செய்த முறைப்பாட்டுக்கு இணங்கவே நேற்று முன்தினம் மங்கள சமரவீரவிடம் விசாரணை இடம்பெற்றுள்ளது. இதன்போது தாம் குறித்த நபரின் வீட்டாருக்கு எவ்வாறு உதவி செய்தார் என்பதை மங்கள சமரவீர பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

# சிராணியை பதவி நீக்கியமை மிகவும் தவறான நடைமுறை

### காலம் கடந்த கண்டனம்



(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சிராணி பண்டாரநாயக்கவை பதவியில் இருந்து நீக்க அரசாங்கம் மேற்கொண்ட நடைமுறை பிழையானது என முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தெரிவித்துள்ளார்.

எனினும் இதற்கு முன்னர் சிராணி பண்டாரநாயக்கவுக்கு எதிராக குற்றவியல் பிரேரணை என்ற அரசாங்கத்தின் நடைமுறையை சரத் என் சில்வா ஆதரித்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

சிராணி பண்டாரநாயக்கவின நடவடிக்கைகள் ஏற்றுக் கொள்ளக் கூடியவைகளாக இருக்கவில்லை. என்றாலும் அவரை பதவி விலக்குவதற்காக அரசாங்கம் மேற்கொண்ட நடவடிக்கை சரி என்று கூறமுடியாது என்றும் சில்வா தெரிவித்துள்ளார்.

இதற்காக சிராணி பண்டாரநாயக்க ஜெனிவா செல்லமுடியும என்றும் சில்வா குறிப்பிட்டார்.

17 ஆம் அரசியல் அமைப்பு திருத்தம் நீதித்துறையின் சுயாதீனம் தொடர்பிலேயே கொண்டு வரப்பட்டது. எனினும் இன்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவே நீதித்துறையின் அனைத்து நியமனங்களையும் தீர்மானிக்கிறார் என்று சரத் என் சில்வா குறிப்பிட்டார்.

## யுத்த காலத்தில் மரணித்த முஸ்லீம்கள் தனியான விசாரணைக்கு முயற்சி

வடக்கில் யுத்த காலத்தில் உயிரிழந்த முஸ்லிம்கள் தொடர்பில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் விசாரணை ஒன்றை முன்னெடுக்கவிருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

யுத்தப் பாதிப்புகளுக்கு உள்ளாகி 20 ஆயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம்கள் பலியாகி இருப்பதாக, முஸ்லிம் காங்கிரஸ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் தனிப்பட்ட கணிப்பீடினை மேற்கொண்டு ஜனாதிபதியிடம் கையளிக்க முஸ்லிம் காங்கிரஸ் நடவடிக்கை எடுக்கும் என்று அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

யுத்த காலத்தில் பாதிக்கப்பட்ட முஸ்லிம் மக்கள் தொடரபில் தனிப்பட்ட விசாரணை ஒன்றை மேற்கொள்ள வேண்டும் என்று அரசாங்கத்திடம் கோரிக்கை ஒன்றை முன்வைக்கவே சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் எத்தனித்திருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## லஞ்சம் பெறுவதில் அதிபர்கள் முன்னிலை

### 60 அதிபர்கள் சிக்கினர்

(கொழும்பு)

நாடுமுழுவதும் அறுபது பாடசாலை அதிபர்கள் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாக குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு தரம் ஒன்றுக்கான பாடசாலை மாணவர்களை இணைத்துக் கொள்ளும் போது இவ்வாறு இலஞ்சம் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

அதிபர்கள் பல்வேறு வழிகளில் இலஞ்சம் பெற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்த ஆண்டின் முதல் 25 நாட்களில் மட்டும் இவ்வாறு இலஞ்சம்பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றிய தகவல்கள் கிடைக்கப் பெற்றுள்ளன.

இலஞ்ச ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழுவிடம் இது தொடர்பில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# நாட்டை அச்சுறுத்திய இளைஞர்கள் இப்போது அபிவிருத்திக்காக உழைக்கின்றனர்

### ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

இந்த நாட்டுக்கு அச்சுறுத்தலாக ஒருகாலத்தில் செயற்பட்ட இளைஞர்கள் இப்போது நாட்டின் அபிவிருத்திக்காக உழைத்து வருகின்றனர் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.


மேலும் சுதந்திரத்தையும், அபிவிருத்தியையும் ஏற்றுக் கொள்ளாத, இலங்கையிலேயே பிறந்து இலங்கையை வெறுக்கின்றவர்கள் குறித்து அதிருப்தி அடைவதாகவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார

இலங்கையை விமர்சிக்கின்ற சில நாடுகள், இலங்கையில் இடம்பெறுகின்ற அபிவிருத்திகள் தொடர்பில் மௌனம் காத்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அச்சுறுத்தல் மிகுந்த நாடாக இங்கை கடந்த காலங்களில் காணப்பட்டது. ஆனால் தற்போது வடக்கில் இருந்து தெற்கு வரையில் அச்சம் இன்றி சுதந்திரமாக பயணிக்க முடிந்துள்ளது.

30 வருட கால யுத்தம் நிறைவு செய்யப்பட்டு, விரைவான அபிவிருத்தி நோக்கி இலங்கை செல்கிறது.


நாட்டை அச்சுறுத்திய வடக்கின் இளைஞர்கள் தற்போது புனர்வாழ்வுக்கு உட்படுத்தி, நாட்டின் முன்னேற்றத்துக்கு பயன்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.




யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகத்தில் நேற்றுக்காலை இடம்பெற்ற 64ஆவது குடியரசுத் தின நிகழ்வில் துணைத்தூதுவர் வே.மகாலிங்கம் இந்திய தேசியக் கொடியினை ஏற்றி வணக்கம் செலுத்துவதையும் குடியரசு தின உரை நிகழ்வுகளையும், நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் காணலாம்.

(படங்கள்: ஆர்.இராஜகுமார்)

# உள்ளூர் வீதிகளின் அபிவிருத்திக்கு அரசின் விசேட நிதியொதுக்கீடு அவசியம்



(கிளிநொச்சி)

உள்ளூர் வீதிகள் பிரதேச சபைகளின் ஆளுகைக்குரியவை ஆனால், அவற்றை புனரமைக்கும் நிதிவளம் சபைகளிடம் இல்லை. இதனால், அரசாங்கமே அவற்றை புனரமைப்பதற்கான நிதிகளை ஒதுக்கீடு செய்கின்றது.

எனவே, உள்ளூர் வீதிகளின் அபிவிருத்திக்கு அரசின் விசேட நிதியொதுக்கீடு தொடர்ந்தும் அவசியமானது என ஈ.பி.டி.பி யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மு.சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

பல்லவராயன்கட்டில் விவசாய அமைப்புக்கான கெயார் நிறுவனத்தின் நிதியுதவியுடன் பொஸ்ரோ நிறுவனத்தினால் சுமார் 12 இலட்சம் ரூபா செலவில் செயற்பாட்டுக் கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

யுத்தத்திற்குப் பின் முதற்கட்டமாக மீள்குடியேற்றப்பட்ட பிரதேசமாக பூநகரி பிரதேசம் காணப்பட்டபோதும், இன்று வரை குறிப்பிடத்தக்க மேம்பாட்டையே எட்டியிருக்கின்றது.

புவியியல் ரீதியாக பூநகரி பரந்த பிரதேசமாகக்காணப்படுகின்றமை இதற்கு முக்கிய காரணமாக அமைந்தபோதும், அபிவிருத்திச் செயற்பாடுகளை துரிதப்படுத்துவதில் நிர்வாக ரீதியான அனுசரணை மிகக்குறைவாக காணப்பட்டமையும், அபிவிருத்தியின் பின்னடைவுக்கு காரணம் எனலாம்.

ஏனெனில், மக்களின் நலன்களை முதன்மைப்படுத்தி அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றவர்களைக் கொண்ட பிரதேசங்கள் இன்று மிகத்துரிதவளர்ச்சியை எட்டியிருக்கின்றன. ஆனால், இப்பிரதேசம் துரதிஸ்டவசமாக அவ்வாறான அர்ப்பணிப்பு உயர்வுமிக்க செயற்பாட்டாளர்களை கொண்டிருக்கவில்லை.

பூநகரியில் போக்குவரத்து உட்பட மக்களின் பல முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டியிருக்கின்றது.

இப்பகுதியின் உள்ளூர் வீதிகள் அனைத்தும் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது.

இதனால், பாடசாலை மாணவர்கள் உட்பட அனைவரும் எதிர்நோக்குகின்ற பிரச்சினைகளை நாம் அறிவோம்.

இவ்வீதிகள் பிரதேச சபைகளின் ஆளுகைக் குட்பட்டதெனவும், அவற்றை புனரமைக்கும் பொருளாதாரவளம் பிரதேச சபைகளுக்கு இல்லை எனவும் தெரிவித்தார்.

அரசாங்கம் கிளிநொச்சி மாவட்டத்தில் மட்டும் மிகப் பெரும் தொகையான நிதியை செலவிட்டுள்ள நிலையில் மேலும் பல வீதிகள் புனரமைக்கப்பட வேண்டியுள்ளது. அதற்கு தொடர்ந்தும் அரசாங்கத்தின் விசேட நிதி ஒதுக்கீடுகள் அவசியம் எனவும் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வில், ஈ.பி.டி.பி வடக்கு மாகாணசபையின் உறுப்பினர் வை.தவநாதன், பூநகரிப் பிரதேச செய்லர் சத்தியசீலன், பூநகரி பிரதேசசபை உறுப்பினர் காசிம், கிளிநொச்சி மாவட்ட கமநல சேவை உதவி ஆணையாளர் தயாரூபன், பொஸ்ரோ நிறுவனத்தின் இணைப்பாளர் ரமணன், குடியேற்ற உத்தியோகத்தர் சபீனா, அந்தப் பகுதி கிராம சேவையாளர், கமக்கார அமைப்புகளின் பிரதிநிதிகள், கிராம அபிவிருத்திச் சங்கம், மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகள், விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## விவாதப்போட்டிக்கு பரிசில் வழங்கும் நிகழ்வு

அரச கரும மொழிகள் ஆணைக்குழுவினால் அரச கரும மொழிக்கொள்கை அதன் பாவனை மற்றும் இனங்களுக்கிடையிலான நல்லிணக்கம் என்ற தலைப்பின் கீழ் நடாத்தப்பட்ட வடமாகாணத்தின் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கு இடையிலான விவாதப் போட்டித் தொடரின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை செவ்வாய்க்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கைலாசபதி கேட்போர் கூடத்தில் நடைபெறும் இவ் வைபவம் தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் ஆகியோர் தலைமையில் நடைபெறவுள்ளது.

## வசதிகள் இன்றி இயங்கும் சனசமூக நிலையங்கள்

வளலாய் கலைக்கதிர் சனசமூக நிலையம் மற்றும் வளலாய் சனசமூகநிலையம் ஆகிய இரு சனசமூக நிலையங்களும் பல்வேறு வசதியீனங்களுடன் இயங்கி வருவதாக சமூக ஆர்வலர்களால் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த சனசமூகநிலையங்களுக்கு போதிய கட்டட வசதிகள் இருந்தும் தளபாடவசதிகள் மற்றும் ஏனைய வசதிகளற்ற நிலையில் காணப்படுவதாகவும் இதன் காரணமாக பொது விழாக்கள் மற்றும் நிகழ்வுகளை நடாத்த முடியாத நிலைகாணப்படுவதாகவும் குறிப்பாக விளையாட்டு உபகரணங்களுக்கும் பற்றாக்குறை உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஏனைய பகுதி சனசமூக நிலையங்கள் பல்வேறு வசதிகளுடன் இயங்கி வருவதுடன் மாணவர் மட்டத்தில் பல் வேறு போட்டிகள் என்பவற்றையும் நடாத்தி வருகின்றன. அதே போன்று இந்தச் சனசமூக நிலையங்களுக்கும் நிதியுதவி மற்றும் பொருளுதவிகளை வழங்கி சிறந்த நிர்வாகக் கட்டமைப்பேணு வதற்கு உரிய தரப்பினர் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என அப்பிரதேச சமூக நலன் விரும்பிகளாலும் இளைஞர்களாலும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (85)

# இடமாற்றம்

(ஆனைக்கோட்டை)

தொகை மதிப்பு புள்ளி[illegible]க்கிளையில் புள்ளிவிபரவியலாளர்களாகக் கடமையாற்றியே[illegible] இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி யாழ்.போதனா வைத்தியசாலையில் பணியாற்றிய எஸ்.சிவசோதி மன்னார் மாவட்ட செயலகத்திற்கும், மன்னார் மாவட்ட செயலகத்தில் கடமையாற்றிய எம்.வித்தியானந்தநேசன், யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கும் புள்ளி விபரத்திணைக்கள தலைமைக்காரியாலயத்திலிருந்து எஸ்.பாலச்சந்திரன் யாழ். போதனாவைத்தியசாலைக்கும் இடமாற்றப்பட்டுள்ளனர். (104)

## முரசின் இன்றைய பலன்

(27.01.2014 திங்கட்கிழமை)



விஜய வருஷம் தை மாதம் 14 ஆம் திகதி.
கேட்டை நட்சத்திரம் மு.இ. 9.28 வரை. பின் மூலம்.
ஏகாதசி / சித்தம். ஏகாதசி விரதம்.
இராகு காலம் 08.06 - 09.36 வரை. சுபநேரம் 12.36 - 02.06 வரை.

ஜோதிர் வித்யா ரத்னா வி.ஏ.சிவராசா அவர்களால் கணிக்கப்பட்டது.

**மேடம்**

தட்டிக் கொடுத்துவேலை வாங்கி இலக்கினை அடையவைத்தல், தேகநலம் விருத்தியடைய யோகா, தியான வகுப்புக்களில் பங்கேற்றல்.

**ரிஷபம்**

தகுதியிருந்தும் பதவி கிட்டாது சதிசெய்தவர்களை நியாயம் கேட்கச் செல்லல், நாவை அடக்காமல் வாயினால் பிரச்சினைகளை ஏற்படுத்தி திண்டாடுதல்.

**மிதுனம்**

மனைவியின் நோய்நிலையால் உளப்பாதிப்படைதல், தகாத உணவினால் உடல் நிறை குறைய முயற்சித்தல்.

**கடகம்**

வாக்குறுதியைக் காப்பாற்ற அதிரடியாகச் செயற்படல், தேவையற்ற சிந்தனைகளால் புண்படல்.

**சிம்மம்**

நிலுவையைப் பெற சட்டத்தை அணுகுதல். வியாபாரத்தில் ஏற்பட்ட போட்டியை வென்றெடுக்க புதிய யுக்தியை கையாளுதல்.

**கன்னி**

கற்பிக்க வீட்டுக்கு வருகைதரும் நபரின் நடத்தையில் சந்தேகம் ஏற்பட்டதால் செயலை விடல், வேலைகளை புறந்தள்ளிவிட்டு நாவல் ஒன்றை வாசித் ததால் கவலைகளிலிருந்து விடுபடல்.

**துலாம்**

சட்டவிரோத போதை வஸ்துக்களால் தண்டம், கவலை ஏற்பட்டதனால் உணவில் விருப்பம் அற்றுப் போதல்.

**விருச்சிகம்**

வைத்திய ஆலோசனையினால் உணவுக்கட்டுப்பாட்டை மதித்தல், குடும்பத்தினருடன் மனம் விட்டுப் பேசியதால் கலகலப்புத் தோன்றல்.

**தனுசு**

பொறுத்த கட்டத்தில் நண்பரின் உதவியால் பிரச்சினையை தீர்த்தல், அச்ச உணர்வு அற்றுப்போய் தெளிவான நிலைக்குள்ளாதல்.

**மகரம்**

முன்பின் அறிமுகமில்லாதவருடன் பேச்சுக் கொடுத்ததால் வில்லங்கம் ஏற்படல், கருத்து முரண்பாடு விலகியதால் தம்பதியர் மத்தியில் சுமுக நிலைதோன்றல்.


**கும்பம்**

பிரச்சினையை வளர்க்காமலிருக்க விட்டுக் கொடுதது்போவதால் நன்மை, பரீட்சைச் சித்தியினால் பதவி கிட்டும் செய்தி வந்தடைதல்.

**மீனம்**

நகைச்சுவைப் பேச்சினால் கவர்ந்து காரியத்தை இலகுவாக முற்றுப்பெறமுயலுதல், விழாக்களில் தம்பதியர் சகிதம் பங்குகொண்டு சிறப்பித்தல்.

# வாவ்ரிங்கா வசம் ஆஸி. ஓப்பன் பட்டம்



(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு சம்பியன் கிண்ணத்தை சுவிஸ்சர்லாந்தின் வாவ்ரிங்கா கைப்பற்றிக்கொண்டார். அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் ஆண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டி நேற்று மெல்பேர்னில் நடைபெற்றது. இதில் உலகில் முதல் நிலை வீரரான நடாலும், 8ஆம் நிலை வீரர் வாவ்ரிங்காவும் மோதினர்.

இரண்டாவது முறையாக அவுஸ்ரேலிய ஓப்பனை வெல்லும் முனைப்புடன் நடாலும், முதல் முறையாக அவுஸ் ஓப்பனை வெல்லும் முனைப்புடன் வாவ்ரிங்காவும் பலப்பரீட்சை நடாத்தினர். முதலிரு செட்களிலும் அசத்தலான ஆட்டத்தை வெளிப்படுத்திய வாவ்ரிங்கா 6-3, 6-2 என்ற செட் கணக்கில் கைப்பற்றி முன்னிலை பெற்றார். மூன்றாவது செட்டில் தனது அனுபவ ஆட்டத்தை வெளிப்படுத்திய நடால் 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி பதிலடி கொடுத்தார். இந்நிலையில் தொடர்ந்தும் நடால் அதிரடியாக ஆடி கிண்ணத்தை வெல்லுவார் என எதிர்பார்க்கப்பட்டது. இருப்பினும் அனுபவ வீரர் போன்று ஆடி நடாலை திணறடித்த வாவ்ரிங்கா நான்காவது செட்டைக் கைப்பற்றி கிண்ணத்தை வென்றார். இறுதியில் வாவ்ரிங்கா 6-3,6-2, 3-6, 6-3 என்ற கணக்கில் கைப்பற்றி முதன் முறையாக அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் கிண்ணத்தைக் கைப்பற்றினார்.

காலிறுதிப் போட்டியில் நடப்பு சம்பியன் ஜோகோவிச்சை வீழ்த்தியதுடன், அரையிறுதிப் போட்டியில் செக் குடியரசின் தோமஸை வீழ்த்திய வாவ்ரிங்கா இறுதிப் போட்டியில் நடாலை சாய்த்து கிண்ணம் வென்றதுடன் நட்சத்திர வீரர் என்ற முத்திரையைப் பதித்துள்ளார். இதுவரை 13 ஆட்டங்களில் நடால், வாவ்ரிங்கா மோதியுள்ளனர். நடாலை முதன் முறையாக வாவ்ரிங்கா தோற்கடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கனவு நிறைவேறியது

### லீனா பெருமிதம்

(மெல்பேர்ன்)

வயது ஒரு பிரச்சினை அல்ல. என்னால் இன்னுமொரு கிராண்ட்ஸ்லாம் வெல்ல முடியும். பிரெஞ் ஓப்பனை விட அவுஸ்ரேலிய ஓப்பன் வென்றதை சிறப்பாகக் கருதுகிறேன்.

என் வாழ்வில் ஒருமுறையாவது அவுஸ்ரேலிய ஓப்பனை வெல்ல வேண்டும் என்ற எண்ணம் நிறைவேறியது. இதற்காக எனது பயிற்றுவிப்பாளர், இரசிகர்கள் அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன் என அவுஸ்ரேலிய ஓப்பன் ரென்னிஸ் தொடரின் பெண்கள் பிரிவில் கிண்ணம் வென்ற சீனாவின் லீனா தெரிவித்தார்.

## தொடரை சமன் செய்வோம்

### டோனி நம்பிக்கை

(ஒக்லாண்ட்)

மூன்றாவது போட்டியை சம நிலை செய்தது, தொடரை சமப்படுத்தும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளதாக இந்திய அணிக் கப்டன் டோனி தெரிவித்தார்.

நியூசிலாந்து, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் மூன்றாவது ஆட்டம் நேற்று முன்தினம் ஒக்லாண்ட்டில் நடைபெற்றது. இப்போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது. இது குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே டோனி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், இந்த ஆட்டத்தில் வெற்றிபெற முடியாவிட்டாலும் சமநிலை செய்தது மகிழ்ச்சிதான். அடுத்து வரும் இரு போட்டிகளிலும்சிறப்பாக ஆடிதொடரை சமன் செய்ய போராடுவோம்.நடுவரிசையில் நாங்கள் நிலைத்து நின்று ஆட முடியாததால் இலக்கை எட்ட முடியவில்லை. துடுப்பாட்ட வீரர் என்ற முறையில் நானும் 48 முதல் 49 ஓவர்கள் வரை களத்தில் இருந்திருக்க வேண்டும். முதலில் துடுப்பாடினால் எப்பொழுதும் 300 ஓட்டங்களுக்கு மேல் குவிக்க முடியும் என்று கருதிவிட முடியாது. அத்துடன் அது பந்து வீச்சாளர்களுக்கும் பெரும் நெருக்கடியைக் கொடுத்துவிடும். சில போட்டி முடிவுகளை வைத்துக் கொண்டு அப்படிச் செய்திருக்கலாம். இப்படிச் செய்திருக்கலாம் என்று கூறலாம். ஆனால், எமது பந்து வீச்சாளர்களின் நிலையை உணர்ந்தும், ஆடுகளத்தின் தன்மையைப் பொறுத்துமே நாங்கள் முடிவெடுக்கின்றோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இரு அணிகளுக்குமிடையிலான நான்காவது போட்டி நாளை நடைபெறவுள்ளது.

## 5 ஓட்டங்களால் வென்றது ஆஸி.



(அடிலெய்ட்)

இங்கிலாந்து அணிக்கெதிரான இறுதி ஒரு நாள் போட்டியில் அவுஸ்ரேலிய அணி ஐந்து ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

அவுஸ்ரேலிய, இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரின் இறுதிப் போட்டி நேற்று அவுஸ்ரேலியாவின் அடிலெய்டில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் ஆடிய அவுஸ்ரேலிய அணி ஆரம்பம் முதலே ஒரு சீரான இடைவெளியில் விக்கெட்டுக்களைப் பறிகொடுத்து வந்தது. இதில் ஜோர்ஜ் பெய்லி ஒரு முனையில் நிலைத்து நின்று அசைச் சதம் அடித்த போதும் அவராலும் தொடர்ந்து தாக்குபிடிக்க முடியவில்லை. இறுதியில் அவுஸ்ரேலிய அணி 50 ஓவர்கள் நிறைவில் ஒன்பது விக்கெட்டுக்களை இழந்து 217 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ஜோர்ஜ் பெய்லி 56, ஷேன் மார்ஷ் 36, மைக்ஸ்வெல் 22, வைட் 31, போல்க்னர் 27 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஸ்ரூவெர்ட் புரொட், ஸ்ரோக்ஸ் ஆகியோர் தலா மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு 218 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய இங்கிலாந்து அணி, மைக்கி, நீல் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இருப்பினும் ரூத் அதிரடியாக ஆடி ஓட்டங்களைக் குவித்தபோதும், ஏனையவர்கள் விரைவாக வெளியேறி ஏமாற்றம் அளித்தனர். இறுதியில் இங்கிலாந்து அணி 49.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 212 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரூத் 55, குக், மோர்கன் ஆகியோர் தலா 39, போபாரா 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் மைக்கி, நில் ஆகியோர் தலா மூன்று, போல்க்னர் இரண்டு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக போல்க்னர், தொடர் நாயகனாக ஆரோன் பின்ஞ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். இதன் மூலம் ஐந்து போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் தொடரை அவுஸ்ரேலிய அணி 4-1 என்ற கணக்கில் கைப்பற்றிக்கொண்டது.

## இலங்கை, பங்களாதேஷ் இன்று முதல் டெஸ்ட்

(டாக்கா)

இலங்கை, பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகளைக் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் ஆட்டம் இன்றைய தினம் பங்களாதேஷின் டாக்காவில் நடைபெறவுள்ளது.

பங்களாதேஷிற்கான கிரிக்கெட் சுற்றுலாவை மேற்கொண்டுள்ள இலங்கை அணி, இரண்டு டெஸ்ட், மூன்று ஒரு நாள் போட்டிகளில் பங்கு கொள்ளவுள்ளது.

இந்நிலையில் இரு அணிகளுக்குமிடையிலான முதலாவது டெஸ்ட்போட்டி இன்று டாக்காவில் நடைபெறவுள்ளது. இப்போட்டி குறித்து கருத்துத் தெரிவித்த இலங்கை அணிக் கப்டன் மத்தியூஸ், பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரில் சிறந்த அனுபவத்தைப் பெற்றிருப்பது பங்களாதேஷ் அணியுடனான தொடரை வெல்ல பெரும் துணை புரியும்.

பந்து வீச்சு, துடுப்பாட்டம் என இரண்டு துறைகளிலும் இளம் வீரர்கள் சிறப்பாக செயற்பட்டு வருவது மகிழ்ச்சி அளிக்கின்றது. இருப்பினும் இளம் வீரர்கள் தமது திறனை தொடர்ந்தும் பேணி அணியில் நிரந்தர இடத்தைப் பிடிக்க முயற்சிக்கும் பட்சத்திலேயே அவர்களுக்கான இருப்பு உறுதிப்படுத்தப்படும் அதேவேளை, அணியும் பலம் பெறும் எனத் தெரிவித்தார்.

## மயிர்கூச்செறியும் சாண்டோ நிகழ்வு



அந்தரத்தில் நிற்கும் ஞானேஸ்வரன், ஜெகதீசன் ஆகியோர் மார்பில் கல்லுடைத்தல்



கன்ரர் ரக வாகனத்தை கௌசிகன் தனது வெற்றுடம்பில் ஏற்றுதல்



அஜேந்திரன் மோட்டார் சைக்கிளை தூக்கி சுழற்றுகிறார்.



20 கிலோ இரும்புக் குண்டை 10 அடி உயரத்திலிருந்து வயிற்றில் தாங்கும் இராஜதீபன்.



பயணிகளுடன் உழவு இயந்திரத்தை தனது மார்பில் ஏற்றும் ஞானச்சந்திரன்



20 கிலோ இரும்புக் குண்டுடன் தலை கீழாக ஏறும் சிவமோகன்.



இரும்பு பட்டத்தை சுருளாக்கும் ஐங்கரன்



வாயினால் மோட்டார் சைக்கிளை தூக்கும் ஞானச்சந்திரன்



ஒன்றின் மேல் ஒன்றாக படுத்து மார்பில் கல்லுடைத்தல்

பொலிகண்டி பாரதி விளையாட்டுக்கழகத்தின் 61ஆவது வருடாந்த விளையாட்டுப் போட்டி அண்மையில் கழக மைதானத்தில் நடைபெற்றது. இதன்போது மயிர்க் கூச் செறியும் சாண்டோ நிகழ்வுகளை பாரதி விளையாட்டுக்கழக வீரர்கள் செய்து அசத்தினர். இவ்வீர விளையாட்டுக்களை த. பரமானந்தன் பயிற்றுவித்து நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது. (படங்கள்:கே.கே. வீசிந்தன்)

# யூனியஸ் சதம்; சௌமிதரன் சிறப்பு பந்துவீச்சு

# யாழ். மத்தி பெரு வெற்றி



யூனியஸ்



சௌமிதரன்

(யாழ்ப்பாணம்)

யூனியஸ் கனிஷ்டன் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் யாழ். மத்திய கல்லூரி இனிங்ஸ் மற்றும் 228 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் போட்டித் தொடரின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணிக்கும், யாழ். மத்திய கல்லூரி அணிக்குமிடையிலான ஆட்டம் கடந்த 20,21ஆம் திகதிகளில் யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ். மத்திய கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சௌமிதரன், நிருபன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திணறியது. இருப்பினும் சுஜிகரன் கம்ஸன் ஆகியோர் பொறுப்புடன் ஆடினர். இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 113 ஓட்டங்களைப் பெற்றது. இதில் சுஜிகரன் 30, கம்ஸன் 27, விது 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சௌமிதரன் ஐந்து, நிருபன் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ். மத்திய கல்லூரி அணி யூனியஸ் கனிஷ்டன், நிரோஜன் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் யாழ். மத்திய கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 411 ஓட்டங்களைப் பெற்றது. இதில் யூனியஸ் கனிஷ்டன் 144 பந்துகளை எதிர்கொண்டு நான்கு சிக்ஸர்கள், 13 பவுண்டரிகள் அடங்கலாக 141, நிரோஜன் 87 பந்துகளை எதிர்கொண்டு 73, நிருபன் 44, சௌமிதரன் 26, மதுஷன், ஜெயந்திரன் ஆகியோர் தலா 36 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் விது நான்கு, பிளமிங் மூன்று விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

298 ஓட்டங்கள் பின்னிலையில் இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி சௌமிதரன், மதுஷன் ஆகியோரின் பந்து வீச்சுக்கு ஈடுகொள்ள முடியாமல் மளமள வென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அணி இரண்டாவது இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 70 ஓட்டங்களைப் பெற்றது. இதில் விதுன் 34 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் சௌமிதரன் ஐந்து, மதுஷன் நான்கு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் யாழ். மத்திய கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 228 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (எஸ்.பி.)



## கைதடி எருதிடல் அ.த.க. மெய்வல்லுநர்

## சின்னத்தம்பி இல்லம் முதலிடம்

கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையின் இல்ல மெல்வல்லுநர் போட்டியில் சின்னத்தம்பி இல்லம் முதலிடத்தைப் பிடித்துள்ளது. கைதடி எருதிடல் அ.த.க. பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நேற்று முன்தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெற்றது. இதில் வீர,வீராங்கனைகள் சின்னத்தம்பி, நடேசன் என இரு இல்லங்களாகப் பிரிக்கப்பட்டு போட்டிகள் நடைபெற்றது. இதில் சின்னத்தம்பி இல்லம் 178 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தையும், நடேசன் இல்லம் 157 புள்ளிகளைப் பெற்று இரண்டாமிடத்தையும் பிடித்துக் கொண்டது. பாடசாலை அதிபர் ந. ஜெயரூபன் தலைமையில் நடைபெற்ற இப்போட்டி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் சு. கிருஸ்ணகுமார், சிறப்பு விருந்தினராக தென்மராட்சிவலய ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகர் அ. மனோரஞ்சிதன், கௌரவ விருந்தினர்களாக நவபுரம் துர்க்கை அம்மன் தேவஸ்தானத் தலைவர் மு. பரமேஸ்வரன், நவபுரம் நவ சனசமூக நிலையத் தலைவர் மு. சிவராசா, நவபுரம் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவர் சி. மகாராசா, நவபுரம் மாதர் சங்கத் தலைவி திருமதி. ம. சண்முகலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர். (51,90)

## ஊரெழு கணேசா வித்தியின் இல்ல மெய்வல்லுநர்

(அச்சுவேலி)

ஊரெழு கணேசா வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்றைய தினம் பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

வித்தியாலய அதிபர் சி.திரிகரன் தலைமையில் நடைபெறவுள்ள இப்போட்டி நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணக் கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் சண். தயாளன், சிறப்பு விருந்தினராக ஏரெழு கிளானைப்பதி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவர் இ. திருச்செல்வம், கௌரவ விருந்தினராக வித்தியாலயத்தின் பழைய மாணவரும், நீதவானுமான ப. இராசேந்திரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இப்போட்டி நிகழ்வில் பெற்றோர், நலன் விரும்பிகள், ஆர்வலர்களைக் கலந்து கொண்டு போட்டியாளர்களுக்கு உற்சாகமூட்டுமாறு போட்டி ஏற்பாட்டாளர்கள் கேட்டுள்ளனர். (03)

# வலய மட்ட கால்பந்து

## தேவரையாளி, உடுப்பிட்டி, நெல்லியடி ம.ம.வி. சம்பியன்

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கால்பந்தாட்டத் தொடரின் சம்பியன் பட்டத்தை தேவரையாளி இந்துக் கல்லூரி, நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணிகள் கைப்பற்றிக் கொண்டது.

வடமராட்சிப் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலய மட்ட கால்பந்தாட்டப் போட்டி கடந்த 13ஆம் திகதி இமையாணன் மத்தி விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

15, 17, 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதி மற்றும் மூன்றாமிடத்திற்கான போட்டிகள் நடைபெற்றது.

இதில் 15 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் கொற்றவத்தை அமெரிக்கன் மிஷன் பாடசாலை அணியும், தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும் மோதின. இரு அணிகளும் ஒன்றுக்கொன்று சளைத்தவை அல்ல என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஆடின. இறுதியில் 1-1 என்ற கோல் கணக்கில் இப்போட்டி சமநிலையில் நிறைவுபெற்றது. பின்னர் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 4-2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் மணற்காடு றோமன் கத்தோலிக்க பாடசாலை அணியும் பருத்தித்துறை ஹட்லிக் கல்லூரி அணியும் மோதின. இதில் மணற்காடு றோமன் கத்தோலிக்கப் பாடசாலை அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

17 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் மோதின. இதில் ஆரம்பம் முதலே ஆதிக்கம் செலுத்திய நெல்லியடி மத்திய மகாவித்தியாலய அணி 2-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று வலய மட்ட சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக்கொண்டது.

மூன்றாமிடத்திற்கான போட்டியில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும், கரவெட்டி விக்னேஸ்வரா பாடசாலை அணியும் மோதின. இதில் தேவரையாளி இந்துக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது.

19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இறுதிப் போட்டியில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய அணியும், உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணியும் மோதின. இதில் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி அணி 2-1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

தொடர்ந்து நடைபெற்ற மூன்றாமிடத்திற்கான போட்டியில் பருத்தித்துறை ஹட்லிக் கல்லூரி அணியும், தேவரையாளி இந்துக் கல்லூரி அணியும் மோதின. இதில் இரு அணிகளும் சமபலத்துடன் மோதியதால் கோல் எதனையும் பெற்றுக்கொள்ளவில்லை. இறுதியில் தண்ட உதை மூலம் வெற்றி தோல்வி தீர்மானிக்கப்பட்டது. இதில் பருத்தித்துறை ஹட்லிக் கல்லூரி அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று மூன்றாமிடத்தைப் பிடித்துக் கொண்டது. (93)

# சுஜீதரன் சிறப்புப் பந்து வீச்சு

# ஸ்கந்தா இனிங்ஸ் வெற்றி



சுஜீதரனின் சிறப்பான பந்து வீச்சின் மூலம் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இனிங்ஸ் வெற்றிபெற்றது.

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடாத்தப்பட்டு வரும் பிரிவு மூன்றின் 19 வயதுப் பிரிவு அணிகளுக்கிடையிலான இரண்டு நாள் இனிங்ஸ் கிரிக்கெட் போட்டியின் முதல் சுற்று ஆட்டங்கள் தற்போது நடைபெற்று வருகின்றது.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணிக்கும், சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணிக்குமிடையிலான ஆட்டம் கடந்த 24,25ஆம் திகதிகளில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதற்கமைய முதல் இனிங்ஸிற்காக ஆடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி ரசிகரன், துவாரகன் ஆகியோரின் பொறுப்பான துடுப்பாட்டத்தின் மூலம் வலுவான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றது. இறுதியில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 208 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ரசிகரன் 59, துவாரகன் 40, கதேஜன் 20 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் டிலக்ஷன் மூன்று, கஜானன், கீர்த்தனன், ரவிவர்மன் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். பதிலுக்கு முதல் இனிங்ஸிற்காக களமிங்கிய வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி சுஜீதரனின் பந்து வீச்சிற்கு ஈடுகொடுக்க முடியாமல் மளமளவென விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி முதல் இனிங்ஸிற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 87 ஓட்டங்களைப்பெற்றது. இதில் மாதவரூபன் 29, கீர்த்தனன் 12 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் சுஜீதரன் நான்கு, ஜனக்ஷன், பாலப்பிரிசாந் ஆகியோர் தலா இரு விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி 121 ஓட்டங்கள் பின்னிலையில் இருந்தமையால் ஸ்கந்தவரோதயக் கல்லூரியினால் மீண்டும் துடுப்பாட அழைக்கப்பட்டது. இதற்கமைய இரண்டாவது இனிங்ஸிற்காக களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி அணி சுஜீதரன், ஜனக்ஷன் ஆகியோரின் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாமல் திறணியதுடன் விரைவாக விக்கெட்டுக்களைப் பறிகொடுத்தது. இறுதியில் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அணி இரண்டாவது இனிங்ஸீற்காக சகல விக்கெட்டுக்களையும் இழந்து 104 ஓட்டங்களைப் பெற்றுத் தோல்வியைத் தழுவியது. இதில் நிலக்ஷன் 25, ரவிவர்மன் 24 ஓட்டங்களைப் பெற்றனர். பந்து வீச்சில் ஜனக்ஷன், சுஜீதரன் ஆகியோர் தலா ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். இதன் மூலம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி இனிங்ஸ் மற்றும் 17 ஓட்டங்களால் வெற்றிபெற்றது. (48)

# அனந்திக்கு விழுந்த அதிர்ஷ்டலாபச் சீட்டு!

- டி.பி.எஸ். ஜெயராஜ் கட்டுரையிலிருந்து.

தேர்தலுக்கு முன்; அனந்தி மனித உரிமை செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தாலும் கூட அதைப் பயன் படுத்தி வெளிநாடுகளுக்கு




செல்லும் வழிகளுக்கான முயற்சியையும் ஆரம்பித்திருந்தார். அவர் பயன்படுத்திய வழிகளில் ஒன்று சுவிட்சர் லாந்து நாட்டில் அரசியல் தஞ்சம் கோர அவர் செய்த முயற்சியாகும். எல்.எல்.ஆர்.சி முன்னால் ஆஜராகிய பின்னர் தான் துன்புறுத்தலுக்கு உள்ளாகக்கூடும் என்கிற காரணத்தை அவர் கூறியிருந்தார். இலங்கையில் இருந்து விண்ணப்பிக்கப்பட்ட இந்த புகலிட விண்ணப்பம் சுவிஸ் அதிகாரிகளினால் நிராகரிக்கப்பட்டது. பின்னர் ஜெனிவாவுக்கு சென்று, ஐ.நா. மனித உரிமைகள் சபைக்குப் பக்கத்தில் ஒரு தொண்டு நிறுவனம் அனுசரணை வழங்கியிருந்த ஒரு கூட்டத்தில் பங்கு பெறுவதற்கான ஒரு வாய்ப்பு அவரைத் தேடி வந்தது. அனந்தி முன்னர் சுவிட்சர் லாந்தில் தஞ்சம் கோரி விண்ணப்பித்து அது நிராகரிக்கப் பட்டிருந்த காரணத்தால், சுவிட்சலாந்துக்குள் நுழைவதற்கான வீசா அவருக்கு வழங்கப்படவில்லை. அவருடைய ஜெனிவா நம்பிக்கை இப்படியாக முடிந்து போனது.

வடமகாணசபைக்கான தேர்தல்கள் நடப்பது நிச்சயம் என உறுதியான பின்னர் வாய்ப்புக்கான மற்றொரு கதவு அவர்முன் விரியத் திறந்தது. இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச். செயலாளர் மாவை சேனாதிராஜா அனந்தியை அணுகி அவரை ரி.என்.ஏ வேட்பாளராக போட்டியிடும்படி கேட்டுக் கொண்டார். அதற்கு அனந்தி உடனடியாகவே சம்மதம் தெரிவித்தார். ஆனால், ரி.என்.ஏ தலைவர் இராஜவ ரோதயம் சம்பந்தன் அவரது முயற்சிக்கு ஆட்சேபனை தெரிவித்தார். அதன்பின்னர் அனந்தி சார்பாக சிறிதரனின் தலையீடு வந்தது. சிறி தரனின் உறுதிப்பாட்டால் பலம் பெற்ற சேனாதிராஜா சம்பந்தனின் ஆட்சேபனைகளை அலட்சியம் செய்து எழிலனின் மனைவி அனந்திக்கு ரி.என்.ஏ வேட்பாளராக நியமனத்தை வழங்கினார்.

வட மாகாணசபைக்கான தேர்தல் ரி.என்.ஏ க்குள் தீவிர வேறுபாடுகள் ஏற்படுவதற்கு வழி வகுத்தது. முன்னாள் தலைமை நீதியரசர் சி.வி. விக்னேஸ்வரன் முதலமைச்சர் வேட்பாளருக்கான ஏகமனதான தெரிவு என்று இறுதியாக முடிவு செய்யப்பட்டாலும்கூட, சேனாதிராஜாவை வேட்பாளர் ஆக்குவதற்கான பரவலான ஆதரவு கட்சிக்குள் இருந்தது. இது ஒற்றுமை என்கிற முகப் பின் கீழ் திரைமறைவில் பல சதிகளுக்கு வழி ஏற்படுத்தியது. விக்னேஸ்வரனுக்கு எதிரான அடிமட்டத்தில் மனக்கசப்புக்கள் நிலவத்தான் செய்தன. விக்னேஸ்வரனுக்கு எதிரான இந்த பகைமைத் தீக்கு புலம் பெயர் பகுதியில் இருக்கும் தீவிரவாதிகள் சிலர் நன்றாக எண்ணெய் ஊற்றினார்கள்.

இது விக்னேஸ்வரனுக்கு பகையான சக்திகள் ஒன்று சேர்வதற்கு ஒரு வழி சமைத்தது. அவர்களின் திட்டம் என்னவென்றால் மற்றொரு வேட்பாளரின் வெற்றி வாய்ப்பை பெருகச் செய்து அந்த நபர் விக்னேஸ்வரனைக். காட்டிலும் அதிக விருப்பு வாக்குகளைப் பெறச் செய்வது என்பதாகும். இது விக்னேஸ்வரனுக்கு அவமானத்தை ஏற்படுத்தும். அதன்படி அதிக விருப்பு வாக்குகளைப் பெற்றவருக்குத் தான் முதலமைச்சர் பதவியை வழங்கவேண்டும் என்கிற கோரிக்கையை எழுப்பவும் முடியும்.

ஆரம்பத்தில் அதற்காக முன்னாள் யாழ். மாநகரசபை ஆணையாளர் சி.வி.கே. சிவஞானம் மற்றும் எம்.கே. சிவாஜிலிங்கம் ஆகியோர் விருப்பு வேட்பாளருக்கான முடிசூட்டிக்கொள்ளத் தகுதியான வேட்பாளர்களாக ஆலோசிக்கப் பட்டார்கள். இறுதியாக அதற்கு சாதகமான வேட்பாளராக அனந்தி சசிதரனை குறிகாட்டி தேர்வு செய்தது. ஒரு மூன்று பிள்ளைகளின் தாய் அவரது கணவர் காணாமற் போயுள்ளார். எனவே அனந்தி பெண்கள் இடையே கவனத்தை கவருவார் என எண்ணப்பட்டது. தவிரவும் ஒரு மனைவி தனது கணவனின் உயிருக்காக போராடுவது அல்லது அவர் சார்பாக நீதி கோருவது தமிழ் மனங்களில் அனுதாப அலைகளை எழுப்பும்.

ஒரு புறத்தில் விக்னேஸ்வரனுக்கு குழிபறிக்க நினைப்பவர்கள் அனந்திக்கு பின்துணை நல்கும் அதேவேளை மறுபுறத்தில் புலிகளின் தீவிர ஆதரவு சக்திகள் மற்றொரு காரணத்துக்காக அவருக்கு ஆதரவு வழங்க முடிவு செய்திருந்தன. எழிலனின் மனைவியாக உள்ளதால் அவர் புலிகளுடன் இருப்பதாக இனங்காணப்படுவார். அவர் விருப்பு வாக்குகளைப் பெறுவதில் முன்னிலை பெற்றால், அப்போது அந்த வெற்றி புலிகளின் வெற்றியாக சித்தரிக்கப் படுவதுடன் எல். ரீ.ரீ.ஈ. இற்க்கும் நீதி கிடைக்கும். மூன்றாவது பகுதியினரின் சிந்தனை என்னவென்றால் தங்களது ஆதரவை அனந்திக்கு வழங்குவது எதனாலென்றால் அவரது வெற்றி, உலக அபிப்பிராயம் என்கிற தீர்ப்பாயத்தின் முன் ராஜபக்ஸவின் ஆட்சிக்கு எதிரான குற்றப் பத்திரத்தை தேடும் சர்வதேச சக்திகளின் கரத்தை பலப்படுத்தும் என்பதற்காக என்றிருந்தது.

அதன்படி அனந்தி சசிதரனின் தகுதியை அதிகரிக்கச் செய்து அதிகபட்ச விருப்பு வாக்குகளை அறுவடை செய்வதற்காக நன்கு ஆதரவு தேடும் பிரச்சாரத்துக்கான மேடை தயார் செய்யப்பட்டது. அபரிமிதமான பத்திரிகை விளம்பரங்கள், கண்ணைக்க வரும் வர்ணச் சுவரொட்டிகள், அனந்தி சார்பான ஏராளமான துண்டுப் பிரசுரங்கள், கொடிகள் என்பன நாளாந்தம் வெளிவந்தன. ஒலிபெருக்கிகள் பொருத்தப்பட்ட வாகனங்கள் நவீன தமிழ்த்தேசியப் பாடல்கள் மற்றும் சுலோகங்களை முழங்கியவாறே அனந்திக்கு ஆதரவு தேடி யாழ். வீதிகளை வலம் வந்தன. அனந்திக்காக வேலை செய்யும் தொண்டர்களுக்கு உணவு சிற்றுண்டிகள், போக்குவரத்து என்பனவற்றுடன் நாளொன்றுக்கு 500 ரூபா



பணமும் கொடுப்பனவாக வழங்கப்பட்டதாகச் சொல்லப் படுகிறது. மறைவான சில கரங்கள் அந்தப் பிரச்சாரங்களுக்கு நிதி வழங்கியிருப்பது வெளிப்படையாகவே தெரிகிறது. வெளிநாட்டிலுள்ள தனது உறவினர்கள் தனக்கு உதவி செய்வாக அனந்தியே மக்களிடம் கூறியுள்ளார்.

விக்னேஸ்வரனுடைய பின்துணையாளர்கள் மற்றும் அனந்தியின் ஆதரவாளர்கள் இடையேயான பனிப்போர் பிரச்சாரத்தின் போது விரிவடைவதைக் காணக்கூடியதாக இருந்தது. விக்னேஸ்வரன் தோன்றும் அதே மேடையில் அவருடன் அனந்தி தோன்றாமல் தடுப்பதற்கு மிக் கவனமான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. ஒரு மேடையில் விக்னேஸ்வரன் வருவதற்கு முன்பாகவே அனந்தி தனது பேச்சை முடித்துக் கொண்டு வேறு மேடைக்கு செல்லத்தக்க விதத்தில் நிகழ்ச்சித் திட்டங்கள் வகுக்கப்பட்டிருந்தன. இறுதிச் சுற்று கூட்டம் முடிவுறும் வரைக்கும் இந்த நடைமுறை தொடர்ந்தது. மேலும் தேர்தல் மேடைகளில் பேசுவதற்கான நேரம் அனந்திக்கு போதாமல் இருந்தது, ஆனால் ஒரு சாதாரண செய்தியை வெளியிடுவதன் மூலம் அவர் அதை தனக்கு சாதகமாகப் பயன்படுத்தி அதைச் சமாளித்தார்.

அனந்தி சசிதரன் தன்னை எழிலனின் மனைவி என்று அறிமுகம் செய்தார். பின்னர் அவர் தனது கணவரும் ஏனைய மூத்த புலித் தலைவர்களும் எவ்வாறு சரணடைந்து பின் காணாமற் போனார்கள். என்பதை விளக்கினார். தனது பிள்ளைகளுக்கு தகப்பன் இல்லை எனக்கு இப்போது கணவர் இல்லை என்று அவர் சொன்னார். என்னைப்போல பலர் உள்ளார்கள் என்ன நடந்தது என்கிற உண்மையை என் சார்பாகவும் மற்றும் என்னைப் போன்றவர்கள் சார்பாகவும் கண்டுபிடிக்க விரும்புகிறேன். தான் தெரிவானால், தான் நீதிக்காகப் போராடப் போவதாகவும் மற்றும் அதற்குப் பொறுப்பானவர்களை சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்தி தண்டனையை எதிர்கொள்ள வைக்கப் போவதாகவும் அவர் சொன்னார். இந்த சாதாரண பேச்சு மிகவும் பயனுள்ளதாக இருந்தது. யாழ். மாவட்டத்தில் ரி.என்.ஏ வேட்பாளர்களில் அனந்தி மட்டுமே ஒரேயொரு பெண் வேட்பாளராக இருந்ததும் ஒரு தற்செயலான சம்பவம்.

## மாரடைப்புக்கு குட்-பை



- பச்சைப் பட்டாணியை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- உணவுகளைத் தயாரிக்கும் போது சூரியகாந்தி எண்ணெயைப் பயன்படுத்துவது நலம்.
- கொழுப்பு சத்துக்கள் அதிகமுள்ள அசைவ உணவைக் குறைத்துக் கொள்ள வேண்டும்.
- தேங்காயைத் தவிர்க்க வேண்டும்.
- உருளைக்கிழங்கு, குளிர்பானங்கள் முதலியவற்றை சாப்பிடுவதை முற்றிலும் தவிர்ப்பது நல்லது.
- பச்சை வெங்காயத்தை அடிக்கடி சேர்த்துக் கொள்ள வேண்டும்.
- மலச்சிக்கல் வராது பார்த்துக் கொள்ள வேண்டும்.
- காலையில் காற்றோட்டமான இடத்தில் காலாற நடக்க வேண்டும்.
- துளசி இலையை மென்று சாப்பிட்டு வருவது நல்ல பலன் தரும்.
- உழுத்தம் பருப்பைக் களியாகக் கிண்டி சாப்பிட்டு வரலாம்.
- பூண்டை நசுக்கி வாயில் போட்டுக் கொண்டு, வெந்நீரை குடித்து வர மாரடைப்பு வராது.

## மயில்!



- சீனாவிலுள்ள சஸ்ஸா நகரம் மயில்களுக்குப் பெயர் பெற்ற நகரமாகும்.
- ஜப்பான் நாட்டு மயில்கள் சிவப்பு நிறத்தில் முட்டையிடும்.
- இந்தியாவுக்கு 4000 ஆண்டுகளுக்கு முன்பு மெசோபடேமியா வழியாக மயில்கள் கொண்டு வரப்பட்டன.
- தமிழ்நாட்டில் விராலி மலையில் மயில்கள் சரணாலயம் உள்ளது.
- ஆங்கிலத்தில் Peacock எனப்பெயர் வரக் காரணம் : தமிழகம் மற்றும் இலங்கையில் இருந்து மயில் தோகையை இறக்குமதி செய்து வந்தனர் அரேபியர். தமிழ் தோகை, அரபிய மொழியில் tawus ஆகியது. அங்கிருந்து கிரேக்கத்திற்கு சென்ற மயில் தோகை, அங்கு pfau ஆக மாறியது. அது லத்தீன் மொழியில் பேவோ ஆக மாறியது. அதிலிருந்து ஆங்கிலத்தில் பேவ் எனவும், பின்னர் Peacock எனவும் மருவியது.



# சினிமா துளிகள்...

ஒருவன்". 1965ஆம் ஆண்டில் வந்த இப்படம் கடற்கொள்ளையர்களை மையமாக வைத்து தென்னிந்தியாவில் வெளிவந்த முதல் படம் என்ற பெருமையை பெற்றது. எம்.ஜி.ஆருடன் இணைந்து முதல்வர் ஜெயலலிதா நடித்த முதல் படமும் இதுவாகும்.

✧ தன் முதல் மனைவி சூசனை விவாகரத்து செய்து விட்ட ஹிந்தி நடிகர் ஹிருத்திக் ரோஷன், அவருக்கு 100 கோடி ஜீவனாம்சமாக கொடுத்து உள்ளார்.

✧ நடிகர் தனுஷ் சிவகார்த்திகேயன் நடித்த "எதிர்நீச்சல்" படத்தைத் தயாரித்தார். தற்போது தானே நடிக்கும் "வேலையில்லா பட்டதாரி" படத்தைத் தயாரிக்கிறார். "பாண்டிய நாடு" மூலம் தயாரிப்பாளரான விஷால் தற்போது "நான் சிவப்பு மனிதன்" நடித்து, தயாரிக்கிறார். ஆர்யா ஏற்கெனவே சுகா இயக்கத்தில் "படித்துறை" படத்தைத் தயாரித்து உள்ளார். சூர்யா "டி2" பெயரில் தயாரிப்பு நிறுவனத்தைத் தொடங்கியுள்ளார். விஜய் சேதுபதி "சங்குதேவன்" மற்றும் புதுமுகங்கள் நடிக்கும் "ஆரஞ்சு மிட்டாய்" படத்தையும் தயாரிக்கிறார்.

✧ வேலையில்லா பட்டதாரி படத்தில் நடித்துவரும் அமலாபால், தனுஷின் நடிப்பாற்றல் குறித்து, குட்டி பிரசங்கமே நடத்தி வருகிறார். "இவர் மாதிரி நடிகர்களுடன் ஓரிரு படத்தில் நடித்தாலே, உடன் நடிப்பவர்களின் திறமையும் மெருகேறும்... இனி நானும் குறிப்பிடத்தக்க நடிகையாகி விடுவேன். அந்த அளவுக்கு, பூவோடு சேர்ந்த, நாரும் மணப்பதுபோல், என் திறமையும் பளிச்சிடும்..." என்று தனுஷ்புராணம் பாடுகிறார்.

✧ பொங்கலுக்கு வெளியாவதில் இருந்து தள்ளிப் போன ரஜினியின், கோச்சடையான் படத்தை, தமிழ் புத்தாண்டு அன்று வெளியிடத் திட்டமிட்டுள்ளனர்.

✧ ஜில்லா படத்தையடுத்து, மீண்டும் ஏ.ஆர். முருகதாஸ் இயக்கும் படத்தில் நடிக்கிறார் விஜய். இப்படமும், துப்பாக்கி படம் போன்று, தீவிரவாதம் சம்பந்தப்பட்ட கதையில் உருவாக இருக்கிறது.

✧ "ஐ" படத்தையடுத்து, ஷங்கர் இயக்கவிருக்கும் சரித்திரப் படத்தில், கர்ணன் வேடத்தில் மம்முட்டி நடிக்கிறார்.


✧ தமிழ் தெலுங்கு முன்னணி ஹீரோக்களின் படத்தில் நடித்ததோடு, கடந்த ஆண்டு அதிக படங்களில் நடித்தவர் என்ற பெயரை நயன்தாரா பெற்றிருக்கிறார். இதற்கிடையில் இயக்குநர் பாண்டிராஜ் தன் படத்தில் சிம்புவுக்கு ஜோடியாக நடிக்க தேவதை போன்ற பெண்ணைத் தேடி வருவதாகக் கூறி இருந்தார். தேவதை என்றால் அது நயன்தான் என்று சிம்பு சொன்னாராம். முதலில் தயங்கிய நயன்தாரா, முடிவில் சில நிபந்தனைகளுடன் நடிக்க சம்மதித்தார். காதல் முறிவுக்குப் பின் இப்போதுதான் சிம்பு - நயன் இருவரும் சந்தித்துக் கொள்கிறார்கள்.

✧ தமிழ், தெலுங்கு, மலையாளம், ஹிந்தி மொழிகளில் நடித்து பத்தாண்டுகளை நிறைவு செய்து விட்ட த்ரிஷாவுக்கு இப்போதுதான் கன்னட வாய்ப்பு கிட்டியிருக்கிறது. புனித் ராஜ்குமார் ஜோடியாக நடிக்கிறார். இதே படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாட நீது சந்திராவை இயக்குநருக்கு சிபாரிசு செய்துள்ளாராம் த்ரிஷா.















✧ அமீர்கானின் மனைவி கிரண்ராவ். சினிமா கதை திரைக்கதை எழுவதில் வல்லவர். எழுதி முடிக்கும் வரை கணவரிடம் காட்டவே மாட்டாராம்.

✧ ரமேஷ் அரவிந்த் இயக்கத்தில் கமலை நடிக்க வைத்து தான் தயாரிக்கும், உத்தமவில்லன் படத்தில் நடிக்க, காஜல் அகர்வாலுக்கு இரண்டு கோடி சம்பளம் பேசியுள்ளார் லிங்குசாமி.

✧ மூன்றாண்டுகளுக்கும் மேலாக சினிமாவை விட்டு ஒதுங்கியிருந்த வடிவேலு நடிக்கும் புதிய படம் "ஜெகஜால புஜபல தெனாலிராமன்". இதன் ஒரே ஒரு கனவுப் பாடலுக்காக மட்டுமே படக்குழு சீனா செல்கிறது. சீன நடனக் கலைஞர்களுடன் வடிவேலு, மீனாட்சி தீக்ஷித் பங்கேற்கும் பாடல் காட்சி படமாக்கப்பட உள்ளது.

✧ கடந்த டிசம்பர் மாதம் 24ஆம் திகதி வெளியான ஜாக்கிசானின் "போலீஸ் ஸ்டோரி 2013" இதுவரை காணாத அதிக வசூலை வாரி குவித்துள்ளது. "ரிஸ்க் எடுத்து இனி ஆக்ஷன் படங்களில் நடிக்கப் போவதில்லை" என கடந்த ஆண்டு அறிவித்த ஜாக்கிசானின் கடைசி ஆக்ஷன் படம் இது.

✧ கர்ணன், "வசந்த மாளிகை", "நினைத்தாலே இனிக்கும்" படங்களின் வரிசையில் டிஜிட்டல் தொழில்நுட்பத்தில் வெளிவர இருக்கிறது "ஆயிரத்தில் ஒருவன்".

# மக்களை முடமாக்கி பிழைப்பு நடாத்தும் காலாவதியான பொருட்களின் விற்பனை கலாசாரம்

- சாலையூரான் -

மக்கள் அன்றாடம் நுகரும் உணவுற்பத்திகளில் காலாவதியானவற்றையும் விற்று தமது வியாபார முயற்சிகளில் முன்னேற முடியும் என சிந்திக்கும் போக்கு நாடுமுழுவதும் பரவலாக விநியோகங்களில் ஈடுபட்டிருக்கும் வர்த்தகர்கள் மத்தியில் இப்போது உருவெடுத்திருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு வர்த்தக நிலையம் அல்லது குறிப்பிட்ட ஒரு பிரதேசம் என்ற வரையறைகளையெல்லாம் கடந்து நாடு முழுவதுக்குமான விநியோகங்களை மேற்கொள்ளும் உற்பத்தி நிறுவனங்கள் கூட இந்தக் காலம் கடந்துபோன தமது உற்பத்திகளை எப்படியாவது விற்றுத்தீர்த்து தமது நோக்கங்களை அடைந்துகொள்ள வேண்டும் என்ற நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பது அதிகாரிகள் மேற்கொண்ட சோதனைகளில் தெரியவந்திருக்கிறது.

அதிகரித்த உற்பத்தி செலவினங்களால் குறித்த ஒரு உற்பத்தியை குறிப்பிட்ட அளவுக்கு கீழ் குறைக்க முடியாது என்ற நிலைக்கு இந்த உற்பத்தி நிறுவனங்கள் தள்ளப்பட்டிருப்பதும், அதிகரித்துவிட்ட வாழ்க்கைச் செலவினங்களால் குறித்த விலைகளில் இந்த உற்பத்திகளை வாங்க முடியாத நிலைக்கு மக்கள் தள்ளப்பட்டிருப்பதும் சேர்ந்து காலாவதியாகும் உற்பத்திகளுக்கான மோசடி வர்த்தகத்துக்கு இப்போது வழியை திறந்துவிட்டிருக்கின்றன.

கொழும்பு புறக்கோட்டை, மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளில் நுகர்வோர் பாதுகாப்புச் சபையின் அதிகாரிகள் மேற்கொண்ட தேடுதலில் மனித பாவனைக்குதவாத பல ஆயிரக்கணக்கான கிலோகிராம் தானியங்கள், கிழங்கு வகைகள் கைப்பற்றப்பட்டிருப்பதில் இந்த மோசடி வர்த்தகத்தின் அடிமூலங்கள் வெளிப்பட்டிருக்கின்றன. கூடவே, பதப்படுத்தப்பட்ட இறைச்சி வகைகள், தகரத்தில் அடைக்கப்பட்ட, பொதியிடப்பட்ட பல்வேறு உணவுற்பத்திகள் பெரும் தொகையில் சுப்பர் மார்க்கெட் நிலையங்களிலிருந்து அதிகாரிகள் பெருமளவில் கைப்பற்றியுள்ளனர்.



செயற்கையான தட்டுப்பாட்டை ஏற்படுத்தி பொருட்களின் விலைகளை உயர்ந்த மட்டத்தில் பேண வர்த்தகர்கள் மேற்கொண்ட தவறான முயற்சிகளால் உரியகாலத்தில் இந்த உற்பத்திகளை மக்கள் பாவனைக்கு விநியோகிக்க முடியாமற் போயிருப்பதும் அதிகாரிகள் மேற்கொண்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மொத்த வியாபாரத்துக்கான முயற்சியிலேயே இந்த முறைகேடுகள் இடம்பெற்றிருப்பதால் இதன் கீழ்வரும் சில்லறை வர்த்த நிலையங்களும் வியாபாரிகளும் இக்காலாவதியான பொருட்களை குறைந்த விலைக்கு பெற்று காலாவதித் திகதிகளை மாற்றிக்கொண்டு இந்த மக்களுக்கு விற்றுத் தீர்த்து பிழைப்பு நடாத்துவதும் இதில் அம்பலமாகியுள்ளது.

கொள்ளை இலாபம் சம்பாதிக்கும் மோசடி வியாபாரம், அதன் வளர்ச்சியாக நுகர்வுக்குத் தகுதியில்லாதவற்றை மக்களுக்கு விற்றுத் தீர்க்க முனைப்பு பெற்றிருப்பது நீண்ட போரின் முடிவுக்குப்பிறகு முழு நாட்டையுமே அபகீர்த்திக்குள்ளாக்கும் ஒரு செயலாகும்.





முழு நாட்டுக்குமான மொத்த விநியோக வர்த்தக மார்க்கங்களில் இந்த முறைகேடு இனங்காணப்பட்டிருப்பதால் முழுமக்களுமே நீண்டகாலத்தில் புது வித நோய்களால் பீடிக்கப்படும் முடமான சமூகமாக மாறும் ஆபத்தும் உள்ளது. குறிப்பாக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளில் அதிகரித்த கிருமிநாசினி, உரப்பாவனைகளால் நஞ்சூட்டம் பெற்ற உணவுகளை நுகர நிர்ப்பந்திக்கப்பட்டிருக்கும் மக்கள், இந்த உற்பத்திகள் விற்பனைப் பண்டங்களாக்கப்படுவதில் மேலும் பாவனைக்குதவாதவற்றையே நுகரும் நிலைக்கு தள்ளப்பட்டிருப்பது அதிர்ச்சி தரும் செய்தியாகும்.

உற்பத்தியாளர்களும் அவற்றை நுகரும் மக்களும் தமக்கான வாழ்க்கை நலன்களை உத்தரவாதம் செய்வதற்கான சமூக ஒழுங்கில் இதன் ஆபத்துக்களை ஆராய்ந்து தீர்வை காணவென நிறுவன ரீதியான பொறிமுறையொன்று இனங்காணப்படாதவரை இந்த மோசடி வியாபாரிகளால் முழு மக்களும் முடமாவதை தவிர்க்க முடியாது போகும்.

## இன்னொரு நியாயம்!

நியாயமும் அநியாயமும் சேர்ந்து உணவு விடுதிக்குச் சென்றன. இரண்டும் வயிறு நிறையச் சாப்பிட்டன. சாப்பிட்டு வெளியே வர முயற்சிக்கும்போது கடையில் காசாளராக உட்கார்ந்திருந்தவர் சாப்பிட்டதுக்கு காசு கேட்டார்.

"இப்பத்தானே பணம் கொடுத்தோம். ஒரு தடவை சாப்பிட்டதுக்கு இரண்டு தடவை காசு தருவதா?" என்று அநியாயம் கேட்டது.

"ஐயா... நல்லா ஞாபகம் பண்ணிப் பாருங்கள். இப்பத்தான் சாப்பிட்டுவிட்டு கை கழுவிவிட்டு வருகிறீர்கள்.. எப்ப காசு கொடுத்தீர்கள்?" என்றார் காசாளர்.

"அதெல்லாம் ஒரு தடவை சாப்பிட்டதுக்கு இரண்டு தடவை காசு தர முடியாது. உன்னால் முடிஞ்சதைப் பார்த்துக்கொள்" என்று அநியாயம் சொல்லிவிட்டு, உணவு விடுதியைவிட்டு வெளியே செல்ல, காலை எடுத்து வைத்தது. உடனே நியாயம் பளாரென்று அநியாயத்தின் கன்னத்தில் அறைந்து, "சாப்பிட்டதுக்கு ஒழுங்கா காசு கொடுத்துட்டுப் போ" என்று சொல்லி அங்கிருந்த தூணில் அநியாயத்தைக் கட்டி வைத்தது.


அப்போது வேறொரு நியாயம் ஒன்று வெளியிலிருந்து திடீரென உணவு விடுதிக்குள் வந்து, "சட்டத்தையும் நீதியையும் எப்படி நீயே கையில் எடுத்துக் கொள்ளலாம்?" என்று நியாயத்தின் கையில் கைவிலங்கை மாட்டி இழுத்துச் சென்றது.






# நிகழ்வுகளின் பதிவுகள்....

காரைநகர் யாழ்ரன் கனிஸ்ட வித்தியாலயத்தின் கால்கோள் விழா அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் தரம் 2 மாணவர்கள் புதிய மாணவர்களை வரவேற்பதையும், முன்னாள் ஆரம்பக்கல்வி சேவைக்கால ஆசிரிய ஆலோசகர் ஆ. பலராமன் உரையாற்றுவதையும் மாணவர்களின் கலை நிகழ்வையும் காணலாம். (50)

யாழ். ஒஸ்மானியாக் கல்லூரியில் அண்மையில் இடம்பெற்ற கால்கோள் விழா... (105)

பருத்தித்துறை அரசினர் ஆதாரவைத்தியசாலை இரத்தவங்கிக்கு பருத்தித்துறை கத்தோலிக்க இளைஞர் சங்கமும், பருத்தித்துறை முதியோர் குழந்தைகள் பேணகமும் இணைந்து அண்மையில் இரத்ததானம் செய்தனர். (01)




தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் யாழ். மாவட்ட காரியாலயத்தில் நடைபெற்ற பொங்கல் நிகழ்வு... (48)



யாழ். இணுவையூர் ரசிகப்பிரியா சபா கலை வளர்ச்சி மையத்தின் இசையரங்கும் ஸ்வரலயன் கிரியேசனின் சிந்தனைசெய் குறும்படவெளியீட்டு விழாவும் அண்மையில் இடம்பெற்றது இதில் வேணுகானமணி பிச்சையப்பா ஞானவரதனின் புல்லாங்குழல் கச்சேரியை காணலாம். (48)



கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவும் வேள்விஷன் நிறுவனமும் இணைந்து அண்மையில் கரைச்சி பிரதேச மாவடியம்மன் கிராம சேவையாளர் பிரிவில் நடாத்தப்பட்ட முதலுதவிப்பயிற்சி. (90)

# சேவாலங்கா மன்றத்தின் பாரம்பரிய கலை விழா

(மானிப்பாய்)

சேவாலங்கா மன்றம் யுசெயிட் (Usaid) நிறுவனத்தின் அனுசரணையில் நடாத்தப்பட்ட பாரம்பரிய கலை விழா 2014 நிகழ்வு நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சேவாலங்கா மன்றத்தின் யாழ். மாவட்ட திட்ட இணைப்பாளர் ந. நகுலேந்திரன் தலைமையில் தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மண்டபத்தில் சிறப்பாக இடம் பெற்றது.

நிகழ்வில் கடவுள்வாழ்த்து, தமிழ்த்தாய் வாழ்த்தினை தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி மாணவிகள் தெ.சோபர்ணா, உ.கிபிஷா, சி.சரண்யா, வி.துவன்யா ஆகியோர் வழங்கினார்கள் வரவேற்புரையினை சி. ஷாமினியும் வரவேற்பு நடனத்தினை கு. வேணுகா, பா. நிரோஷனா. இ. தஸ்மி. ம.தர்ஷிகா, வ.டக்ஷி, க.ரஜனிகா, பா.நிரஞ்சனா, நா.டிலக்ஷனா, எஸ். சுவேந்தினி ஆகியோர் வழங்கினர்.

தெல்லிப்பளை யூனியன் கல்லூரி மாணவிகள் ஜெ.பிரியங்கா, சி. பிரியங்கா, கி.லக்ஷிகா, க.புன்னியா, சு.பக்ஷனா, ந.விதுஷிகா, ஆகியோரின் கோலாட்டம், ந.கனுஜன், ஆர்.சஜந்தன், ப.கபிலன் ஆகியோரின் நாட்டார்பாடல் நிகழ்வு என்பன இடம் பெற்றது.

எஸ்.ரி. குமரன், எஸ்.ரி. அருள் குமரனின் நெறியாள்கையில் புத்தாக்க அரங்க இயக்க கலைஞர்களின் பண்படு தெருக்கூத்து ஆற்றுகை செய்யப்பட்டது. ஆற்றுகையாளர்களாக த.சண்முகப்பிரியன், செ.அபிஷேக், சி. சுகிர்தன். த.தர்மிஷன், சி.கணேஜன், ஜே.சாணுஜன், கு.கலைக்ஷன், தி.திஸ்னுகன், உ.கரிஸ், நா.மோகனராஜன் பா.ஜெயரூபன், ப.தனுஜன், எஸ்.சஞ்சீவன், செ.அகிலன் ச.தக்ஜான், ப.பத்மதாஸ், ப.தாருசன் ஆகியோர் நடித்துள்ளார்கள்.

க.சத்திய சீலனின் நெறியாள்கையில் தேசிய கலை இலக்கியப்பேரவையின் மனங்களில் ஓர் மரம் நாடகமும் இடம்பெற்றது.

தந்தை செல்வாபுர சிறுவர்கள் சி.திலக்சிகா, ந.கனிஸ்ரா, ரா.ஷர்மிகா. ஜெ.கனிஷ்டா, வி.தாரணி ஆகியோரின் கரகம், தெல்லிப்பளை கிராம சிறுவர்கள் வி. அரிஹரதாஸ், வி. கிரிநிவாசதாஸ், நா. பிரதாப், நா.பிரவிந், ர.தனுஷன், தி.கஜிர் ஆகியோரின் வசந்தனாட்டம், வயலின் வாத்தியக் கலையகத்தைச் சேர்ந்த கோ. கலைமகள், கோ. கலைஎழில் க.மயூரதி, அ.அபிராம், கி. அனுஷாகர், மு.சிவதோயன், சி.சிவேதல் சி. பிறையாழன் ஆகியோரின் வயலின் இசை நிகழ்வு, வித்தகபுர சிறுவர்கள் கு.வேணுகா, பு.நிரோஷனா, இ.தஸ்மி, ம.தர்ஷிகா, கு.டிலக்ஷிகா, ம.ரம்மியா, த.பிரியா, வ.டக்ஷி,க.ரஜனிகா, தி.தர்ஷிகா, சி.கேஷிகா ஆகியோரின் காத்தவராயன் கூத்து என்பன இடம்பெற்றன.

இந்நிகழ்விற்கு விருந்தினராக தெல்லிப்பளை பிரதேசசெயலக கலாசார உத்தியோகத்தர் திருமதி செ. தாட்சாயினி, சுன்னாகம் பொதுநூலகத்தின் ஓய்வுநிலை நூலகர் க. சௌந்தரராஜன் ஆகியோருடன் பெருமளவான கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டனர். (63)

## தொற்றா நோய் குறித்து பரிசோதனை நடவடிக்கை

(ஆனைக்கோட்டை)

சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் சுகவாழ்வுமையம் நடாத்தும் தொற்றா நோய் தொடர்பான பரிசோதனை நாளைமறுதினம் புதன்கிழமை காலை 8 மணி முதல் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது. மானிப்பாய் கிறீன்மெமோறியல் வைத்தியசாலையில் நடைபெறும இச்சிகிச்சையின் போது கீழ் வரும் நோய்கள் தொடர்பில் பரிசோதனை இடம்பெறவுள்ளது.

இதில் நீரிழிவு, கண்பரிசோதனை, உயர் குருதி அமுக்கம், என்பவற்றுடன் தொற்றா நோய் சம்பந்தமான சுகாதாரக் கல்வியும் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் வழங்கப்படவுள்ளது.

இதில் இப்பிரதேச மக்கள் அனைவரையும் கலந்துகொண்டு பயன் பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (104)

## புதிய நிர்வாகத்தெரிவு

(ஆனைக்கோட்டை)

நவாலி அந்திரான் முருகமூர்த்தி ஆலய பரிபாலன சபையின் புதிய நிர்வாகசபை உறுப்பினர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் தலைவராக செ. மகேந்திரன், உபதலைவராக செ.சிவபாதம், செயலாளராக மா.செல்வராசா, உபசெயலாளராக செ.யோகேஸ்வரன், பொருளாளராக இ.சிவச்செல்வன், கணக்கு பரிசோதகராக வை. கமலநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

இத்துடன் 14 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

☐ ☐ ☐

(ஆனைக்கோட்டை)

நவாலி கிழக்கு முதியோர் சங்கத்தின் புதிய நிர்வாக சபை தெரிவு அண்மையில் இடம்பெற்றது.

இதில் தலைவராக மா.செல்வராசா, உபதலைவராக எஸ். பௌஸின், செயலாளராக செ.மகேந்திரன், பொருளாளராக டேவிட் ஆகியோருடன் 7 பேர் கொண்ட நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (104)

## கலந்துரையாடல்

(கொடிகாமம்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட இந்து ஆலயங்களின் பரிபாலனசபைத் தலைவர், செயலாளர் மற்றும் பிரதம பூசகர் ஆகியோருடனான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இந்து ஆலயங்களின் குறிப்பிட்டுள்ளவர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார். (130)

## கற்கை நெறிக்கு விண்ணப்பம்

மருதனார்மடம் சுன்னாகத்தில் இயங்கிவரும் அமெரிக்கன் சிலோன் மிஷன் திருச்சபையின் இலங்கை கிறிஸ்தவ இறையியல் கல்லூரியில் குறுகிய கால சிறப்புக்கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழுடன் கூடிய இக்கற்கை நெறிகள் ஒவ்வொன்றிலும் 30 பேர் மட்டுமே அனுமதிக்கப்படவுள்ளதால் 0213213210 இலக்க காரியாலய தொலைபேசிமூலம் அல்லது sdddad @gmail.com என்ற மின்னஞ்சல் ஊடாக உடன் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (10)

## வீடுபுனரமைப்புக்கு நிதியுதவி



வட்டுக்கோட்டை இந்து வாலிபர் சங்கத்தினால் வறிய நிலையில் வாழ்கின்ற குடும்பம் ஒன்றின் வீடுபுனரமைப்புக்கு நிதி உதவி வழங்கப்பட்டது.

மேற்படி நிதியானது பளைப்பிரதேசத்தில் வாழ்கின்ற குடும்பம் ஒன்றின் வீடு புனரமைப்புக்கென பதினைந்தாயிரம் ரூபா பணம் அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

ஏற்கனவே வட்டு. இந்துவாலிபர் சங்கத்தினால் 08 குடும்பங்களுக்கு வீடு புனரமைப்புக்கென நிதியுதவி வமங்கப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (54)

## வேலை வாய்ப்புச் செய்திகள்

30,000 இற்கு மேல் வருமானம் புத்தாண்டின் பின்னரான புதிய தொழில் வாய்ப்புக்கள் (நாடு முழுவதிலும் உங்கள் பிரதேசங்களிலேயே எமது ஆட்சேர்ப்பு நிலையங்கள். வயது 17-55 ஆண், பெண் தமிழ், முஸ்லிம்கள் இணைத்துக் கொள்ளப்படுவர். ஜேம், பிஸ்கட், சொக்லேட், யோகட், பொலித்தீன் என்பவற்றிற்கு உற்பத்தி, பொதியிடல், களஞ்சியப் பிரிவில் வேலை வாய்ப்பு துறைமுகம், விமான நிலையம் (pvt) Hotel, jso, sso வேலை வாய்ப்புக்களும் உண்டு உணவு, தங்குமிடம் செய்து தரப்படும். உடனே அழையுங்கள். 0778508118.

---

கொழும்பில் இயங்கும் பிரபல தனியார் கம்பனியில் நிதி ஆலோசகர் பதவிக்கு வெற்றிடங்கள் உண்டு O/L தகைமைஉள்ளவர்கள் உடன் விண்ணப்பிக்கலாம். குறைந்த வெற்றிடங்களே உண்டு. 0770415227, (பெண்களுக்கு மட்டும்)

---

வளமான வாழ்வுக்கு நிரந்தர எதிர்காலம் எங்களிடம் வயது 17-55 வரை. சம்பளம் 18,000,32,000வரை ஆண், பெண் இருபாலாரும் இணைத்துக் கொள்ளப்படுவீர். பிரதான தொழிற்சாலைகளான ஜேம், கோடியல், பிஸ்கட், பால்மா, பத்தி. தேயிலை கிளவுஸ் போன்றவற்றை உற்பத்தி, பொதியிடல், லேபல், தரம்பிரித்தல் பேன்ற பிரிவில் வெற்றிடங்கள் உண்டு. உணவு தங்குமிடம் குறைந்த விலையில் அன்றைய தினமே தொழில் வாய்ப்பு. 0766031098.

---

30,000 மாத சம்பளம் A/L செய்த மாணவர்கள் தொடக்கம் வயது 18-50 வரையானவர்கள் (குழுக்கள், நண்பர்கள்), ஒரே நிறுவனத்தில் உணவு, தங்குமிடத்துடன்) கொழும்பு, குருணாகல், மட்டக்குளி, ஜா-எல வத்தளை, அவிசாவளை, இரத்தினபுரி, ஹட்டன் கண்டி, பதுளை, யாழ்ப்பாணம், வவுனியா, ஜேம்,கோடியல், பிஸ்கட், கிலவுஸ், பத்திகள், pvc டொபி, பால்மா என்பவற்றில் உற்பத்தி, பொதியிடல், களஞ்சியப் பிரிவுக்கு ஆண், பெண் இருபாலாரும் தேவை நாடு முழுவதும் ஆட்சேர்ப்பு நடைபெறும். தொடர்புக்கு 0776838223.

---

துறைமுகம், விமான நிலையம், வேறு நிறுவனங்களுக்கு வெல்டர், சாரதி, பாதுகாப்பு அதிகாரி ஆண், பெண் 48,000 வரை 0712528369, 0777554068, 0726293122, 0754763658, 0722896511, 0766895510.

---

ஜேம்,பிஸ்கட், பால்மா உற்பத்தி நிறுவனங்களுக்கு ஆண்,பெண் இணைத்துக்கொள்ளப்படுவர் 30,000 சம்பளம் தொடர்புக்கு 0712528369,0777554068, 0726293122,

---

தனியார் நிறுவனத்திற்கு சாரதி உதவியாட்கள் தேவை. 48,000 நிரந்தரத் தொழில் உணவு, தங்குமிடம் 0712528369, 0777554068, 0722896511,0726293122, 0754763658, 0766895510.

---

கொழும்பிலுள்ள பிரபல்ய பாமசி ஒன்றிற்கு தங்கியிருந்து வேலை செய்வ தற்கு அனுபவமுள்ள, அனுபவம் அற்ற பெண்கள் தேவை. உணவு தங்குமிட வசதிகள் உண்டு. தொடர் புக்கு 0756983657.

---

தொடர்ந்தும் தனியார் நிறுவனங்களுக்கு Clerk, Supervisor, கோக்கி தேவை. 30,000 பெறலாம். உணவு, தங்குமிடம் இலவசம். 0712528369,0726293122, 0777554068.

---

தொழிற்சாலை ஒன்றிற்கு பெண் உதவியாட்கள் தேவை. சம்பளம் 15.000 தங்குமிட வசதி இலவசம் கொழும்பு 0714143424, 0117906808 Nano Car வாடகைக்கு தேவையானவர்களும் அழைக்கவும்.

---

வரவேற்பு மண்டபத்தில் அனைத்து வேலைகளும் செய்யக்கூடிய 55 வயதுக்குட்பட்ட வேலையாள் தேவை. தொலைபேசி. 0777220858.

---


உடனடியாக ஒரு Housemaid தேவை. அனுபவம் இருப்பின் விரும்பத்தக்கது. 30,000 சம்பளமும், 50,000 முற்பணமும் வழங்கப்படும் வயது 25-45 மட்டுமே தொடர்புகளுக்கு 0770441339.

---

மேசன் பாஸ்மார்கள் தேவை. 1300ரூபாய் முதல் 15,000 வரை சம்பளம் தங்குமிடவசதியுண்டு தொடர்பு 0724584098.

# கட்டுநாயக்காவில் நேற்று துப்பாக்கிச் சூடு

## அந்த இடத்திலேயே ஒருவர் பலி



கட்டுநாயக்க வீமோல பிரதேசத்தில் நேற்று இடம்பெற்ற துப்பாக்கி பிரயோகத்தில் ஒருவர் கொல்லப்பட்டார்.

சம்பவத்தில் பலியானவர்கள் கொலை சம்பவம் ஒன்று தொடர்பில் பொலிஸாரால் ஏற்கனவே தேடப பட்டு வந்த வர் என்று பொ.லிஸ் ஊடகப்பேச் சாளர அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

அவர் நேற்றைய தினம் காவற்துறை நிலையத்துக்கு வந்து வாக்கு மூலம் வழங்கி விட்டு திரும்பி செல்லும் போது, மோட்டார் சைக்கில் ஒன்றில் வந்த இருவர் அவருக்கு எதிராக துப்பாக்கிப் பிரயோ கத்தை மேற்கொண்டதாக தெரிவிக்கப்படுகிறது.

# போதைப் பொருளுக்கு தட்டுப்பாடு இது பொலிஸார் தரும் தகவல்

(கொழும்பு)

நாட்டில் போதைப் பொருட்களுக்கு பாரியளவில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. பொலிஸார் தொடர்ச்சியாக மேற்கொண்டு வரும் திடீர் சோதனைகளினால் இவ்வாறு போதைப் பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

போதைப் பொருளுக்கு நிலவி வரும் தட்டுப்பாட்டினால் அதன் விலைகள் உயர்வடைந்துள்ளன.

2 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருள் 750 ரூபா முதல் 1000 ரூபாவிற்கு விற்பனை செய்யப்பட்டதாகவும், தற்போது அதன்



விலை 1250 ரூபா முதல் 1500 ரூபா வரையில் உயர்வடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஹெரோயினுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ள காரணத்தினால் கலப்படம் செய்யப்பட்டு வருவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

வெளிமாவட்டங்களில் அதிகளவில் போதைப் பொருளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# பரமர் சங்கமம்

"கழுதைக்கு விளங்குமா கற்பூர வாசனை" எண்ட பழமொழியை மேலும் அழுத்திச் செல்வதென்றால் கற்றது கைமண் அளவு கல்லாதது உலகளவு என்னும் கூற்றைச் சேர்த்துக் கொள்ளலாம்.

எங்களில் எத்தனை பேருக்கு ஆறாம் அறிவு இல்லை என்பதை உணர நான் சொல்லப்போற காரியம் உங்களுக்குத் தெரிவிக்கும் எங்கட இலங்கை மண்டலத்தில் இதுவரையில் நூற்று ஐம்பதுக்கும் சற்று மேலைகீழையாயுடைய எண்ணிக்கையில் இலக்கியச் சஞ்சிகைகள் வெளிவந்திருப்பதாக சமீபத்தில் எடுக்கப்பட்ட தரவுகள் மூலம் அறிய முடிந்துள்ளது.

அதுகளில் ஒரு தனி மனிதனால் நாற்பத்தெட்டு வருடங்களாக ஐந்நூற்று எழுபதுக்கும் மேற்பட்ட மாத இதழ்களை வெளியிட்டுப் பெருமை கொண்டது மல்லிகை எண்ட மாசி தை. அதனுள் வருடமொரு சிறப்பு மலராக 48 மலர்களும் அடங்கும்.

இந்தச் சாதனையைச் செய்தும் முடித்த மல்லிகை ஜீவாவெனுதும் டொமினிக் ஜிவாவை இலக்கிய நல்லுலகம் என்றும் நினைந்து போற்ற வேண்டிய மகாபுருஷர். அவரது குடும்ப வாரிசும் இலக்கிய வளர்ப்பு வாரிசுமாகிய இருவர் டொமினிக் ஜீவா வாழ்ந்து கொண்டிருக்கும் போதே செய்து முடித்திருக்கும் காரியந்தான் நெஞ்சை வருத்தியது.

டொமினிக் ஜீவாவின் முதுமை உடல் தளர்ச்சி காரணமாக கொழும்பில் மகனது பராமரிப்பில் நடைப்பிணமாகஇருப்பதனால் 2013 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதலே "மல்லிகை" மாத சஞ்சிகை நின்றுவிட்டது. அவரது ஐம்பதாவது ஆண்டு மலர் லட்சியமும் அத்தோடு சாமாதி ஆகிவிட்டது.

கதிரேசன் வீதி மல்லிகை அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த மல்லிகை சஞ்சிகை ஆவணம் மற்றும் மல்லிகைப் பந்தல் ஊடாக வெளியிடப்பட்டிருந்த நூல்கள் அனைத்தும் அவரது வாரிசுக ளால் கொழும்பு மாநகர சபை குப்பை வாகனத்தில் அப்புறப்படுத்தப்பட்டதான தகவலே நெஞ்சைப் பிளந்த காரிய மாகும்.

ஒரு படைப்பாளியின் பாடுகளைப் புரிந்திராத மண்டுகங்களின் வேலையிது. ஒரு பல்கலைக்கழகமோ அல்லது நூல்நிலையங்களிலோ அவற்றை ஒப்படைக்கும் அளவுக்கு அவர்களுக்கு ஒன்றுமில்லாமல் போய் விட்டதை உணரும் போது வேதனைதான் மிஞ்சுகிறது. சம்பாதித்துக் கொண்ட தேட்டதை ஜீவா உயிரும் வாழுகையிலேயே அனுபவிக்கச் செய்த பாவங்கள் தான் என்ன?

சமீபத்தில் யாழ்.வந்து போன பிரபல எழுத்தாளர் மா.பாலசிங்கம் ஒரு விடயத்தைக் கூறி வேதனைப்பட்டார் 1986 ஆம் ஆண்டில் வவுனியா இலக்கிய அமைப்பொன்று நடத்திய நாவல் போட்டியில் ஆறுதல் பரிசைத் தட்டிக் கொண்ட நமக்கும் விடியுமா என்னும் அவரது 200 பக்கங்களைக் கொண்ட பிரதியை ஜிவா வாங்கி தன்வசப்படுத்தி இருந்தார்.

அந்தப் பிரதி உட்பட இன்னும் எத்தனையோ படைப்பாளிகளின் கையெழுத்துப் பிரதிகளும் மண்டுகங்களின் செயலால் அழிக்கப்பட்டிருப்பது கழுதைக்கு விளங்குமா கற்பூர வாசனை எண்ணாமல் வேறை எப்புடித்தான் சொல்வது... சொல்லுங்கோவன் பாப்பம்..

# இலங்கை தொடர்பான அமெரிக்க பிரேரணையை மென்மைப்படுத்தும் முயற்சியில் ஜப்பான்

## களத்தில் குதிக்கிறார் யசூசிஅகாஷி

இலங்கை அரசு மீது ஜெனிவாவில் மனித உரிமை மாநாட்டின் போது கொண்டு வரப்படவிருக்கும் தீர்மானத்தை மென்மைப்படுத்துவதற்கான முயற்சியில் ஜப்பான் இறங்கியுள்ளது.

இலங்கை விவகாரங்களுக்கான ஜப்பானின் தூதுவர் யசூசி அகாஷி மேற்படி நடவடிக்கையில் நேரடியாக இறங்கியுள்ளார். நியு இந்தியன் எக்ஸ்பிரஸ் என்ற இணையத்தளம் இந்தத் தகவலை தெரிவித்துள்ளது.

THE NEW INDIAN EXPRESS

அமெரிக்காவினால் இலங்கைக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரணை முன்வைக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கு பிரித்தானியா, பிரான்ஸ் மற்றும் ஜேர்மனி ஆகிய நாடுகள் ஆதரவை வெளியிட்டுள்ள போதும், ஏனைய அங்கத்துக்கு நாடுகளுள் பெருமபாலானவை இலங்கைக்கு எதிராக சாதாரண பிரேரணை ஒன்றுக்கே தங்களின் ஆதரவை வெளிப்படுத்தும் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே கடந்த வருடம் மார்ச் மாதம் அமெரிக்காவினால் முன்வைக்கப்பட்டிருந்த பிரேரணை இந்தியாவினால் திருத்தப்படாதிருந்தால், அது நிறைவேற்றப்பட்டிருக்காது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்தத் தடவையும் ஐக்கிய நாடுகளின் அங்கத்துவம் கொண்ட நாடுகளில் பெரும்பாலானவை, இலங்கையின பொறுப்புக் கூற வேண்டிய விடயங்களில் காலதாமதமற்ற செயற்பாட்டினை கோரிய பிரேரணை ஒன்று மாத்திரமே முன்வைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

48 உறுப்பு நாடுகளைக் கொண்ட ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணைக்குழுவில், சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, வியட்னாம் போன்ற நாடுகள் ஏற்கனவே இலங்கைக்கு ஆதரவாகச் செயற்படுவதாக அறிவிததுள்ளன.

அதேபோன்று இலங்கையை அழுத்தங்களுக்கு உட்படுத்தினால், அது சீனாவை ஆதரவை நோக்கி நகரும் என்ற அச்சத்தில், இந்தியாவும், ஜப்பானும் கூட இலங்கையை கைவிடாது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை அமெரிக்காவின் பிரேரணை மென்படுத்துவதற்கான கோரிக்கையை முன்வைப்பதற்காக, ஜப்பானின் விசேட பிரதிநிதி யசூசி அகாஷி நடவடிக்கை மேற்கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

எவ்வாறாயினும் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்த யுத்தக் குற்றங்கள் தொடர்பான அமெரிக்கத் தூதுவர் ஸ்டீவன் ரெப், இலங்கை அரசாங்கத் துக்கு எதிராக யுத்தக் குற்ற விசாரண கோரிய பிரேரணை ஒன்று முன் வைக்கப்படும் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தெரிவித்திருந்தார்.

அதேபோன்று பிரித்தானியாவும் இலங்கைக்கு எதிரான விசாரணை ஒன்றைக் கோரும் என்று அதன் பிரதமர் டேவிட் கமரூன் தெரிவித்திருந்தமை குறிப்பிடத் தக்கது

# பௌத்த பிக்குவின் தங்குமிடம் மீது சூடு

(கொழும்பு)

பாணந்துறை, கலிகொட ஸ்ரீமகா விகாரையின் விகாராதிபதி தங்குமிடத்தின் மீது நேற்று அதிகாலை இனந்தெரியாதோரால் துப்பாக்கிச் சூடு நடாத்தப்பட்டுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

குறித்த விகாராதிபதி தங்கியிருந்த அறையிலுள்ள ஜன்னலினூடாகவே இந்த துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டுள்ளது. இருப்பினும் இந்த துப்பாக்கிச்சூடு சுவரிலேயே பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச்சூட்டை அடுத்து ஜன்னல் பக்கத்திலிருந்து கறுப்பு நிற ஆடையணிந்த ஒருவர் அங்கிருந்து ஓடிச் செல்வதை அவதானித்ததாக விகாராதிபதி ரத்னபுர பொத்துபிடியே ஞானசார தேரர் பொலிஸில் செய்துள்ள முறைப்பாட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# யுத்த காலத்தில் காணாமற் போனோர் அறிக்கை சட்டமா அதிபர் திணைக்களத்துக்கு

யுத்தம் இடம்பெற்ற காலத்தில் காணாமற் போனவர்கள் பற்றி விசாரணை நடாத்தும் ஜனாதிபதி ஆணைக்குழு, காணாமற் போனவர்கள் தொடர்பாக திரட்டிய தகவல்களை சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைத்துள்ளது.

கிளிநொச்சியில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் மூலம் 162 சம்பவங்கள் பற்றிய தகல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் இந்தத் தகவல்கள் சட்ட மா அதிபர் திணைக்களத்திடம் சமர்பிக்கப்படவுள்ளதாகவும ஆணைக்குழுவின் செயலாளர் எச்.டபிள்யூ. குணதாச தெரிவித்துள்ளார்.

காணாமற போனோர் பற்றிய முறைப்பாடுகள் விசாரணை செய்யப்பட வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். நான்கு நாட்களாக கிளி நொச்சியில் தகவல் திரட்டப்பட்டதாகவும், வட மாகாணசபை உறுப்பினர் அனந்தி சசிதரன் உள்ளிட்ட 440 பேர் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மக்களின் ஒத்துழைப்புடன் விசாரணைகள் திருப்திகரமாக அமைந்தது என்றே உணர்கின்றோம் என அவர் தெரிவித்துள்ளார்.அடுத்த கட்டமாக முல்லைத்தீவு மாவட்டத்தில் விசாரணைகள் நடத்தப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

# வவுனியாவில் புதிய பேருந்து நிலையம் அடுத்தவாரம் அடிக்கல் நாட்டு விழா

( யாழ்.நிருபர்)

மகிந்த சிந்தனை வேலைத் திட்டத்தின் கிழ் வவுனியா நகரில சகல வசதிகளும் கொண்ட பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் நாட்டும் விழா எதிர்வரும் 31 ஆம் திகதி மு.ப 10 மணிக்கு நடைபெறும்.

இந் நிகழ்வில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ரொஹான் குணவர்த்தனா தனியார் போக்குவரத்துச் சேவை அமைச்சர் சி.பி.இரத்நாயக்கா கைத்தொழில் மற்றும் வாணிபத்துறை அமைச்சர் றிசாத் பதியூதின் பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுகைத்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, வட மாகாண முதலமைச்சர் சி.வி விக்னேஸ்வரன்,வட மாகாண போக்குவரத்து அமைச்சர் பா.டெனிஸ்வரன், வவுனியா அரசாங்க அதிபர் எம்.கே.பந்துல ஹரிச்சந்திர ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

(10)

# பார்த்தீனியம் அழிப்பு அளவெட்டியில்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் வட்டி லயன்ஸ் கழகமும் அளவெட்டி வட்ட லியோ கழகமும் இணைந்து அளவெட்டிப் பிரதேசத்தில் வலி.வடக்கு பிரதேச செயலகத்தினால் புதிதாக அமைக்கப்பட்ட கலாசார மண்டபத்தின் சுற்றுச் சூழலில் உள்ள பார்தீனியங்களை அழிக்கும் செயற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

அளவெட்டி லியோ கழகத் தலைவர் லியோ எஸ்.ஜெயறின் தாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த பார்த்தீனிய ஒழிப்பு நடவடிக்கைகளில் லயன் சி.இதயராஜ், லியோ த.பிரகாஷ், லியோ, எஸ்.உஷாநந்தினி உட்பட 20 லியோ கழக உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

வலி.வடக்குப் பிரதேசத்தில் பார்த்தீனியச் செடிகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப்படுகின்ற நிலையில் இவ்வாறான சிரமதானப் பணிகள் நடைபெறுவது குறிப்பிடத்தக்கது. (10)

# தரம் - 7 மாணவர்களுக்கான பயிற்சிப் பரீட்சை - 2014

# கல்வி முரசு

## தமிழ்மொழி

பகுதி - I - II

2 மணி



**பொருத்தாமான விடையைத் தெரிவு செய்க**

01) கமலன் திருடர்களைப் பார்த்து அச்சம் அடைந்தான் இங்கு அச்சம் என்பதன் எதிர்ச்சொல்
1) பயன் 2) மகிழ்ச்சி 3) துணிவு 4) சோம்பல்

02) சின்னஞ் சிறுமிகள் அழகாகப் பாடினார்கள் இங்கு அழகு என்பதன் ஒத்த கருத்துச் சொல்
1) சுந்தரம் 2) அவனி 3) நூல் 4) உடை

03) “ஒற்றுமையே உயர்வு தரும்” இங்கு ஒற்றுமை என்பதன் எதிர்ச்சொல
1) பலம் 2) வேற்றுமை 3) தனிமை 4) கூட்டு

04) இளமைக்காலம் இனிமையானது இளமை என்பதன் எதிர்கருத்து
1) குழந்தை 2) தனிமை 3) முதுமை 4) வாலிபம்

05) வையகம் போற்ற வாழ்வோம் இதில் வையகம் என்பதன் ஒத்தகருத்து
1) வீடு 2) உலகம் 3) வானம் 4) மனை

**கீறிட்ட இடத்தில் பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளியை நிரப்புக**

06) பூஞ்சோலையில பூக்கள் ------------------------------ (சொறிந்தன சொரிந்தன)

07) உலகம் ------------------------------------------------- (மாரி மாறி) வருகின்றது

08) ------------------------------------------ ஆசிரியரைக் கண்டேன் (நாம் நான்)

09) காதர் நன்றாகப் -------------------------------------------- (பாடுவான் பாடுவர்)

10) ------------------------------------------ கொழும்புக்கு வந்தாள் (கமலா தம்பி)

**மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

11) கண்ணன் ஆயர் பாடியில் வாழ்ந்தான் இது.
1) தனி வாக்கியம் 2) தொடர் வாக்கியம்
3) கூட்டு வாக்கியம் 4) கலப்பு வாக்கியம்

12) பனையில் இளங்காய் நுங்கு போல தென்னையில் இளங்காய்
1) கச்சல் 2) பிஞ்சு 3) மூசு 4) குரும்பை

13) கண்ணன் விறுவிறு என நடந்து வந்தான் இதில் வந்துள்ள விறுவிறு என்பது
1) இரட்டைக்கிழவி 2) அடுக்கு மொழி
3) இணைமொழி 4) அடுக்கிடுக்குத் தொடர்

14) முள் செடி என்பதனை புணர்த்தினால்
1) முள்ளுச்செடி 2) முள் செடி
3) முள்ளிச்செடி 4) முட்செடி

15) ஆடு கத்தும் என்பது போல யானை
1) கனைக்கும் 2) பிளிறும்
3) முக்காரம் இடும் 4) உறுமும்

16) பெரியோரும் தவறு விடுவார்கள் என்ற கருத்தை உணர்த்தும் பழமொழி
1) எறும்பூரக் கற்குழியும் 2) ஆனைக்கும் அடிசறுக்கும்
3) ஆற்றில் போட்டாலும் அளந்து போடு 4) விளையாட்டு வினையாகலாம்

17) மாணவர்கள் வகுப்பறையைச்சுத்தம் செய்தார்கள இதில் வரும் எழுவாய்
1) வகுப்பறை 2) சுத்தம்
3) செய்தார்கள் 4) மாணவர்கள்

18) எழுபத்தைதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா
1) பொன் விழா 2) வைரவிழா
3) பவள விழா 4) வெள்ளி விழா

19) கூடி வாழ்ந்தால் கோடி நன்மை என்னும் பழமொழி வலியுறுத்துவது
1) ஒற்றுமை 2) பலம்
3) நன்மை 4) மகிழ்ச்சி

20) கருங்குவளை என்பதைப் பிரித்து எழுதினால்
1) கரும் + குவளை 2) கரு + குவளை
3) கருமை + குவளை 4) கருங் + குவளை

**பகுதி II**

**1ஆம் 2ஆம் 3ஆம் 4ஆம் வினாக்களுக்கும் 5ஆம் 6ஆம் 7 ஆம் வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கும் விடை தருக**

01) தமிழ்ப் பாடவேளையில் மேற்கொள்ளப்பட்ட கணிப்பீடு தொடர்பாக பின்வரும் வினாக்களுக்கு விடை தருக

1) இக் கணிப்பீட்டிற்காக பயன்படுத்திய தலைப்பு யாது?
2) நீர் அக் கணிப்பீட்டைச் செய்வதற்காக மேற் கொண்ட முன்னாயத்தங்கள் 3 தருக?
3) அக் கணிப்பீட்டால் நீர் பெற்றுக்கொண்ட நன்மைகள் 3 தருக?
4) இக் கணிப்பீடு தொடர்பாக ஆசிரியரால் வழங்கப்பட்ட ஆலோசனைகள் 3 தருக?

02) பின்வரும் தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 150 சொற்களுக்குக் குறையாது கட்டுரை எழுதுக
1) என்மனம் கவர்ந்த மாலைக்காட்சி
2) உடைந்த பேனா தன் சுயசரிதை கூறுதல்
3) சூழலைப் பேணுவோம்
4)நான் விரும்பும் பெரியார்

03) புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்து தேசியப் பாடசாலை ஒன்றில் சேர்ந்து கல்வி கற்கும் நீர் உமது முன்னைய பாடசாலை நண்பனுக்கு உமது பாடசாலை பற்றி 50-75 சொற்களில் ஓர் கடிதம் எழுதுக

04) பின்வரும் வினாக்களுக்கு பொருத்தமான விடை எழுதுக

1 வீதி விபத்தைத் தடுப்பதற்கான வழி முறைகள் 3 தருக?

2 பாரத மக்கள் எவற்றைக் கண்டு ..ங்குவதாகக் கவிஞர்பாடுகின்றனர்?

3 உங்களுக்கு வயதாகி விட்டது யாரால் யாருக்கு கூறப்பட்டது?

நாஸா விண்வெளி ஆராய்ச்சிக் கழகம் எப்போது ஆரம்பிக்கப்பட்டது?

5 பரமார்த்த குருவின் சீடர்கள் மூவரின் பெயதைத் தருக?

**05) பின்வரும் பாடலை வாசித்து கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக**

பூமகளின் புன்னகை போல்
பூத்திடுவோமே கம்பன்
பாமணக்கும் தமிழினைப்போல்
பரிமளிப் போமே

வண்ண வண்ணச் சேலை கட்டி
மகிழ்ந்திருப்போமே!இந்த
மண்ணகமும் விண்ணக மாய்
மாறச் செய்வோமே!

1) “பூமகள்” என்னும் சொல் எதனைக் குறிக்கின்றது?
2) கம்பரால் இயற்றப்பட்ட காவியத்தின் பெயர் என்ன?
3) “விண்ணகம்” என்பது எதனைக் குறிக்கின்றது?
4) ஒத்த கருத்துச் சொற்கள் தருக
1 வண்ணம் ---------------------- 2) பா -------------------------------

**5) எதிர்கருத்துச் சொற்கள் தருக**

1) விண்ணகம்-------------------------- 2) மகிழ்ச்சி ---------------------------

**பின்வரும் சொற்களைப் பொருள் புலம்பட வாக்கியங்களில் எழுதுக**

1) வஞ்சனை :-
2) ஆத்திரம் :-
3) குழந்தை :-
4) பஞ்சம் :-
5) அஞ்சி :-

**07) பின்வரும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக**
1) பாடசாலைக்கு / கமலா/ சென்றாள்
2) ஏமாறக்கண்டு/ கூடாது/ போலிகளை
3) குடித்தல்/ நீரைக் / கொதித்து/ வேண்டும் / ஆறிய
4) செல்லப் / வளர்த்தேன் / அன்பாக / பிராணியை/ நான்
5) புகழ் / கல்பனா / பெற்ற / ஆவார் / விஞ்ஞானி

## சைவ நெறி

**பின்வரும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01) சைவர்களின் வாழ்வியலில் முக்கியமானவை
1) விரதங்களும் பண்டிகைகளும்
2) அன்பும் பாசமும்
3) ஆசையும் கோபமும்
4) பொறுமையும் பொறாமையும்

02) சமூக சமய விழுமியங்களை மாணவர் மனதில் பெருமளவில் பதிவு செய்யுமிடம்
01) பாடசாலை 2)வீடு 3) ஆலயம் 4) சமூகம்

03) செம்மனச் செல்வியின் இடரை விலக்கியவர்
1) சிவன் 2) வைரவர் 3) முருகன் 4) சக்தி

04) சகலசீவ தயாபரன் யார்?
1)கார்த்திகேயன் 2) பராசக்தி 3)சிவபெருமான் 4) கணபதி

05) மதுரையை ஆண்ட மன்னன்
1) சோழன் 2)வீரப்பன் 3) பாண்டியன் 4)இராஜஇராஜன்

06) திருச்சிராப்பள்ளி குன்றுடையானுக்கு வழங்கப்படும் திருநாமம்
1) அங்காரகன் 2) அமிர்தகடடேசுரர்
3) தாயுமானசுவாமி 4) வீரபத்திரர்

07) நாயன்மார் வரலாற்றைக் கூறும் நூல்?
1) கந்த புராணம் 2) திருத்தொண்டர் புராணம்
3) சேக்கிழார் புராணம் 4) சிவபுராணம்

08) பாடசாலையில் கொண்டாடப்படும் விழாக்களில் ஒன்று
1) சிவராத்திரி 2) நவராத்திரி
3)தைப்பூசம் 4) தீபாவளி

09) பஞ்சமா பாதகங்களுள் அடங்காதது?
1) களவு 2) காமம்
3) காதல் 4) பொய்

10) மனிதனிடம் இருக்க வேண்டிய உயர்ந்த பண்பு எது?
1)மன்னிப்பு 2) அடக்கம்
3)பயபக்தி 4) மனக்கட்டுப்பாடு

11) பொறுமையைக் கடைப்பிடித்தால்
1) வாழ்வில் தடை ஏற்படும் 2) கோபம் அதிகமாகும்
3) பிறரைத் துன்புறுத்தலாம் 4) வாழ்வில் வெற்றிபெறலாம்

12) "மங்களவாரம்" என அழைக்கப்படும் விரதம்
1) ஆடிச்செவ்வாய் விரதம் 2) வெள்ளிக்கிழமை விரதம்
3) புரட்டாதிச் சனி விரதம் 4) கார்த்திகைத் திங்கள் விரதம்

13)இன்றைய உலகில் மனிதனிடம் தீவிரமாகப்பரவும் எண்ணம்
1) சந்தோசம் 2) மன்னிப்பு
3) பகைமை 4) சாந்தம்

14) விநாயகர் சதுர்த்தி விரதத்தை அனுடித்து மகிமை பெற்றவர்
1) பகீரதன் 2) இராமர்
3) தமயந்தி 4) இராவணன்

15) குங்கிலியக் கலய நாயன்மார் பணி செய்த திருக்கோயில
1) திருக்கடவூர் சிவன் ஆலயம்
2) பரமேஸ்வரன் ஆலயம்
3) செல்வச் சந்நிதி முருகன் ஆலயம்
4) திருக்காளத்தி சிவன் ஆலயம்

16)"அங்காரகன்" எனப் போற்றப்படும் இறைவன்
1) சிவன் 2) முருகன்
3) பிள்ளையார் 4) சக்தி

17) கிரிசாம்பாள் கதை மூலம் நாம் அறிந்து கொள்வது
1) அன்பு நல்லபண்பு 2) பொறுமை வெற்றி தரும்
3) தியாகம் திருப்தி தரும் 4) பொங்கினார் காடாள்வார

18) வைகாசி விரதம் -------------------------- பெருமான் உதித்த தினம்
1) முருகன் 2) சிவன்
3) விநாயகர் 4) அப்பர்

19) சைவ சமயிகளுக்கு வாரத்தில் முக்கியமான நாள் எது?
1) வெள்ளி 2) செவ்வாய்
3) வியாழன் 4) ஞாயிறு

20) பிறர் நலம் பேணுதலில் உயர்ந்தவன்
1). கிருபா 2) சிபி
3)வருணன் 4) இந்திரன்

## பகுதி -II

**முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக**

01) உமது வகுப்பறையில் நடை பெற்ற கணிப்பீடு பேச்சு என்ற வகையின் வாயிலாக பின்வரும வினாக்களுக்கு விடை தருக
1) பாடசாலையில் நடைபெறும் விழாக்கள் 2 தருக?
2) இவ் விழாவில் நடைபெறும் விசேட பண்புகள் 2 தருக?
3) நீர் இவ் விழாவினை பற்றிப்பேசும் போது உமக்கு ஆசிரியர் தந்த வழிகாட்டல் 2தருக?
4) இக் கணிப்பீட்டின் போது நீர் மேற்கொண்ட இடையூறு அதன் தீர்வைத்தருக?
5) பேச்சுக்கான தலைப்பு தெரிவின் விளக்கத்தைத் தருக?
6) இக் கணிப்பீட்டின் வாயிலாக நீர் பெற்ற அனுகூலம் 2 தருக?

02) "துயர் துடைப்பவன் இறைவன்
1) இறைவன் தாயுமானவர் என்று போற்றப்படுவதற்கான காரணம் யாது?
2) மனக்குறையை மூதாட்டி யாரிடம் முறையிட்டார்?
3) தாயுமானவர் கதையின் வாயிலாக நீர் அறிந்து கொள்ளும் விடயங்கள் 2 தருக?

03) சமய சமூக விழுமியங்களை எடுத்துரைக்கும் நிறுவனம் பாடசாலை
1) பாடசாலையில் மாணவர் கடைப்பிடிக்கும் ஒழுங்குகள் 4 தருக ?
2) பாடசாலையின் நிகழும் சமயம் சார்ந்த விழாக்கள் 2 தருக?
3) கூட்டுப்பிரார்த்தனையில் மாணவர் பங்கு கொள்ளுதலால் ஏற்படும் நன்மைகள் 4 தருக?

04) மனித வாழ்வை வளப்படுத்துவது நற் பண்புகள்
1) வாழ்வியலில் நற் பண்புகள் எவை?
2) சிபிச்சக்கரவர்த்தியை சோதித்தவர் யார்?
3) மனித வாழ்வியல் நற் பண்புகள் வாயிலாக நீர் பெறும் படிப்பினை 4 தருக?

05) சமுதாய மரபின் ஓர் அம்சம் புதுமனை புகுதல்
1) புதுமனை புகுதல் என்றால் என்ன?
2) புதுமனைபுகுதலில் போது தேவைப்படும் பொருட்கள் எவை?
3) புதுமனை புகுதல் தொடர்பாக சைவ சமயத்தவர்களிடத்தே காணப்படும் நம்பிக்கையை குறிப்பிடுக?

06) மனத்தினை மாற்றும் செயல் விரதம்
1) விரதம் என்பதற்கு நாவலர் கொடுத்த விளக்கத்தினைத் தருக?
2) விரதங்களின் வகையினைக் குறிப்பிடுக?
3) விரதத்தினால் மேன்மை பெற்றவர் பெயர்களைக் குறிப்பிடுக?

07) இறை அடியவர் தியாகம் உலககெங்கும் பரவும்
1) இறைவனை வழிபட்ட மெய்யடியார்கள் வரலாறு கூறும் நூல் எது?
2) குங்குலியக்கலய நாயனார் எவ் இறைவன் மேல் பக்தி கொண்டவர்?
3) இறைவன் எவ்வாறு அருள் புரிந்தார்?
4) இக் கதையின் வாயிலாக நீர் பெற்ற அறிவினை 2 தருக.

**01) சுருக்கமான விடை எழுதுக.**

1. துண்டுப் பிரசுரம் ஒன்றை எழுதும்போது உள்ளடக்கப்பட வேண்டிய இரண்டு விடயங்களைத் தருக.
2. துண்டுப் பிரசுரமொன்றின் முக்கிய குறிக்கோள்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
3. "தாலம்" என்னும் சொல் இரு பொருள் புலப்படுத்துமாறு தனித்தனி வாக்கியங்களில் எழுதுக.
4. காட்சி, இரவு, குளித்தல், கோவை, தலை முதலான சொற்களின் தொழிற்பெயர்களை இனங்கண்டு எழுதுக.
5. பின்வரும் சொற்களில் இடுகுறிப்பெயர்களை இனங்கண்டு எழுதுக.
அணி, மரம், பொன், பறவை, கல்
6. பெயர்ச்சொற்களின் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
7. மரம், பறவை, வேம்பு, நரி, மீன் முதலான சொற்களுக்குள் பொதுப்பெயர், சிறப்புப் பெயர்களை இனங்கண்டு எழுதுக.
8. சுவரொட்டியின் வகைகள் இரண்டினைக் குறிப்பிடுக.
9. சுவ்ரொட்டியின் பொது இலட்சணங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
10. பெயருடன் அல்லது வினையுடன் விகுதி சேர்த்து உருவாக்கப்படும் பெயர் எவ்வாறு அழைக்கப்படும்? உதாரணம் தருக.
11. பின்வரும் ஆக்கப்பெயர்களின் விகுதிகளைக் குறிப்பிடுக.
கொடையாளி, அறிவியல், மூலதனம், மருத்துவம்
12. கூட்டுப்பெயருக்குரிய இலக்கணப் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
13. பின்வரும் பெயர்ச்சொற்களுள் கூட்டுப்பெயர், ஆக்கப்பெயர்களை இனங்கண்டு வேறுபடுத்துக.

வானொலி, முயற்சி, தீர்வை, கட்டுரை, மணிக்கூடு

14. "கருத்துக்களுக்கான சான்றுகளை, ஆதாரங்களை முன்வைத்தல்" உரை யாடலுக்குரிய பண்புகளில் ஒன்றாகும்.

இக்கருத்தை ஏற்றுக்கொள்வீரா? காரணம் தருக.

15. உரையாடல் ஒன்றினை எழுதும்போது கவனிக்க வேண்டிய இரண்டு அம்சங்களைக் குறிப்பிடுக.
16. உரையாடலில் ஈடுபடுவதன் மூலம் பெறப்படும் பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.
17. செவ்வி காணும்போது கடைப்பிடிக்க வேண்டிய விடயங்கள் இரண்டினைக் குறிப்பிடுக.
18. செவ்வி காண்பவர் ஒருவரிடம் நீர் இனங்காணும் பண்புகள் இரண்டினைக் குறிப்பிட்டு அவற்றை விளக்குக.
19. வினைச்சொற்களின் பண்புகள் இரண்டு தருக.
20. செத்தான், கண்டான், கற்றான், உண்டான் ஆகிய வினைச்சொற்களின் வினையடிகளைக் குறிப்பிடுக.

## பரீட்சைக்கு முன் பரிசில்கள் பெறுவோம்

**மாணவரின் கல்வி முன்னேற்றத்துக்காக எங்கள் கல்விமுரசு இந்த வாரத்தில் இருந்து ஒரு புதிய நடைமுறையை அமுல்படுத்துகின்றது. ஞாயிறு, செவ்வாய் ஆகிய தினங்களில் வெளிவரும் புலமைப்பரிசில் வினாக்களுக்கான விடைகளை வினாத்தாளின் இலக்கத்துடன் தெளிவாக எழுதி அனுப்பவும், முன்னிலை பெறும் புள்ளிகளின் அடிப்படையில் கல்விமுரசு மாணவர்களுக்கான பரிசில்களை வழங்கவுள்ளது. ஒவ்வொரு வாரமும் வெள்ளிக்கிழமைக்கு முன் இவ் விடைகள் அனுப்பி வைக்கப்படவேண்டும். அனுப்பி வைக்கப்படும் பெயர் விபரங்கள் புகைப்படத்துடன் வெளிவரும். அனுப்பவேண்டிய விபரங்கள்**

1) முழுப்பெயர் :------------------------------------------------
2) முகவரி :------------------------------------------------
3) புகைப்படம் :------------------------------------------------
4) தொலைபேசி இல:------------------------------------------------

*குறிப்பு :- ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைகளில் அந்த வாரத்திற்கான சரியானவிடைகள் பிரசுரமாகும்.*

# விண்கற்கள் விழுந்த இடத்தை பேணிப் பாதுகாக்க ஏற்பாடு

இலங்கையில் 2012 ஆம் ஆண்டின் இறுதியிலும் 2013 ஆம் ஆண்டின் முற்பகுதியிலும் விண்கற்கள் விழுந்த இடத்தை வரலாற்றுச் சிறப்பு மிக்க இடமாக பாதுகாக்குமாறு விஞ்ஞானிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கையைப் பிறப்பிடமாகக கொண்ட பிரிட்டிஷ் விஞ்ஞானியான சந்திரா விக்ரமசிங்க, ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து இதற்கான கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

அதன்படி, பொலநறுவையை அண்டிய அரலகங்வில பிரதேசம் வரலாற்று முக்கியத்துவம் மிக்க இடமாக பாதுகாக்கப்பட உடனடி நடவடிக்கைகளை ஜனாதிபதி எடுத்துள்ளதாக விஞ்ஞானி சந்திரா விக்ரமசிங்க தெரிவித்தார்.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இலங்கையில் கிடைத்த விண்கற்கள், பூமியை கடந்தும் உயிர்கள் வாழக்கூடும் என்பதற்கு நிரூபணம் என்று சந்திரா விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

அரலகங்வில என்ற கிராமத்தில் விவசாயிகள் கண்டெடுத்திருந்த கற்களை நாங்கள் ஆய்வுக்குட்படுத்தி இருந்தோம். ஆனால் ஆரம்பத்தில் அவை வழமையான விண்கற்களுக்குரிய அடிப்படை தகைமைகளைக் கொண்டிருக்கவில்லை என்று கருதப்பட்டதால் பேராதனை பல்கலைக் கழக ஆய்வாளர்கள் மட்டுமன்றி எங்களாலும் அவை விண்கற்கள் தான் என்பதை ஏற்றுக்கொள்வதில் பிரச்சினைகள் இருந்தன என்றார்.

அவை ஏற்கனவே கிடைத்திருக்கின்ற விண்கற்களைவிட முற்றிலும் வேறுபட்டு இருந்தமையால் தான் இந்தச் சந்தேகம் வந்திருந்தது. ஆனால் அமெரிக்காவிலும் ஜப்பானிலும் நடாத்தப்பட்ட உயர் ரக இரசாயன ஆய்வுகளின் முடிவில் இவை உண்மையில் விண்கற்கள் தான் என்பது உறுதியாகிவிட்டது என்றும் அவர தெரிவித்துள்ளார்.

இலங்கையில் கிடைத்த இந்த விண்கற்கள் முன்னெப்போதும் வழங்காத, இன்னொரு புதிய வரலாற்று திருப்புமுனையான தகவலையும் தந்திருப்பதாக பேராசிரியர் சந்திரா விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த விண்கற்களில் நுண்ணுயிர படிமங்கள் இருப்பது வாதப் பிரதிவாதங்கள் இன்றி உறுதியாகியிருந்தது. வானிலிருந்து விழுந்த இந்த விண்கற்களில் இவ்வாறான உயிர்படிமங்கள் இருப்பது கண்டறியப்பட்டதன் மூலம் உயிர் என்பது பூமியையும் தாண்டிய பேரண்ட பண்புகளைக் கொண்டது என்பது நிரூபணமாகியிருக்கிறது என்றார்.

உயிர என்பது பூமிக்குள் மட்டும் அகப்பட்ட ஒரு விடயமல்ல என்பதுதான் இந்த விண்கற்கள் மூலம் கிடைத்துள்ள முடிவு என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

பேராசிரியர் அவர்களே, இந்தக் கற்கள் பூமியில் வந்து விழுநத பின்னர் தான் ஆய்வுக்குட்படுத்தப்பட்டன. பூமியில் வந்துசேர்ந்த பின்னர் கூட அவற்றில் இந்த மாற்றங்கள் நடந்திருக்கலாம் அல்லவா? எனறு அவரிடம் வினாவப்பட்டது.


இந்தக் கற்கள் பூமியில் நீண்ட காலத்திற்கு இருந்திருந்தால் நீங்கள் சொல்வது சரியாகப்படலாம். ஆனால் அதற்கு நீண்ட காலம் எடுக்கும். ஆனால், இங்கு நாங்கள் ஆராய்ச்சி நடத்திய கற்கள் விழுந்து சில மணிநேரங்களில் கண்டெடுக்கப்பட்டவை. அவை வானிலிருந்து விழுந்தவைதான் என்பதிலும் சந்தேகம் ஏதுமில்லை. அதில் நுண்ணுயிர் படிமங்கள் இருந்தன என்பதிலும் சந்தேகமில்லை என பிரிட்டனின் பாக்கிங்ஹொம் பல்கலைக்கழகத்தின் விண் உயிரியல் ஆய்வு நிறுவனத்தின் இயக்குநரும் முன்னணி விஞ்ஞானியுமான பேராசிரியர் சந்திரா விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

## ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் தேசிய சுதந்திர முன்னணி கூட்டு

(கொழும்பு)

தேசிய சுதந்திர முன்னணி கொழும்பில் ஊடக சந்திப்பு ஒன்றை நடாத்தியது. இதில் உரையாற்றிய முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.முஸம்மில் இந்தமுறை மாகாண சபைத் தேர்தலுக்காக, ஐக்கிய மக்கள் சுத்திர கூட்டமைப்பின் கீழ், தங்களின் உறுப்பினர்களை முன்னிறுத்த விருப்பதாக தெரிவித்தார்.

இதன்படி, மேல் மற்றும் தென் மாகாண சபைகளில் ஏழு உறுப்பினர்கள் போட்டியிடவிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.



சுனாமி தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்டு 1000 இற்கும் மேற்பட்ட தகவல்கள், படங்கள், செய்திகளைச் சேகரித்த ஓய்வுபெற்ற நூலகர் மாணிக்கம் கனேஷ் அவர்களைப் பாராட்டி 'வரலாற்றியல்' ஆவணக் காப்பாளர் என்னும் உயர் பட்டமும் விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டபோது (10)

## இலங்கையில் வர்த்தக முதலீடு ஹொங்கொங் பிரதிநிதிகள் ஆராய்வு

ஹொங்கொங்கின் வர்த்தக பிரதிநிதிகள் குழு ஒன்று கொழும்புக்கு விஜயம் செய்யவுளளது.

இந்தக் குழு இலங்கையில் காணப்படுகின்ற வர்த்தக வாய்ப்புகள் தொடர்பில் ஆராயும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக ஹொங்கொங்கில் கைத்தொழில் துறையில் சாதனைப் படைத்த தொழிற்சாலை உருவாக்குனர்கள், தங்களின் தொழில்களை இலங்கையில் ஆரம்பிக்க விரும்புகின்றனர்.

இந்த நிலையில் அதற்கான வாய்ப்புகளைத் தேடியே அவர்கள் இலங்கைக்கு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

# யாழ். போதனா மருத்துவமனையின் இன்றையநிலை சேவை நாடிச் சென்றவரின் உள்ளத்தில் இருந்து...

வடக்கின் மிகப்பெரிய மருத்துவமனையான யாழ். போதனா மருத்துவமனைக்கு தினசரி பலநூற்றுக்கணக்கான நோயாளர்கள் சேவை நாடி வருகின்றனர். அவர்களை முகாமை செய்வதில் நாளாந்தம் ஆயிரம் பிரச்சினைகள் தோன்ற வாய்ப்புக்கள் உண்டு.

இந்த மருத்துவமனைக்கு சேவை நாடி வந்த நோயாளி ஒருவரின் பார்வையில் இவ்வாறான பிரச்சினைகளை எப்படி கையாளலாம் என்பது குறித்த மனப்பகிர்வு ஒன்று இங்கு பிரசுரமாகிறது.

இது இந்த மருத்துவமனையை மேலும் மேம்படுத்த பெரிதும் உதவும் என்ற நம்பிக்கையில் அதன் பணிப்பாளருக்கு சமர்ப்பணமாகிறது.

வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்கள அனைத்தில் இருந்தும், ஏனைய மாவட்டங்களிலிருந்தும் நோயாளர்கள் இங்கு அனுமதிக்கப்படுவதோடு, அவர்களைப் பார்வையிட பலரும் பல்வேறு கஷ்ரங்களுக்கு மத்தியில் வருகை தருகின்றனர்.

உறவுகள் மீதான பாசம்தான் எமது இனத்தின் தனித்துவம். இந்நிலையில் தமது உறவுகளை பார்வையிடவரும் இவர்களை தெளிவுபடுத்தும்விதமாக எவ்வித அறிவுறுத்தல்களும் (எத்தனை மணியிலிருந்து எத்தனை மணிவரை பார்வையிட முடியும, அதற்கான நடைமுறை என்ன, மேலதிக தகவல்களை யாரிடம் பெறலாம் என்பன பற்றி) பிரதான வாயிலில் காட்சிப்படுத்தப்படவில்லை. இது மிகப்பெரியளவில் பிரதான வாயில் பகுதியில் காட்சிப்படுத்தல் வேண்டும்.

ஒருசில ஊழியர்களும், பல காவலாளிகளும் வைத்தியசாலைக்கு வரும் பொது மக்களிடம் தரக்குறைவாக நடத்தல், கடுமையான வார்த்தைப் பிரயோகங்களை பிரயோகித்தல், தனிமனித சுதந்திரத்தையும், உரிமையையும் மீறல் - மறுத்தல் என்பவற்றை தெரிந்தும், தெரியாமலும் செய்துவருகின்றனர்.

பல்வேறு நவீன வசதிகளைக் கொணட கைத்தொலைபேசிகள் மற்றும் கருவிகளை தம்மகத்தே கொண்டிருக்கும் ஒருவர் இவற்றை ஒளி/ஒலி பதிவிற்கு உட்படுத்தி தமது உரிமை மீறப்படுவதை/ மறுக்கப்படுவதை மனித உரிமை அமைப்புக்கள் மற்றும் பொலிஸ் ஊடாக நீதிமன்றங்களுக்கு கொண்டு செல்வார்களானால இவர்களின் நிலையென்ன? இவற்றை அவர்களுக்கு உரிய அறிவுறுத்தலின் ஊடாக தெளிவுபடுத்தல் வேண்டும். இது உங்கள் நிர்வாகத்தை மென்மேலும் திறம்பட நடாத்த உதவிபுரியும் என்ற நோக்குடனேயே சுட்டிக்காட்டப்படுகின்றது.

### உள்ளக பாதுகாப்பு உத்தியோகத்தர்

அதாவது வைத்தியசாலையில் இடம் பெறுகின்ற துஷ்பிரயோகங்கள், களவுகள் மற்றும் ஒழுங்கீனங்களை கட்டுப்படுத்தி சரியான முறையில் நிர்வாகத்தை நடாத்த பணியில் அமர்த்தப்பட்டிருக்கும் இவர்களின் ஒத்துழைப்பு மிகவும் உன்னதமானதுதான். ஆனால் பல சந்தர்ப்பங்களில் இவர்களின் செயற்பாடு/ நடத்தை மிகவும் மனவேதனையை தருவதோடு அருவருக்கத்தக்கதாகவும் அமைந்து விடுகின்றது.

தமது கடமையை சரியாக செய்யாவிட்டால் தனது உயரதிகாரியினாலும், தங்கள் நிர்வாகத்தினாலும் தாம் தண்டிக்கபபடுவோம் என்ற மன நிலையில் இவாகள் தமது மனச்சாட்சி மற்றும் மனித நாகரீகம் என்பவற்றை மறந்து அநாகரீகமாக நடந்து கொள்கின்றனர். இது முற்றுமுழுதாக அவர்களின் தவறும் கிடையாது. ஏனெனில் வெறும் சம்பளத்திற்காக மட்டுமே கடமையாற்றும் இவர்களிடமிருந்து நாம் பெரிதாக ஒன்றும் எதிர்பார்க்க முடியாது. ஆனால் அவர்களுக்கு சில வசதிவாய்ப்புக்களையும், பயிற்சிகளையும் வழங்குவதன ஊடாக அதனை நிவர்த்தி செய்யலாம்.

### வசதிவாய்ப்புக்கள்

இவர்களுக்கிடையிலான உள்ளக தொடர்பாடல் (Internal Network connection) வசதிகள், அதாவது எவ்வாறு ஒவ்வொரு நோய்களுக்கும் ஏற்றவாறு வட்டாரங்கள் (ward) பிரிக்கப்பட்டிருக்கின்றதோ அவற்றிற்கு ஏற்றவாறு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு அக்குழுக்களுக்கிடையே ஓர் திடமான நவீனத்துவமிக்க (Intercom, walkie talkie, computer Network) தொடர்பாடலினை ஏற்படுத்தல் வேணடும் இதன் ஊடாக நோயாளர்களை பார்வையிடவரும் பொதுமக்களை சரியான முறையில் தொடர்புபடுத்தி ஒழுங்கமைக்க முடியும்.

அத்துடன் ஒரே நபரை நான்கு அல்லது ஐந்து காவலாளிகள் இடைமறிப்பதை தவிர்ப்பதோடு, தேவையற்ற விதத்தில் அங்குமிங்கும் அலைந்து திரியும் காவலாளிகளையும் கட்டுப்படுதத முடியும்.

### பயிற்சிகள்

வைத்தியசாலைக்கு வரும் பொது மக்களிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டும். அவர்களை எவ்வாறு வழிநடத்த வேண்டும், அவர்களின் உரிமைகள் என்ன என்பன தொடர்பாக பயிற்சிகளை அந்தந்த நிறுவனங்களைக் கொண்டே தமது ஊழியர்களுக்கு வழங்கும்படி தாங்கள் அறிவுறுத்தல் வழங்கவேண்டும்.

### வைத்தியசாலை சிற்றூண்டிச்சாலை

கடந்தவாரம் பலமுறை வெளிமாவட்டத்திலிருந்து அனுமதிக்கப்பட்ட எனது நண்பர் ஒருவரை பார்வையிட வந்த நான் அவருக்கான காலை உணவினை பெறுவதற்காக மூன்று முறை வைத்திய சாலை சிற்றூண்டிசாலைக்குச் சென்றிருந்தேன். அந்த மூன்று நாட்களுமே கிட்டத்தட்ட 30 நிமிடங்கள் வரை காத்திருந்தே உணவினை பெறமுடிந்தது. ஓர் நோயாளியைப் பார்வையிட தங்களால் வழங்கப்படும் ஒரு மணிநேரத்தில் இவ்வாறான செயற்பாடு எவ்வளவு பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை தாங்கள் நினைத்துப்பாருங்கள்.

இது தொடர்பாக அங்கிருந்த காசாளரிடம் வினவியதற்கு அவர் கடுமையாக சொன்ன பதில் "நீங்கள் தான் பொறுமையாக காத்திருந்து உணவினை பெற்றுச் செல்லவேண்டும். எனது ஊழியர்கள் ஒழுங்காக கடமைக்கு வருகிறார்கள் இல்லை என்ற பிரச்சினை எனக்குத்தான் தெரியும். தேவையானால் இருந்து வாங்குங்கள் இல்லையேல் போங்கள்" என்றார். அதுமட்டுமல்லாமல் அங்கிருந்த ஊழியர் ஒருவர் பொதுமக்களோடு கடுமையாகவும் நடந்துகொண்டார்.

கூறுவிலையின் அடிப்படையில் வைத்தியசாலை சிற்றூண்டிசாலையை பெற்று நடாத்தும் இவர்கள் தங்களிடமிருந்து மானியத்தையும் பெற்றுக்கொண்டு செயற்படும் விதத்தை பார்த்தீர்களா? தங்களால் முடிநதால் தங்களுக்கு நம்பிக்கைக்குரிய ஒருவரை சாதாரணமாக அனுப்பிப் பாருங்கள.

அத்துடன் வைத்தியசாலை சிற்றூண்டிசாலையை பெரியதாக மாற்ற முயற்சிக்கவும். மேற்கூறிய விடயங்கள் யாவும் யாழ். போதனா வைத்தியசாலையை மேம்படுத்த உதவும் என்றதன் அடிப்படையியே தங்களின் கவனத்திற்கு கொண்டு வரப்படுகின்றது. பல்லாயிரக்கணக்கான மக்கள் நன்மையடையும் ஓர் வைத்தியசாலையினை திறமையாக நிர்வகிக்கும் தாங்கள் இதனை சீர்செய்ய வேண்டும். உங்களுக்கு இருக்கும் ஆயிரம் பிரச்சினைகளுக்கு மத்தியில் இது ஓர் சாதாரண பிரச்சினையாக இருக்கலாம். ஆனால் இதனை தினமும் அனுபவிக்கும் பொது மககளுக்கு இதுவே பாரிய பிரச்சினையாகும்.

# அழகிரியின் அரசியல் எதிர்காலம்
# அடுத்த நகர்வு விரைவில் தெரியும்

திமு.க தலைவரும் தனது தந்தையுமான மு கருணாநிதி சிலரின் வற்புறுத்தலுக்கும் பிளாக் மெயிலுக்கும் அடி பணிந்தே தன்னை திமு.கவிலிருந்து நீக்கியிருப்பதாக பிபிசி தமிழோசையிடம் கூறினார் மு. கருணாநிதியின் மகனும் திமு.க தென்மண்டல செயலாளருமான மு க அழகிரி.

அதேசமயம், திமு.கவின் உட்கட்சிக் கட்டுப்பாட்டை மீறியதாலேயே மு.க.அழகிரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும், அதன்படி திமு.க உறுப்பினர் உள்ளிட்ட அனைத்து பொறுப்புகளில் இருந்தும் மு.க.அழகிரி தற்காலிகமாக நீக்கப்பட்டிருப்பதாக திமுக பொதுச்செயலாளர் க.அன்பழகன் கடந்த வெள்ளிக்கிழமை அறிவித்திருந்தார்.


மு.க.அழகிரி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தது குறித்து அன்பழகன் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், கட்சிக்குள் ஏற்படும் அபிப்பிராயப் பேதங்கள், கோபதாபங்கள் இவைகளைப் பற்றி முறையிட கட்சிக்குள்ளேயே முறையாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அமைப்புகள் கட்சியின் தலைமைக் கழகத்தில் இருக்கின்ற நிலையில் தங்கள் எண்ணங்களை வெளியிடவும், கட்சியின் கட்டுப்பாட்டைக் குலைக்காமல் காப்பாற்றவும், பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் முறைப்படியுள்ள கட்சி அமைப்புகளைக் கலந்து பேசாமலும், அந்த அமைப்புகளை மதிக்காமலும், வேண்டுமென்றே திட்டமிட்டு, திமு.க அணியோடு கூட்டணி சேர நினைக்கின்ற கட்சிகளின் தலைமையைப் பற்றி அவதூறு கூறி கூட்டணி ஏற்படுவதைக் குலைக்க அழகிரி முயற்சித்ததாக குற்றஞ் சாட்டியுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் அனைத்தும் பொய்யென்றும், தவறானவையென்றும் பிபிசி தமிழோசையிடம் மறுத்த மு க



அழகிரி, கருணாநிதி மற்றவர்களின் வற்புறுத்தலுக்கு பயந்தே தன்மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாக கூறும் அழகிரி, தனது பிறந்தநாளன்று மதுரையில் வைத்து தனது ஆதரவாளர்களிடம் ஆலோசனை பெற்று அதன்படி தனது அடுத்த கட்ட நடவடிக்கையை அறிவிக்கப்போவதாகவும் தெரிவித்தார்.

# ஆப்கானிஸ்தானில் தொடரும் தற்கொலைக் குண்டுத்தாக்குதல்



ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் தற்கொலை குண்டுத் தாக்குதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தான் துருப்பினரை ஏற்றிச் சென்ற பயணிகள் பேருந்தில் ஏறிய தற்கொலைக் குண்டுதாரி, குண்டை வெடிக்க வைத்துள்ளார்.நகரத்தின் தென் கிழக்குப்பிரதேசத்தில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் பாதிப்புகள் அதிகம் என பொலிஸ்மா அதிபர் குறிப்பிட்டுள்ளார்.

துருப்பினருடன் சில பொது மக்களும் கொல்லப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ள போதிலும், மரணித்தவர்களின் எண்ணிக்கை குறித்த விபரங்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.

சம்பவத்தை நேரில் கண்ட சிலர் சிதறிய நிலையில் பல உடல்களை தாம் கண்டதாக 'ஆப்கான் இஸ்லாமிக் பிரஸ்' என்ற செய்தி ஸ்தாபனத்திடம் தெரிவித்துள்ளனர்.

ஆப்கானிஸ்தானில் நிலைகொண்டுள்ள நேற்றோ படையணியினர் இந்த வருட இறுதியில், அங்கிருந்து வெளியேறவுள்ள நிலையில், தலிபான் போராளிகள் பாதுகாப்பு படைத்தரப்பினருக்கு எதிரான பல அதிரடித் தாக்குதல்களை அதிகரித்து வருகின்றன.

உலகச் செய்திகள்

# எல்லைத்தகராறில் சிக்கித் தவிக்கிறது ஜப்பான்

தென் சீனக் கடலில் உள்ள குடியேற்றமில்லாத தீவுகளின் உரிமைப் பிரச்சினை உட்பட ஜப்பான் தனது அண்டை நாடுகளான சீனா, தென் கொரியா ஆகியவற்றுடன் தொடர்ந்து எல்லைப் பிரச்சினையில் ஈடுபட்டுவருகின்றது.

கடற்பரப்பு எல்லைகளிலும் சீனா மற்றும் ஜப்பான் ஆகிய இரு நாடுகளுக்கும் உரிமை மீறல் பிரச்சினைகள் தொடர்ந்து வருகின்றன.

இந்த நிலையில் கடந்த நவம்பர் மாதம் கிழக்கு சீனக் கடலில் தனது பாதுகாப்பு வலையத்தை ஏற்படுத்திய சீனா அந்தப்பகுதியின் மேலே பிற நாட்டு இராணுவ் விமானங்கள் பறப்பதற்குத் தடை விதித்தது. அவ்வழியே பறக்க நேரிட்டால் அவர்கள் முன்கூட்டியே தங்களிடம் அனுமதி பெறவேண்டும் என்றும் சீன அரசு குறிப்பிட்டது.

அமெரிக்கா, ஜப்பான் உட்பட சில நாடுகள் இதனை ஆத்திர மூட்டும் ஒரு நடவடிக்கையாக விமர்சித்தன. அதேபோல் அவ் வழியே தங்கள் நாட்டு இராணுவ விமானங்கள் பறப்பதற்கு முன் கூட்டியே அறிவிப்பது, தங்களை அடையாளம் காட்டிக்கொள்வது மற்றும் அனுமதி பெறுவது போன்ற சீனாவின் விதிமுறைகளைத் தாங்கள் புறக்கணிப்பதாகவும் அந்நாடுகள் தெரிவித்துள்ளன.

# அமெரிக்காவில் துப்பாக்கிச்சூடு
# மர்மமனிதன் நடாத்திய திகில் தாக்குதல்



அமெரிக்காவின் கொலம்பியா புறநகர் பகுதியான பால்டிமோரில் மக்கள் நடமாட்டம் அதிகம் உள்ள ஒரு வணிக வளாகத்தில் மர்ம மனிதன் புகுந்து, அங்கிருந்தவர்களை நோக்கி கண் மூடித்தனமாக தாக்குதல் நடாத்தினார்.

இதுபற்றி தகவல் அறிந்த பொலிஸார் வணிக வளாகத்தை சுற்றி வளைத்து எதிர்த்தாக்குதல் நடாத்தினர்.இந்தத் துப்பாக்கிச் சூட்டில் மூவர் மரணமடைந்துள்ளனர். அதில் ஒருவன் அருகில் துப்பாக்கி மற்றும் வெடிமருந்து மீட்கப்பட்டன. எனவே, அவர் தாக்குதல் நடாத்திய நபராக இருக்கலாம் என்று கூறப்படுகிறது. இந்தத் தாக்குதலுக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணைகளை நடாத்தி வருகின்றனர்.

தற்போது வணிக வளர்கம் முழுவதும் பாதுகாப்பாக இருப்பதாகவும், துப்பாக்கிச் சூடு நடந்த போது உயிருக்குப் பயந்து கடைகளிலும், உணவகங்களிலும் பதுங்கிய மக்கள் பாதுகாப்பட வெளியேற்றப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அமிர்தலிங்கம்....

ஏதும் செய்ய வேண்டும், பேசிக் கொண்டு இருக்கும் இடத்தே புகுந்து சந்தேகத்துக்குரியவர்களிடம் இருந்து அமிர்தலிங்கம் ஐயாவையும், சிவா ஐயாவையும், யோகேஸ்வரன் அண்ணனையும் காப்பாற்ற வேண்டும் என்று கேட்டேன். என் னைப் பார்த்து கோபமாகச் சொன் னீர்கள் "சந்திக்க வந்தவர்கள் வெளியே போகுமட்டும் எதுவும்செய்யக் கூடாது. நீங்கள் சும்மா இருங்கோ" என்று.
மங்கையற்கரசி அம்மா என்னைக் கேட்டா, "என்னடா கௌரி உன்ரை முகம் பதட்டமாய் கிடக்கு.

அடிக்கடி வந்து வந்து அவதிப்படுகிறாய், யார்மேலே வந்து கதைக்கிறது" என்று கேட்டார். நீங்கள் சொன்னீர்கள், "அது ஏதோ தேவைக்கு யாரே வந்து கதைச்சுக் கொண்டு இருக்கிறார்கள்" என்று கூறி கீழ் வீட்டின் உள்ப்பக்கம் சென்று விட்டீர்கள்.

நான் ஏமாற்றத்துடன் திரும்பிப் போய் பாதுகாப்பு உத்தியோகத்தர் நிசங்காவிடமும், துணைப்படை அதிகாரி சத்தியமூர்த்தியிடமும் நீங்கள் சொன்னதைச் சொன்னேன். அவர்கள் சலிச்சுப் போனார்கள். நிசங்கா மேல் வீட்டுக்கு ஏறிப்போய் நின்றார். நாம் முன் முற்றத்தில் நின்றோம். திட்டமிட்டு வந்தவர்கள் எமது தலைவரை தியாகி ஆக்கி அவரது இரத்தத்தை ஆறாகப் பெருக வைத்து விட்டார்கள்.

இன்று வரை அதில் சம்பந்தப்பட்டவர்கள் நாம் மனத்துன்பத்தில் உழல்வதும், மனச்சாட்சியுடன் போராடுவதும், வாழ்வின் மிகுதிக் காலத்தை நிம்மதி இழந்து வாழப்போவதும் யாரால். நீங்கள் சொன்னதை நான் செய்தது தான் எமது தவறு. உங்கள் சொல்லைக் கேட்காமல் எமது எண்ணப்படி செயற்பட்டு இருந்தால் எமது தலைவர் அமிர்தலிங்கம் ஐயா இன்றும் எம்முடன் உயிருடன் இருந்து தமிழ் இனத்தை சரியான வழியில் வழிநடத்தியிருப்பார்கள், ஏகப்பிரதிநிதித்துவம் இருந்திருக்காது. மீண்டும், தொடர்ந்து உங்கள் சொற்படி நாம் தவறாக வழி நடக்க வேண்டும் என எதிர்பார்த்தால் அது யார் மடமைத்தனம்? நாம் கூறியவற்றிற்கு இன்னும் அத்தாட்சியாக திருமதி மங்கையற்கரசி அம்மாவும், ந.சத்தியமூர்த்தி, நிசங்க ஆகியோர் இருப்பது எமது மனத்தெம்பு. தலைவரின் மரண சாட்சிப் பத்திரமும் நீதவான் அறிக்கையும் உண்மையை வெளிப்படுத்தும். நாம் கட்சிக்கும் கட்சி இலட்சியத்திற்கும் தான் விசுவாசமாய் இருக்கிறோமே தவிர உங்களுக்கு அல்ல என்பதை புரிந்து கொள்ள வேண்டும். எம்மைச் சுட்டி காட்டி துரோகிகள் என்று சொலவதை தமிழினம் ஏற்றுக் கொள்ளுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

89 யூலை 13இல் என்ன நடந்தது என்பதை அமிர்தலிங்கம் ஐயா குடும்பத்துக்கு அவர்கள் கேட்டுக்கொணடமைக்கு அமைய சம்பவம் நடந்த வாரத்திலேயே நாம் சொல்லி விட்டோம். ஆனால் வெளியாட்களுக்கு சொல்லவில்லை. 2002ஆம் ஆண்டு நடுப்பகுதியில் எமது கட்சிக்கிளை கனடாவின், ஸ்காபிரோ நகரில் அமிர்தலிங்கம் ஐயாவுக்கு பெரிய அளவில் நினைவஞ்சலிக் கூட்டம் ஒன்றை நடாத்தியது. தியாகியின் , குடும்பம் அவ்விழாவுக்கு வந்திருந்தது. இந்தியாவில் இருந்து குமரி அனந்தன், டி.பி.எஸ் ஜெயராஜ் (பத்திரிகையாளர்), இலங்கையில் இருந்து வந்த வீ.ஆனந்தசங்கரி அவர்களும் அமிர்தலிங்கம் ஐயாவின் நினைவுகளையும் அவரின் அரசியல் பணிபற்றியும் பேசினார்கள். நீங்களும் அந் நினைவுக் கூட்டத்துக்கு வந்திருந்து அரசியல் நிகழ்வு பற்றி பேசினீர்கள். கூட்டம் முடிந்து ஒருவாரத்தில் திருமதி மங்கையற்கரசி எம்மிடமும் கனடாவில் இருக்கும் குமாரகுல சூரியரிடமும் (இணுவில் சூரி) தன்னுடைய கணவரின் கொலைக்கு யார் காரணம் என்றும் யார் அந்தத் துரோகி என்றும் தெளிவு படுத்தியதை மீள நினைவு படுத்துகின்றேன். பல சம்பவங்களை நாம் தாண்டி வந்திருக்கிறோம். எமது கட்சியின் எத்தனையோ தலைவர்களையும் கட்சித் தொண்டர்களையும் பலி கொடுத்திருக்கின்றோம். ஆனால் இன்று வரை பலியான தியாகிகளை இழிவு படுத்தியோ, கொலையை நியாயப்படுத்தியோ, நாம் வாழவும் இல்லை.

இளைஞர்களுக்கு அரசியலில் இடம் விட்டு அவர்களை ஊக்கு வித்து வளர வழிசெய்யவேண்டும் என 2013 டிசம்பர் மாதம் 14ஆம் திகதி மாட்டீன் வீதியில் எம்மை அழைத்து கூட்டம் போட்டபோது சொல்லியுள்ளீர்கள். நாம் ஏற்றுக் கொள்கிறோம். 1977ஆம் ஆண்டில் இளைஞர் பேரவையில் இருந்த போது பலமாகச் சொன்னோம். ஏன் 1989ஆம் ஆண்டில் அமிர்தலிங்கம் ஐயாவின் மறைவின் பின் சொன்னோம். நாம் இப்போதும் அதே அர்ப்பணிப்புடன் இருக்கின்றோம். உங்களுக்கு ஒரு விண்ணப்பம். இளைஞர்களுக்கு வழிவிட எத்தனை வயதுக்கு மேற்பட்டவர்கள் தற்போது வகிக்கும் பதவிகளை விட்டு விலக வேண்டும் என அறிவிக்க வேண்டும். நான் உங்களைத் தொடர்ந்து என்னிடம் இருக்கும் பதவியை விட்டு விலகச் சித்தமாக இருக்கின்றேன். நீங்கள் காட்டும் முன்மாதிரிக்காகக் காத்திருக்கின்றேன்.

எம் மீது உள்ள காழ்ப்புணர்வின் காரணமாகவும் சொந்த நலனுக்காகவும் தான் எம் மானிப்பாய்க் கிளையை கலைத்துள்ளீர்கள் எனவும், வலி தென் மேற்கு பிரதேச சபை நிர்வாகத்தை ஜனநாயக வழிமுறைப்படியும், நல்ல சேவைகளை இப் பகுதி மக்களுக்கு வழங்கவும், செயற்படவிடாது தடுக்கும் நோக்கமாகவும் செயற்படுவதாக வெளிப்படுத்தி எமது நிலைப்பாட்டை இத்தால் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வண்ணம்
(க.கௌரிகாந்தன்)
நவாலியூர்
பிரதி: 1. செயலாளர், மானிப்பாய்த் தொகுதிக் கிளை
2. மற்றும் உறுப்பினர்கள்

# யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மிகக்கூடுதலான அளவில் பார்தீனியம்

## மாகாண விவசாயப் பணிப்பாளர்

வடக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம், வவுனியா, கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் பார்தீனியச் செடிகள் வளர்ந்துள்ளமை விவசாய நிலையங்களில் இனங்காணப்பட்டுள்ளன.

வடமாகாணத்தில் 873 ஏக்கர் நிலங்களில் இவை இனங்காணப்பட்டுள்ள போது யாழ்ப்பாண மாவட்டத்திலேயே மிகக்கூடுதலான அளவில் 763 ஏக்கரில் இது காணப்பட்டதாகவும் இதில் 75 ஏக்கர் அழிக்கப்பட்டுள்ளதாகவும் மாகாண விவசாயப் பணிப்பாளர் என். சிவகுமார் தெரிவித்துள்ளார்.

வவுனியாவில் 107 ஏக்கரிலும் கிளிநொச்சியில் ஒரு ஏக்கரிலும் முல்லைத்தீவில் 2 ஏக்கரிலும் பார்தீனியம் உள்ளமையும் இதில் வவுனியாவில் 33 ஏக்கரிலும் கிளிநொச்சியில் அரை ஏக்கரிலும் முல்லைத்தீவு மாவட்டத்தில் ஒரு ஏக்கரிலும் பார்தீனியம் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பார்தீனியத்தை ஒழிப்பது தொடர்பாக விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் சுவரொட்டி விளம்பரங்கள் விவசாயிகளுக்கான அறிவுறுத்தல்கள் அனைத்து மாவட்டங்களுக்கும் வழங்கப்பட்டு வந்தபோதிலும் தமது சொந்த நிலங்களில் காணப்படும் பார்தீனியத்தை அழிக்க பொது மக்களும் விவசாயிகளும் உரிய செயற்பாடுகளை மேற்கொள்ளவில்லை எனவும் தெரிவித்தார். (63)

## உள்விவகாரங்களில்....

தமது கருத்துக்களை ஒரு தலைப்பட்சமாக விடுதலைப்புலி அனுதாபிகளுடனும், புலம்பெயர்ந்த தமிழர்களுடனும் பேசுகிறார்கள். கடந்த சில வருடங்களில் நாம் மேற்கொண்ட முன்னேற்றங்களை அவர்கள் அசட்டை செய்கின்றனர்.

அண்மைய நாட்களாக பல படைமுகாம்கள் அகற்றப்பட்டுள்ளன. தேசிய பாதுகாப்பைக் கருத்திற்கொண்டே சில முகாம் கள் அகற்றப்படாமலுள்ளன. சட்டம் மற்றும் ஒழுங்கை பொலிஸாரே கையாள்கின்றனர்.

வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழ்பேசும் பொலிஸார் இணைக்கப்பட்டு பொலிஸ் நிலையங்களும் திறக்கப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கு மாகாண சபைக்கு...

ஊடகங்களிடம் கருத்துத் தெரிவித்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், ஜனாதிபதியிடம் வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரன் நேரடியாக பல தடவைகள் கேட்டுக்கொண்டும் வடக்கு மாகாணசபையின் நிர்வாகத்தில் இருக்கின்ற முட்டுக்கட்டைகள் இன்னும் தீர்க்கப்படவில்லை என்று தெரி வித்தார்.

வடக்கில் மக்களால் தெளிவாக அளிக்கப்பட்ட ஜனநாயக ஆணையை அரசாங்கம் நிராகரித்து வருவதாகவும் சம்பந்தன் தெரிவித்தார்.

நாட்டின் பாதுகாப்புச் செயலர் கோத்தாபய ராஜபக்ஷ, அண்மையில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயரை சந்தித்துப் பேசியிருந்தார்.

அதன்போது, சிறைகளில் வாடும் தமிழ் அரசியல் கைதிகள் பற்றி ஆயர் சுட்டிக்காட்டியிருந்தார்.

இந்தப் பிரச்சினை பற்றி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனிடமும் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடமும் பேசியிருப்பதாக கோத்தாபய ராஜபக்ஷ கூறியதாக ஆயர் கூறியிருந்தார்.

அதுபற்றி தெரிவித்த சம்பந்தன், அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கு அரசாங்கம் விரும்பினால், அதனை அவர்கள் தாராளமாகச் செய்யமுடியும், அதற்கு எங்களின் சம்மதத்தைக் கேட்க வேண்டியதில்லை தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்கள் மீது வழக்கு இல்லாவிட்டால், அவர்களை விடுதலை செய்ய வேண்டும் என்பதே தங்களின் நிலைப்பாடு என்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் கூறினார்.

## இந்திய...

பணிகள் மேற்கொள்ளப்பட்டு, தற்போது பளை வரையிலான பணிகள் நிறைவடைந்துள்ளன. விரைவில் யாழ்ப்பாணம் வரை யாழ்.தேவி புகையிரத சேவை இடம்பெறவுள்ளது.

இந்திய வீட்டுத் திட்டத்தின் கீழ் 2012ஆம் ஆண்டு வரை யிலான காலப்பகுதியில் முன்னோடி செயற்திட்டமாக ஆயிரம் வீடுகள் நிர்மாணிக் கப்பட்டு நிறைவடைந்துள்ளன.

அதனைத் தொடர்ந்து 43 ஆயிரம் வீடுகளை நிர்மாணிக் கும் பணியின் கீழ் இதுவரையில் 10,250 வீட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளன.

வெகுவிரைவில் இந்தியாவின் உதவியுடன் அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் கைத்தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்படவுள்ளன. இதேபோன்று வடகடல் வலைத் தொழிற்சாலைக்கான உதவிகள் கட்டம் கட்டமாக வழங்கப்பட்ட நிலையில் அதனுடைய உற்பத்தி 5 மடங்கால் திறன் அதிகரிக்கப்பட்டுள்ளது. என்றார்.

கடந்த கால யுத்தம் காரணமாக கிளிநொச்சி, முல்லைத் தீவுப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட சிறு வாணிபம் மற்றும் நடுத்தர வாணிபதாரிகள் 1320 பேருக்கு அவர்களின் தொழில் முயற்சிகளுக்காகவும் நன்கொடைகள் வழங்கப்பட்டுள்ளன.

அத்துடன், வவுனியா வைத்தியசாலையில் இருநூறு படுக்கைகளுடன் கூடிய மருத்துவ விடுதி, இந்தியா அரசின் நிதி உதவியுடன் நிர் மாணிக்கப்பட்டு நிறைவடையும் நிலையிலுள்ளது.

இதற்கு மேலாக யாழ்ப் பாணத்தில் கலாசார நிலையம், மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலய திருத்தப்பணிகள், யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானம் புனரமைப்புப் பணிகள், மொழி ஆய்வு கூடம், கைவினை கிராமம் என பல அபிவிருத்தி செயற்திட்டங்களும் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்படவுள்ளன எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இடமாற்றம்

வடமாகாண சமூகசேவைகள் திணைக்களத்தில் அபிவிருத்தி அலுவலராகக் கடமை புரிந்த திருமதி சுபரசினி கோகுலன் இடமாற்றம் பெற்று வடமாகாண மீன்பிடி அமைச்சில் கடமையைப் பொறுபேற்றுக்கொண்டுள்ளார்.

## வடமாகாண...

நெருக்கடிகள் குறித்து ஆராய்ந்து தீர்வுகளை எட்டும் நோக்குடனும் இக்கருத்தரங்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்தக் கருத்தரங்கில் அவர் தொடர்ந்து உரை நிகழ்த்தும் போது வடக்கு மாகாண பிரதம செயலாளரை மாற்ற வேண்டும் என்று வடக்கு முதலமைச்சரால் கோரப்பட்டிருக்கிறதே தவிர அதற்கான சரியான காரணம் எதுவும் இதுவரை முன்வைக்கப்படவில்லை. குறித்த அதிகாரி மீது ஒழுங்கீனம், மோசடி, கடமை புறக்கணிப்பு போன்ற எந்தவிதமான குற்றச்சாட்டுக்களும் சுமத்தப்படவில்லை.

வெறுமனே தமது அரசியல் காரணங்களுக்காக பிரதம செயலாளரை அகற்ற வேண்டும் என்று கோருவதை எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறான அரசியல் காரணங்களுடனான அழுத்தங்கள் வடக்கில் மட்டுமல்ல, தெற்கிலும் ஏற்படுவதுண்டு.

கொழும்பு கடுவல்ல என்ற பகுதியில் கடமைபுரியும் நிர்வாக சேவை அதிகாரி ஒருவரை அகற்றும்படி சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் அழுத்தம் கொடுத்தார். அதேபோல மண் முனைப்பற்றுப் பகுதியிலும் பௌத்த பிக்கு ஒருவர் அப்பகுதி நிர்வாகசேவை அதிகாரியை மாற்றும்படி வற்புறுத்தி வந்தார். இதேமாதிரியான அழுத்தம் கலவான பிரதேசத்திலும் ஏற்பட்டது.

இவை அனைத்தும் எமது கவனத்துக்கு கொண்டு வரப்பட் டது. இவ்வாறான சவால்களை எதிர்கொள்வதற்கு நிர்வாக சேவை அதிகாரிகள் எவரும் வீதியில் இறங்கிப் போராடப் போவதில்லை. நாம் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் புரிந்துணர்வுடனும், இணக்கப்பாட்டுடனும் கூடிய சாத்தியமான அணுகுமுறைகளுக்கூடாகவே இந்த விடயத்தை கையாளுவோம்.

அதிகாரிகள் நாட்டின் இதயம் போன்றவர்கள். பிரதேச செயலகங்கள் முதல் ஜனாதிபதி செயலகம் வரை நிர்வாக விடயங்களை இந்த அதிகாரிகளே கவனித்து வருகின்றனர் என்றும் அவர் தெரிவித்தார்.

நேற்றைய நிகழ்வில், வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஷ், ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் மற்றும் வடக்கின் அனைத்து மாவட்டங்களினதும் அரசாங்க அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலர்கள், உதவிப் பிரதேச செயலர்கள் உட்பட வடக்கின் அனைத்து நிர்வாக சேவை அதிகாரிகளும் பங்கு கொண்டனர்.

## வீட்டுச்சுவர்...

ந்த சுவரினுள் அகப்பட்டு படுகாயமடைந்த நிலையில் மருதங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு சென்ற நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இச்சம்பவம் குறித்து பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், நேற்று மாலை மரண விசாரணைகள் இடம்பெற்றன. (116)

## காணாமற்போனோர்...

கடந்த 18 ஆம் திகதி தொடக்கம் 21 ஆம் திகதி வரை கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்காக 150 பேருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும் 500 இற்கும் மேற்பட்டவர்கள் முறைப்பாடுகளை பதிவு செய்வதற் காக அங்கு வருகைதந்தால் பிறிதொரு நாளில் மீண்டும் விசாரணை நடத்தப்படும் என அவர்களுக்கு உறுதியளிக்கப்பட்டதாக அவர் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்ட மக்களிடம் பதிவு செய்யப்பட்ட தகவல்களை ஆவணப்படுத்தும் நடவடிக்கை தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதில் மேலதிக விசாரணை தேவைப்படும் ஆவணங்களை அடுத்த வாரமளவில் சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கவுள்ளதாக காணாமற்போனவர்கள் தொடர்பான முறைப்பாடுகளை விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அறிவித்துள்ளது.

சட்டமா அதிபர் திணைக் களத்தின் ஆலோசனைகள் கிடைக்கப்பெற்றதும் அடுத்த கட்ட நடவடிக்கை ஆரம்பிக்கப்படும் என ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாற்றுவலுவுள்ளோருக்கு தொழில் பயிற்சி

## பதிவு செய்யுமாறு அறிவிப்பு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மாற்றுவலுவுள்ளவர்களுக்கான தொழில் பயிற்சிகளை நடத்துவதற்கான ஒழுங்குகளை சமூகசேவைகள் திணைக்களம் மேற்கொண்டு வருகின்றது.

குறித்த பிரதேச செயலர் பிரிவில் உள்ள மாற்றுவலு வுள்ளவர்களுக்கான அவர்களால் மேற்கொள்ளக் கூடிய தொழில் முயற்சிகளுக்கு வேண்டிய பயிற்சிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

தொழில் முயற்சிகளில் ஈடுபட விரும்பும் மாற்றுத் திறனாளிகளில் அவர்கள் விரும்பும் தொழில் சம்பந்தமான பூரண பயிற்சிகளை வழங்கி அவர்களுக்கு வேண்டிய ஆலோசனைகள் மற்றும் உதவிகள் என்பன இங்கு வழங்கப்படவுள்ளன.

எனவே இப்பயிற்சி நெறியில் கலந்து பயிற்சிகளைப் பெற விரும்பும் மாற்றுத் திறனாளிகள் பிரதேச செயலக சமூகசேவை உத்தியோகத்தருடனோ அல்லது கிராம அலுவலர் பிரிவுகளுக்கு நியமிக்கப்பட்ட பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தருடனோ தொடர்பு கொண்டு தங்களது விபரங்களை உடனடியாக பதிவு செய்து கொள்ளுமாறு பிரதேச செயலகத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது. (63)

## புதிய நிர்வாகம் தெரிவு

(கரவெட்டி)

கரவெட்டி கிழக்கு வளர்மதி சனசமூக நிலையத்தின் 2014 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதில் சமாசத்தின் தலைவர் கொ.குலசிங்கம், சமாசச் செயலாளர் கு.மகாலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். இதன்போது புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டது.

செயலாளர் - வே. சுதன், தலைவர் சி.பிரகாஸ், உப தலைவர் கா.ஞானசூரியன், பொருளாளர். ஜெ.ரஜீவன், உப செயலாளர் ஆனந்தராசா, நூலகர் சு. இராசையா, போஷகர் பாஸ்கரன் ஆகியோரும், நிர்வாக சபை உறுப்பினர்களாக மகாதேவன், தம்பித்துரை, இரகுநாதன் ஆகியோர் தெரிவுசெய்யப் பட்டனர். (18)

## இலங்கைக்கு எதிராக மூன்றாவது தீர்மானம்

### அமெரிக்கா அறிவிப்பு

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் வரும் மார்ச் மாதக் கூட்டத்தொடரில், இலங்கைக்கு எதிராக அமெரிக்கா 3 ஆவது தீர்மானம் ஒன்றை கொண்டு வரவுள்ளதாக, இலங்கை அரசாங்கத்துக்கு அமெரிக்கா அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜேசிஸன் இதுபற்றி தமக்குத் தெரியப்படுத்தியதாக வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

## பால்மாக்களின்...

கிராம் பால்மா விலை அதிகரிப்பின் பின்னர் 425 ரூபாவாகவும், 810 ரூபாவாக விற்பனை செய்யப்படும் பால்மா விலை அதிகரிப்பின் பின்னர் 1060 ரூபாவாகவும் விற்பனை செய்யப்படும்.

இந்த மாத முடிவில் பால்மாக்களின் விலை அதிகரிப்பிற்கு அரசாங்கம் இணக்கம் தெரிவித்திருக்காவிடின் தாம் மாற்று நடவடிக்கைகளை கையாளப் போவதாகவும் கம்பனிகள் தெரிவித்துள்ளன.

## இரண்டு...

அண்மையில் இலங்கைக்கு மேற்கொண்ட விஜயம் தொடர்பிலும் நவநீதம்பிள்ளை தமது அறிக்கைகளில் குறிப்பிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமை பாதுகாப்பு தொடர்பிலான பொறிமுறையை உரிய முறையில் அமுல்படுத்தி, உரிமை களை உறுதிப்படுத்துவதே பிரதான நோக்கம் என நவநீதம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

# வெளிவிவகாரச் சேவையில் இவ்வாரம் முக்கிய மாற்றம்?

வெளிவிவகாரச் சேவையில் இந்த வாரம் மாற்றங்களைச் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, முக்கியமான இடங்களில் உள்ள தூதுவர்கள் மாற்றப்படவுள்ளனர். வொஷிங்டனில் உள்ள தூதுவர் ஜாலிய விக்கிரமசூரிய கனடாவுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார். புதுடில்லிக்கான தூதுவர் பிரசாத் காரியவசம், வொஷிங்டனுக்கான தூதுவராக நியமிக்கப்படவுள்ளார்.

ஒட்டாவாவில் உள்ள எசல வீரக்கோனுக்கு உயர் பதவி ஒன்று வழங்கப்படவுள்ளது. நியுயோர்க்கில் உள்ள ஐ.நா.வுக்கான நிரந்தரப் பிரதிநிதி பாலித கொஹன்னவும் இடம் மாற்றப்படவுள்ளார்.

எனினும் ஐ.நா.வுக்கான தூதுவர் பதவியில் இருந்து தான் அகற்றப்படவுள்ளதாக வெளியான செய்திகளை பாலித கொஹன்ன நிராகரித்துள்ளார். ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவையில் இலங்கைக்கான எதிரான தீர்மானத்தை தடுக்கத் தவறியதற்காகவே பாலித கொஹன்ன, ஐ.நா. நிரந்தரப் பிரதிநிதி பதவியில் இருந்து நீக்கப்படவுள்ளதாக ஊடகங்கள் தகவல் வெளியிட்டிருந்தன. எனினும் தாம் இதுபற்றி அறிந்திருக்கவில்லை என்றும் பாலித கொஹன்ன தெரிவித்துள்ளார்.

# காணிப்பிரச்சினைகளைத் தீர்க்க நீதிமன்ற அதிகாரங்களுடன் குழு

## அரசாங்கம் தீர்மானம்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியாகக் காணப்படும் காணிப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக நீதிமன்ற அதிகாரங்களுடன் கூடிய குழுவொன்றை நியமிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

காணிப் பிரச்சினைகளை தீர்த்து அவற்றுக்கான உறுதிப் பத்திரங்களை வழங்குவதில் ஏற்பட்ட சிக்கல் நிலையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டதாக மேலதிக நில அளவையாளர் நாயகம் பீ.எம்.பீ.உதயகாந்த தெரிவித்துள்ளார்.

இதற்கமைய நில அளவைகள் தொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.


காணிப் பிரச்சினை தொடர்பில் ஆராய்வதற்காக ஜனாதிபதி நியமித்த குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.

இதற்கமைய புதிய சட்ட மூலத்தை தயாரித்து நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ளதாக மேலதிக அளவையாளர் நாயகம் கூறியுள்ளார்.

எதிர்காலத்தில் காணிகளுக்கான உரிமைப்பத்திரம் மற்றும் உறுதிப்பத்திரம் ஆகிய வற்றை பதிவு செய்வதற்கும் உத்தேசித்துள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மெய்யான நல்லிணக்கம் ஏற்படுத்தப்படவேண்டும்

## இந்தியா தெரிவிப்பு



இலங்கையில் மெய்யான நல்லிணக்கம் ஏற்படுத்தப்பட வேண்டுமென இந்தியா கோரியுள்ளது. இலங்கையின் அனைத்து தரப்பினரும் இணக்கப்பாட்டுடன் ஆக்கபூர்வமான முறையில் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முனைப்புக்காட்ட வேண்டுமென் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் வை.கே. சின்ஹா தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் 65 ஆம் குடியரசு தின நிகழ்வுகளை முன்னிட்டு நேற்றையதினம் கொழும்பில் நடைபெற்ற நிகழ்வில் பங்கேற்று உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

யுத்த நிறைவின் பின்னர் நல்லிணக்கத்தை ஏற்படுத்த அரிய வாய்ப்பு கிட்டியுள்ளதாகத் தெரிவித்துள்ளார். கடந்த செப்ரெம்பர் மாதம் வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்பட்டமை வரவேற்கப்பட வேண்டியதாகும் என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையில் மிகச் சிறந்த உறவு காணப்படுவதாகத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் ஏற்படுத்த இந்தியா எந்த நேரத்திலும் உதவத் தயார் என அவர் குறிப்பிட்டுள்ளார். இலங்கை இந்திய மீனவர் பிரச்சினை மிகவும் நிதானமான முறையில் கையாளப்பட வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

# விபத்தில் காயமடைந்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மனோகராச் சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த மாசியப்பிட்டியைச் சேர்ந்த அடிசன் இராசகுமார் (வயது - 54) என்பவர் மரணமடைந்ததாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையப் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் இரவு இவரின் மோட்டார் சைக்கிளும் கன்டர் ரக வாகனமும் நேருக்குநேர் மோதியதாகவும் பொலிஸார் கூறினர்.

படுகாயமடைந்தவரை உடனடியாக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்தபோதிலும், அவர் மரணமடைந்ததாகவும் பொலிஸார் கூறினர். இதன்போது, கன்டர் ரக வாகனத்துடன் தப்பிச்சென்ற சாரதியை பொலிஸார் தேடி வருகின்றனர். இது தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

(25)

# மக்களை அச்சுறுத்தி பணம் பறிப்பு விளக்கமறியலில் பொலிஸார்

(வவுனியா)

மக்களை அச்சுறுத்தி பணம் பறித்தார் என்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட வவுனியா பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் உத்தியோகஸ்தரை எதிர்வரும் 7 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு வவுனியா பதில் நீதிபதி எம். சிற்றம்பலம் உத்தரவிட்டுள்ளார்.

வவுனியா பஸ் நிலைய பொது மலசலகூட பகுதியில் மதுபோதையில் நின்ற சம்பந்தப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர், அங்கு வந்தவர்களிடம் தான புலனாய்வுப் பிரிவை சேர்ந்தவர் எனவும் தனக்கு பணம் தருமாறும் கூறி அச்சுறுத்தியதுடன் அடையாள அட்டைகளையும் சிலரிடம் பறிமுதல் செய்துள்ளார்.

இது தொடர்பில் வவுனியா பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து சம்பவ இடத்திற்கு சென்ற பொலிஸார் மது போதையில் மக்களை அச்சுறுத்தி பணம் பெற்றார் என்ற சந்தேகத்தில் குறித்த பொலிஸ் உத்தியோகஸ்தரை கைது செய்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது அவரிடம் இருந்து பொதுமக்களின் நான்கு அடையாள அட்டைகள் மற்றும் 5,000 ரூபா பணமும் கைப்பற்றப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தானர்.

இதனையடுத்து குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் வவுனியா பதில் நீதிபதி எம்.சிற்றம்பலம் முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர். இதன்போது அவரை எதிர்வரும் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்திரவிட்டுள்ளார்.

# மன்னார் மனித புதைகுழி குறித்து பக்கச்சார்பற்ற விசாரணை

## கோரிக்கை விடுக்கிறது ஜே.வி.பி.

மன்னார் திருக்கேதீஸ்வரம் பகுதியில் கண்டெடுக்கப்பட்டுள்ள எலும்புக் கூடுகள், மனித எச்சங்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென ஜே.வி.பி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னா மாந்தை திருக்கேதீ பகுதியில் இது வரை 4 மண்டையோடுகள், மனித எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளதா ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மாத்தளையில் கண்டெடுக்கப்பட்ட 150 எலும்புக் கூடுகள் மனித எச்சங்களைப் போல் இதுவும் மனித சம்ஹாரம் இடம்பெற்றிருப்பதை எடுத்துக்காட்டுகின்றது.

தெற்கில் இருந்தாலும் வடக்கிலிருந்தாலும் புதையுண்டிருக்கும் மனிதர்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டும். சிறுபிள்ளைகளது என்று சந்தேகிக்கும் எலும்புக் கூடுகளும் இதிலடங்கும். தலையில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்து கொலை செய்யப்பட்டிருக்கலாமென கருதக்கூடிய வகையில் மண்டை ஓடுகளில் ஓட்டைகள் காணப்படுகின்றதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இப்பகுதி காலத்துக்குக் காலம் பல தரப்பினரால் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் அரச தரப்பு, புலிகளாலோ அல்லது இந்திய அமைதிகாக்கும் படையினரால் கொலை செய்யப்பட்ட சிவிலியன்களின் எலும்புக்கூடுகளாக இவை இருக்கலாமென தெரிவிக்கும் அதே வேளை, ஏனைய தரப்புகள் இதற்கு அரசாங்கமே பொறுப்பு கூற வேண்டுமென தெரிவித்துள்ளது.


## வன்னி மாவட்டத்திற்கான பத்திரிகை விநியோகஸ்தர் தேவை

வன்னி மாவட்டத்தின் சகல பகுதிகளுக்கும் பத்திரிகை விநியோகம் செய்யக்கூடியவர்கள் உடனடியாக தேவைப்படுகின்றனர்.

தகைமைகள் - 45 வயதிற்கு உட்பட்டவராக, உடல் ஆரோக்கியம் உள்ளவராக இருத்தல் வேண்டும், சொந்தமாக மோட்டார் சைக்கிள் வைத்திருப்பவர்கள், சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவர் தினமுரசு காரியாலயத்திற்கு அலுவலக நேரத்தில் நேரில் வரவும்.

விநியோக முகாமையாளர்,
'தினமுரசு' 373, பிரதான வீதி
யாழ்ப்பாணம்.

(இ)


## மரண அறிவித்தல்



### கறுப்பையா துரைராசா

கொழும்புத்துறையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட கறுப்பையா துரைராசா நேற்று காலமானார்.

அமரர்களான கறுப்பையா, அன்னம்மா தம்பதிகளின் புதல்வரும், யோகராணியின் அன்புக்கணவரும், யேசுராசா, அன்புக்கரசி, இளங்கோ, யோகராசா, சிவா, ரஞ்சமலர், கோவிந்தராஜன், இந்திரன், நாதன், செல்லா, சுரேஸ், காமராஜ், மயூதினி, டிடோ ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 3மணியளவில் இலக்கம் 84, கொழும்புத்துறை வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அன்னாரது இல்லத்தில் இடம்பெற்று, துண்டி எழிலூர் வேளாங்கன்னி மாதா [illegible] ந்தில் நல்லடக்க ஆராதனைகள் இடம்பெற்று குருந[illegible] சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவி தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் மகன்
இளங்கோ (ரீகன்)
தொ.பே 077 945 5222

இல.84, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(இ)

இப்பத்திரிகை இல.373 பிரதான வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் அமைந்துள்ள அற்புதன் அச்சகத்தில் 2014 ஜனவரி 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.